# வெற்றிலைக் கொடி

## 1

உடம்பு முழுவதும் அடர்த்தியாய் துணி போர்த்தியது போல, எறும்புகள் ஏறிக் கொண்டிருந்தன. பிரசாத் இடக்கையால் வலக்கை எறும்புக்கூட்டத்தை துடைத்துவிட்டான். ஒரு எறும்புகூட நகரவில்லை. எதுவும் சாகவில்லை. துடைக்கப்பட்டதே தெரியாமல் அவை சாரை சாரையாய் அவன் உடம்பின்மீது நகர்ந்து கொண்டிருந்தன வயிறு, மார்பு, கழுத்து, பிடரி, முகவாய், கன்னம், நெற்றி என்று உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை எறும்புகள் மொய்த்திருந்தன.

மறுபடியும் கலைக்க முயற்சி செய்தபோது இது கனவு என்று பிரசாத்திற்கு தெரிந்துவிட்டது.

இதென்னடா இது. எறும்பு மொய்க்கிற கனவு, பிரசாத் வியந்தான். கனவு அறுபடவில்லை. ஆனாலும் அது கனவு என்று தெரிந்துவிட்டது,தெரிந்து ஒரு வியப்பும் ஏற்பட்டுவிட்டது. கனவைப்பற்றி வியந்து கொண்டே கனவை அனுபவிக்க முடிந்தது.

எறும்புகள் கடிக்கவில்லை. ஆனாலும், என்ன செய்தாலும் உடம்பைவிட்டு போகவில்லை.

இரவு தூங்கும் முன்பு சுவரில் போகிற எறும்பு வரிசையையே பார்த்து, இத்தனை எறும்பு போகிறதே. இது மேலே விழுந்தால் என்ன செய்வது என்று ஒருகணம் யோசித்ததின் விளைவாக இந்தக்கனவு ஏற்பட்டுவிட்டது.

எறும்பை அப்புறப்படுத்தவேண்டுமென்று ஆசைப் பட்டு மறந்து போய்விட்டது. மனசு மறக்காமல் தூங்கும் போது எறும்பை அருகே அழைத்துக் கொண்டு விட்டது.

இது அதன் விளைவா. அல்லது உண்மையிலேயே எறும்பு என் உடலில் ஏறிக் கொண்டிருக்கிறதா.

கனவு சட்டென்று கலைந்துவிட்டது. பிரசாத் நினைவிற்கு வந்தான். ஆனால், கண்களை திறக்க முடியவில்லை. தான் படுத்துக் கொண்டிருக்கிற இடமும். தன் உடம்பும் முதவில் தெரியவந்தன. சாக்கடை நாற்றம் மூக்கைத் துளைத்தது. வரண்டாவில் படுத்துக் கொண்டிருக்கிறோம். இடது பக்கம் சுவர். வலது பக்கம் மூடப்பட்ட சாக்கடை. உண்மையிலேயே தன் உடம்பில் லட்சக்கணக்கில் எறும்புகள் ஊர்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

பிரசாத் 'பே' என்று திடுக்கிட்டு எழுந்தான். உடம்பு முழுவதும் தடவினான். எறும்புகள் போகவேயில்லை.

'கடவுளே... எவ்வளவு எறும்பு' மிகுந்த கலவரத்தோடு கத்தினான்.

''இந்த இருட்டுல எங்கே எறும்பு பார்த்தீர்'' பாட்டுக்கார கிழவர் குரல் கேட்டது.

''இருட்டா...'' பிரசாத் கண் திறந்தான். இருட்டாகத்தான் இருந்தது.

கண் திறந்ததாக நினைத்துக் கொண்டோம். கண் திறக்கவில்லை. எறும்புகள் ஊறுவதாக நினைத்துக்



கொண்டோம். எறும்புகள் ஊறவில்லை. விழித்துவிட்டதாக நினைத்துக் கொண்டோம். விழிக்கவேயில்லை. பிரசாத் சோர்வாய் தரையில் உட்கார்ந்து கொண்டான். புத்தி தெளிவு வரவர தனக்கு குறைந்து கொண்டே வருவதாய் அவனுக்குத் தோன்றியது.

''என்ன. ஏதாவது கெட்ட கனவா கண்டீரா,'' பாட்டுக்காரக் கிழவர் தலையைத் திருப்பி விசாரித்தார்.

அவரிடம் இதைச் சொல்வதா வேண்டாமா என்று தெரியவில்லை.

''பாம்புக் கனவா...நீ அலறியடிச்சு எழுந்திருந்த வேகத்தைப் பார்த்தா அப்படித்தான் தெரியுது.''

''பாம்பு இல்லை. எறும்பு உடம்பு முழுக்க எறும்பு ஏறது, சிகப்பா சித்தெறும்பு. துடைக்கத் துடைக்க போகலை. துணி போர்த்தினா மாதிரி, கொஞ்சம்கூட உடம்பே தெரியலை. எங்கே போறதுன்னும் தெரியலை. துடைக்கத் துடைக்க எறும்பு. உடம்பெல்லாம் சித்தெறும்பு.'' பிரசாத் அனத்தலாகப் பேசினான்.

''எறும்பு ஊறுறது நல்ல கனவாச்சே...உடம்பு முழுக்க சக்தி பொங்கறதுன்னுல்ல அர்த்தம்.

''சக்தியா''

''ஆமாம்.'' பாட்டுக்கார கிழவர் ஆமோதித்தார்.

தெருவிளக்கு வெளிச்சத்தில் அவர் முகம் லேசாகத் தெரிந்தது.

''உடம்புல ரத்தம். சதை கொழுப்பு மாதிரி, வேறொரு சக்தியும் இருக்கு. அதுக்கு ஜீவசக்தி அல்லது உயிர் சக்தின்னு பேரு. அந்த சக்தி அதிகமானா இப்படி எறும்பு ஊர்றா மாதிரி கனவு வரும். ஏன் நினைவிலேயே கூட அப்படியொரு உணர்வு இருக்கும்.''

"ஜீவசக்தி அதிகமானா என்னவாகும்." பிரசாத் புரியாமல் கேட்டான்.

"நினைக்கிற காரியம் நடக்கும். உன்னை சரியான இடத்துக்கு அது கூட்டிண்டு போயிடும். சரியான மனுஷாள அறிமுகப்படுத்தும். சரியான சிந்தனையைக் கொடுக்கும்."

"நீங்க சொல்றது எனக்குப் புரியல" பிரசாத் பாட்டுக்கார கிழவருக்கு அருகே திரும்பி உட்கார்ந்துக் கொண்டான்,

"உன்னுடைய வாழ்க்கை, உன்னுடைய புத்தி, உன்னுடைய சக்தியால நடக்கலே. உனக்குள்ளே இன்னொரு சக்தி இருக்கு. அது உன்னை நில்லுன்னு சொல்லும். திரும்பிப்பாருன்னு சொல்லும். உக்காருங்கும்.

வெளியே போன்னு அதட்டும். இதப்பாருன்னு காட்டும். அதைப் பாக்காதேன்னு கட்டளை போடும். இதை லக் அதிர்ஷ்டம்னு சில பேர் சொல்லுவா. நான் ஜீவசக்திங்கிறேன்."

பிரசாத் அவர் பேசுவதை வாய்பிளந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

"ஒரு டைரியில இந்த மாசம் எத்தனை நாள் உற்சாகமா இருந்தேன்னு குறிச்சுண்டு வா. என்னிக்கெல்லாம் உற்சாகமா இருந்தேனு நோட் பண்ணிக்கோ. உற்சாகமா இருந்ததுக்கு காரணம் என்னன்னு கண்டுபிடி. என்ன காரணம்னு பாரு. ஒரு காரணமும் இருக்காது, அந்த உற்சாகமான நாட்கள்ல எல்லாம் சரியா ஓர்க் அவுட்டாகும். உடம்பு சோர்வா இருந்தாக்கூட வேலை நன்னா நடக்கும். இதெல்லாம் ஜிவசக்தி ததும்பின நாட்கள்.



சில சமயம் உடம்புல ஒரு கேடும் இருக்காது. ஆனா, மனசு டல்லா இருக்கும். காரணமில்லாம சலிப்பு வரும். அது ஜீவசக்தி குறைஞ்ச நாட்கள்.

இந்த சக்தி சாப்பாட்டாலே வரும் விஷயமில்லை. ஓய்வினாலே கிடைக்கிற சக்தியில்லை. மருந்து மாயத்தால வராது. மனசு அமைதியும் காரணமில்லை, பாட்டு கூத்து மாதிரி சந்தோஷத்தாலேயும் கிடைச்சுடாது. இது வேற என்னமோ ஒரு விஷயம். யாராவது மகான்கள் தொட்டா மனுஷாளுக்குள்ளே ஜீவசக்தி அதிகமாறது. இது எவ்வளவு தூரம் நிஜம்னு தெரியாது. எனக்கு நேரடி அனுபவமில்லை. சிஷ்யன் தலையில குரு கைவைச்சு, இப்படி சக்தியை கிளறிவிடுவானு கேள்விப்பட்டிருக்கேன்.

அப்படி கிளறிவிட்டபோதெல்லாம் ராவும் பகலுமா, இடைவிடாத, உடம்பு முழுக்க இந்த எறும்பூறல இருக்குமாம். உனக்கு உள்ளுக்குள்ளே குவிஞ்சிருக்கிற சக்தி வெளியே வர முயற்சி பண்றது-இனி உனக்கு நல்ல காலம்."

பிரசாத்திற்கு ஒன்றும் புரியவில்லை. வினோதமாக விழித்து, அந்த பாட்டுக்காரக் கிழவரையே அசையாது பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏன் ஸ்வாமி. நடு ராத்திரியிலே உங்களுக்கு கேலி பண்றதுக்கு நான்தான் கிடைச்சேனா. ஏதோ கனவிலே பயந்து உளறினேங்கிறதுக்காக, உனக்கு இந்த சக்தி வந்துடுத்து. அந்த சக்தி வந்துடுத்துன்னு கேலி பண்றதா...கூட இருக்கிறவனையும் பைத்தியக்காரனாக்கிறதே உங்க வேலையாப்போச்சு."

"ஏதோ கேட்டியேனு சொன்னேன். இதுக்குப் போய் ஏன் இவ்ளோ பதட்டமாய் பேசறே."

"நான் உங்ககிட்டே ஏதாவது கேட்டேனா. தானே பாம்புக்கனவா, பல்லிக்கனவான்னு ஆரம்பிச்சீர்

"தப்புதான். மன்னிச்சிக்கு." கிழவர் முகம் தி பிக் கொண்டார்.

"அதுக்கு சொல்லல ஓய்...சும்மா ரேக்கி விட ரேன்னேன்."

"போதும். மேற்கொண்டு பேச வேண்டாம்."

கிழவர் சிகரெட் பற்றவைத்துக் கொண்டார். ப மாய் இரண்டு முறை இருமிவிட்டு, சிகரெட் பிடிக்க துவங்கினார், குறைந்த பட்சம் அந்த சிகரெட் குடித் முடிக்கும் வரை அவர் பேசமாட்டார் என்பதை பிரசா புரிந்து கொண்டான்.

பாட்டுக்கார கிழவருக்கு பார்த்தசாரதி என் பெயர். அவருக்கு அறுபத்தைந்து வயது இருக்கும். இந் திருவல்லிக்கேணியிலேயே பிறந்து, திருவல்லிக்கேணி யிலேயே வளர்ந்து, இங்கேயே இன்னமும் வாழ்ந் கொண்டிருக்கிறார்.

இவர் வெளியூருக்கு போனதே அபூர்வம். போக வும் பிடிக்கவில்லையாம்.

நாற்பது வருடங்களுக்கு முன்பு பம்பாயில் வேலை கிடைத்து, சொல்லாமல் கொள்ளாமல் அங்கிருந்து வண் டியேறி, சென்னை திரும்பிவிட்டாராம். இனி வாழ்நா ளில் ஒரு முறைகூட பம்பாயை மிதிக்கமாட்டேன் என்று சபதம் செய்துவிட்டாராம்.

வராண்டாவில் தூக்கம் வராமல் படுத்து கிடக்கும் போது, அந்தக் கிழவர் பார்த்தசாரதி பலதும் சொல்லியி ருக்கிறார்.



"என்னைப்பத்தி எதுக்கு சொல்றேன்னா, என்னை மாதிரி இருந்துடாதேன்னு சொல்றதுக்கு ட்ரைபண் றேன். நான் ஒரு ஃபெயிலியர். முழுசாதோல்வியடைஞ் சவன். என்னைப் பாத்தா, என்கூட பழகினா ஜெயிக்கி றது எவ்ளோ முக்கியம்னு எல்லாருக்கும் தெரிஞ்சுடும்."

"ஏன் பம்பாய் பிடிக்கல உங்களுக்கு." பிரசாத் அவ ரைக் கேட்டிருக்கிறான்.

அவன் கேட்டதும், கிழவர் இரு கைகளாலும் கன் னத்தை பொத்திக் கொண்டார்.

"ஏன். என்னாச்சு?" பிரசாத் வியப்போடு அவரைக் கேட்டான்.

"கிரான்ட்ரோடு அப்படின்னு ஒரு தெரு. மூணாம் நாள் போகும்போதுதான் எனக்கு பஸ்சுல உக்கார இடம் கிடைச்சது. அந்த ரோடு முழுக்க விபச்சாரம். எல்லா கட்டிடங்கள்லயும் கொத்து கொத்தா பெண்கள். எனக்கு ரொம்ப கலவரமாயிடுத்து. இத்தனை பாவப்பட்ட பிர தேசத்துல இருக்கணுமான்னு கேள்வி வந்தது. உடனே கிளம்பி வந்துட்டேன்.

"நீங்க அங்கே போயிடுவீங்கன்னு பயந்துட்டீங் களா."

"கோடி கோடியா கொட்டிக் கொடுத்தாலும் நான் அங்கே போகமாட்டேன். கடவுளே வந்து கூப்பிட்டாக் கூட நான் அதுக்கு மசியமாட்டேன். அந்த ஒரு தெருவுல மட்டும் எத்தனை ஆயிரம் பெண்கள். அந்த ஒவ்வொரு பெண்கள்கிட்டேயும் எவ்வளவு அழுகை. அந்த ஒவ் வொரு பெண் வாழ்ந்த வீட்லயும் எத்தனை அவலக் குரல். மனசுக்கு ஒரு சக்தி இருந்ததுன்னா, அந்த சக்தி அங்கேதான் இயக்கமா, அழுகையா, அலறலா சுத்

திண்டிருக்கும், அது நம்மை தாக்காதா.'' கிழவர் பொருமலோடு பேசினார்.

''தாக்கும்.'' தானே தொடர்ந்தார்.

''சுடுகாட்டுப் பக்கமோ, ஆடு மாடு வெட்டற பக்கமோ, கொலை நடந்த இடத்திலேயோ, தீப்பிடிச்சு நாசமான ஊர்லேயோ இருக்கக்கூடாதுன்னு சொல்லுவா. ஏன் அது மனோசக்தி பாழ்பட்ட இடம். அங்கு வாழறது தப்பு. அது போலதான் இந்த இடமும்.

உனக்கு ஒண்ணு தெரியுமா பிரசாத். பம்பாய்ல எத்தனை காசுதான் சம்பாதிச்சாலும் பம்பாய்லதான் அத்தனை காசும் செலவாகும். பம்பாய்ல சம்பாதிச்சதை, வேற எங்கியும் கொண்டு போக முடியாது. இதுவும் அன்னிக்கே தோணித்து அதனாலதான் கிளம்பி வந்துட்டேன்.''

பிரசாத்திற்கு கிழவரை என்னவிதமாக எடுத்துக் கொள்வதென்று தெரியவில்லை. அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''மெட்ராசுககு வந்தும் நீங்க வேலைக்குப்போன மாதிரி தெரியலையே...''

''போக முடியலை. என் மனோசக்தி உள்ளுக்குள்ளே போயிடுத்து. வெளியே வரவேயில்லை. யாரைப் பார்த்தாலும் ஏதாவது தோணிண்டே இருக்கு. தோணினதை சொன்ன செவுட்டுல அறையறன்.''

''என்ன தோணித்து மனுஷாளப் பாத்தா. ''பிரசாத் ஆவலோடு கிழவரை வினவினான்,

''எதிர்வீட்ல ரங்கமணின்னு ஒருத்தன் இருந்தான். திடீர்னு அவனைப் பாத்தவுடனே ஒண்ணு தோணித்து. டேய்...பத்து வயசு வேலைக்கார பெண்ணை தப்பா



உபயோகப்படுத்தாதடான்னு சொன்னேன். எழுந்து வந்து பொத்து பொத்துன்னு என்னை அடிக்க ஆரம்பிச்சுட்டான். அப்படியும் இப்படியுமா இருபது அடி. ஒரு வாரம் படுத்த படுக்கையா போயிட்டேன்.

ஆனா, என்னை அடிச்ச மறுநாளே அவன் விஷயம் சந்தி சிரிச்சுப்போச்சு. இந்த மாதிரி ரெண்டு மூணு தடவை சொல்லி, அசிங்கப்பட்டதுதான் மிச்சம்.

இப்படி சொல்லாம இருக்கணும்னா யாரையும் பாக்காம இருக்கணும்னு ஒதுங்கிட்டேன்.''

''சாப்பாட்டுக்கு என்ன பண்ணினீர்.''

''ரெண்டு அண்ணா, ஒரு தம்பி, ஒரு அக்கா, ஒரு தங்கை. மாத்தி மாத்தி சாப்பிட்டுண்டிருந்தேன். மாமனார் ஆத்துல ஒரு வருஷம் போட்டா.''

''கல்யாணம் வேற ஆச்சா உங்களுக்கு.''

''ஆச்சு கரெக்டா ஒரு வருஷம். சரியா முந்நூத்தி அறுபத்தி எட்டுநாள். செத்துப் போயிட்டா.''

''எப்படி''

''ஜான்டீஸ்.''

''நீங்க வைத்தியம் பண்ணலையா.''

''அவ பெருந்தீனி. நாக்கு அடக்காதவ. மஞ்சக் காமாலை சரியான பிறகும் பத்தியமா இருந்திருக்கணும். அடை, பஜ்ஜின்னு சாப்பிட்டு மஞ்சக்காமாலை திருப்பிண்டுடுத்து.''

''கல்யாணமான பிறகும் வேலைக்கு போகவேயில்லையா.''

''வேலைக்கு போக மாட்டேங்கறதுதான் கல்யாணத்துக்கு நான் போட்ட கண்டீஷனே.''

"எப்படி சம்மதிச்சா."

"மங்களாம்பிகையோட அப்பா நாடி ஜோஸியர். அவருக்கு என்னையும் தெரியும். அவர் பொண்ணையும் தெரியும். என் பொண்ணு உன்கூட இருக்கிற வரைக்கும் சோறு போடறேன்னார். அப்பவே எனக்கு தெரிஞ்சு போச்சு. அவர் பொண்ணு ரொம்ப நாள் உசுரோட இருக்க மாட்டானு.

மங்களாம்பிகை ரொம்ப குண்டா இருப்பா. கொஞ்சம் முசுடு. 'பேபே'னு கையை ஆட்டிப் பேசுவா. கார்த்தால ஏழு மணி வரைக்கும் தூங்குவோ. நிறுத்தி நிதானமா நிறைய சாப்பிடுவா. சாகறதுக்குன்னே சாப்பிட்ட மாதிரி சாப்பிடுவா.

நான் இதுபத்தி ஒண்ணும் சொல்ல மாட்டேன். ஏன் இப்படி இருக்கேன்னும் கேட்டதில்லை. மங்களா கிட்டே ஒரேயொரு நல்ல குணம் இருந்தது. யாராவது பசின்னா உடனே இரக்கப்பட்டுருவா. அஞ்சுபைசா, பத்து பைசா யில்ல. ஒரு ரூபா போடுவா, கோயில்லேர்ந்து தேடிப் பிடிச்சு யாரையாவது கூட்டிண்டு வருவா. குழம்பு சாதம், தயிர்சாதம், கத்தரிக்கா பிறட்டல் இல்ல பூரி உருளைக் கிழங்குன்னு ரொம்ப ருசியா, திணறத்திணற காப்பாடு போடுவா. எனக்கும் அப்படி போட்டுருக்கா.

அவ அப்பா அப்பவே ஒரு காண்டம் படிக்க நூறு ரூபா வாங்கிடுவார். பரிகாரம் ரொம்ப கரெக்டா சொல்வார். கூட காசு கொடுத்தா, நின்னு பரிகாரம் செஞ்சு வைப்பார். எனக்கும் சேத்து அவரே சம்பாதிச்சார்."

"உங்க மனைவி செத்துப்போன பிறகு யார் சாதம் போட்டா."

"மாமனார்தான். சாகறபோது மங்களா அவர் கையைப் பிடிச்சு கேட்டுண்டா. இவராலதான் நான் சுமங்கலியா சாகறேன். என் உருவத்தை பொறுத்துண்டு, என் குணத்தை பொறுத்துண்டு ரொம்பப் பிரியமா என்னை நடத்தினார். ஏண்டி தூங்கறேனு என்னைக் கேட்டதேயில்லை. இவருக்கு கடைசி வரைக்கும் சாதம் போடுங்கப்பான்னு சொல்லிட்டு செத்துப் போனா."



"சார் தப்பா நினைக்கலேன்னா ஒரு கேள்வி. உங்களுக்கு ஏன் குழந்தை பிறக்கலை."

"பெண்டாட்டியோடு கூடவேயில்லை."

"கடவுளே...ஏன் சார்?"

"அவளுக்கு பிடிக்கலை. சரின்னு நானும் சும்மா இருந்துட்டேன்."

"மாமனார் எத்தனை நாளைக்கு சோறு போட்டார்."

"பதினைஞ்சு வருஷம். அப்புறம் மாமியார் ஒரு ரெண்டு வருஷம். அப்புறம், மச்சினன் ஒரு அஞ்சு வருஷம். மச்சினனோட ரெண்டு பிள்ளைகள், ஒரு மாப்பிள்ளை... இவா மாத்தி மாத்தி போட்டுண்டிருக்கா. அந்த மாப்பிள்ளை மாசாமாசம் மெஸ்ல டிக்கெட் வாங்கிக் கொடுத்துடறான். ஒருவேளை நன்னா சாப்ட்டு வந்துடுறேன். ராத்திரி எங்கியாவது சாப்ட்டுக்கறேன்."

"வேலைக்கே போகலையா."

"இல்லை. பாம்பேல மூணுநாள் போனேனே...அதான் முதல். அதான் கடைசி."

"வாழ்க்கை பத்தி பயமாவே இல்லியா."

"தேவை இருக்கிறவனுக்குத்தான் பயம் இருக்கும். எனக்கு தேவையுமில்லை. பயமுமில்லை."

"எப்படி பொழுது போறது."

"கார்த்தால பார்த்தசாரதி கோயில். சாயங்காலம் மெரீனா பீச்சு. மத்தியானம் தெருமுனைக்கடை. ராத்திரி வீட்டு வராண்டா."

"ஜுரம் தலைவலின்னு வந்தா காசு வேண்டாமா."

"நாலஞ்சு தடவைதான் வந்தது. ராமகிருஷ்ணா மடம் தர்மாஸ்பத்திரியில காண்பிச்சு, சரி பண்ணிப்பேன்."

"சட்டை, துணி மணிக்கு"

"யாராவது எடுத்துத்தருவா. ஆறு ஜதை வைச்சிருக்கேன். அதுவே ஜாஸ்தி. செரும்பு போடறதேயில்னல. முப்பது வயசுலியே விட்டுட்டேன். ஒரு புது செருப்பு வாங்கிண்டு மயிலாப்பூர் குளத்துல இறங்கி, கரையில விட்டுட்டு குளத்துல மூஞ்சி அலம்பிண்டிருந்தேன். ஒரு பதினைஞ்சு வயசுப் பையன் கரையிலிருந்த செருப்பை லாவிண்டு ஓடிப் போயிட்டான். கத்தணும்னு வாயெடுத்தேன், அந்தப் பையன் என் வியாதியை எடுத்துண்டு போறான்னு தெரிஞ்சுது சும்மா இருந்துட்டேன். மறுபடி காசு கொடுத்து வியாதி வாங்குவாளோ...அதுக்குப் பிறகு செருப்பு வாங்கவுமில்லை. போடவுமில்லை."

"என்ன வியாதி."

"தலைவலி வரும். குடையறா மாதிரி ஒரு தலைவலி இருக்கும். அந்த செருப்போட அந்த தலைவலி போயிடுத்து."

"மனுஷாளா பொறந்தவா வாழ்க்கையில ஏதாவது சாதிக்க வேண்டாமா." பிரசாத் கேட்டான்.

"சாதிக்கணும்னு நினைச்சா சாதிக்கணும். இல்லேன்னா...வேண்டாம், என்ன சாதிச்சாலும் உன் சாதனை உன்கூட வரப்போறதில்லை. சாதிச்சவனும் சாகறான். சாதிக்காதவனும் சாகறான்,'



"யாருக்காவது உபயோகமா இருக்கலாமில்லையா."

"யாருக்கும் தொந்தரவு பண்ணாம இருக்கிறதுதான் மிகப் பெரிய உபயோகம்.

"ஊர் ஊரா கோயில் கோயிலா போயிருக்கலாமே...'

"எல்லா ஊரும் ஒரே மாதிரிதான். எல்லாக் கோயிலும் ஒரே விஷயம்தான். இங்கே இவர் இருக்கார், அங்கே அவர் இருக்காருங்கறதெல்லாம் பொய்."

"இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்கோ. வாழ்க்கை என்பது என்ன?',

"அது ஒரு தோற்றம். அது ஒரு மாயை. வாழ்க்கையென்று ஒன்று இல்லை."

"இப்போது நீர் வாழவில்லையா."

"நான் வெறுமே உயிரோடு இருக்கிறேன்."

"அதற்குப்பிறகு பிரசாத்தால் எந்தக் கேள்வியும் கேட்க முடியவில்லை.

மௌனமாக படுக்கையில் சாய்ந்துவிட்டான்.

"என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள எதுவுமில்லை. என்னிடம் கேட்காமலிருப்பதே நல்லது. நான் வேறு. இந்த உலகம் வேறு. நீ தூங்கு."

அந்தக் கிழவர் நகர்ந்து படுத்துக் கொள்ள, பிரசாத் அவரிடம் எதுவும் பேசாமல் தூங்கிப்போனான்.

அவர் பேசுவது புரியவில்லையாயினும், அவர்மீது ஒரு நல்ல மதிப்பு வந்துவிட்டது. எது பற்றியும் அவருக்கு வர கோபமோ, ஆத்திரமோ, படபடப்போ வரவேயில்லை. எதுவும் அவரை அதிரடையச் செய்யவில்லை.

“முட்டுசந்துல யானைமாட்டிண்டுத்துய்யா. பின்னாடி நகர பயப்படறது.”

“சாயந்திரம் அஞ்சுமணிக்கு தானா திரும்பிடும். அந்த யானையை இந்த நேரம் அடிக்கப்படாது. அடிச்சவன் வாழ்க்கையில ரொம்ப வருத்தப்படுவான்.”

சிறிதுகூட அதிரலேயில்லாமல் பேசுவார்.

“உங்க மச்சினர் புள்ளைக்கு குழந்தை பிறந்திருக்காமே...”

“ஆமாம். பத்து மணிநேரம் கடன்.”

யாருக்கும் புரியாத வார்த்தைகளைச் சொன்னார்.

அந்தக் குழந்தை பத்துமணி நேரத்தில் இறந்து போய்விட்டது.

“உங்களுக்கு எதிர்காலத்தைப் பத்தி தெளிவா தெரியறதா சார்.”

“தெரிஞ்சு என்ன லாபம்.”

“மத்தவங்களுக்கு சொல்லலாமே...”

“சொன்னா தாங்குவானா.”

“ஏன் சார்.”

“எதிர்காலத்தைப்பத்தி சொல்றேன்னு சொல்லிட்டு, கொத்துக் கொத்தா பொய் சொல்லணும். ஆஹா ஓஹோன்னு எல்லாம் நன்மையா சொல்லி ஏமாத்தணும். எதிர்காலத்தைப் பத்தி தெரிஞ்சுக்கவேண்டிய தேவையேயில்லை.”

“ஜோஸியம் ஒரு நல்ல கலையில்லையா சார்.”

“பிரயோஜனமில்லாத கலை. பேராசை உள்ளவாளுக்கு இன்னும் பேராசையைத் தூண்டுற கலை. கடவுள்



மீது நம்பிக்கையுள்ளவன் ஜோஸியன்கிட்ட போகமாட்டான். ஆத்திரக்காரனுக்குதான் ஜோஸியம். கடந்த காலத்தைப் பத்தி மறந்துடு. எதிர்காலத்தைப்பத்தி கவலைப்படாதே. எப்பவும் நிகழ்காலத்திலேயே இரு.”

“ரொம்ப கஷ்டம் சார் இது.”

“கஷ்டம்தான். அதனாலதான் நான் வாயைத்திறக்கறதேதல்லை.”

“சார். எனக்கு ஏதாவது சொல்லுங்களேன்.”

“தேடித்தெரிந்து கொள்,”

“தெரிஞ்சிக்கிறேன் சார். நான் எப்பவும் ஞாபகம் வச்சுக்கும்படியா ஒரு வாக்கியம் சொல்லுங்களேன். இடைவிடாத அந்த வாக்கியம் மனசுல இருக்கணும்.”

“ஒரு பொல்லாப்புமில்லை.”

“அப்படின்னா...”

“ஒருத்தர் மேலயும் கோபமில்லை, ஆத்திரமில்லை. துவேஷமில்லை. அலட்சியமில்லை. யாருமே அந்நியமில்லை. எல்லாம் உறவு. எல்லாம் நட்பு. யாராவது ஏதாவது தீங்கு பண்ணினாலும், வந்து கன்னத்திலே அடிச்சாலும் ஒரு பொல்லாப்புமில்லை. திரும்பித்திரும்ப இத சொல்லிண்டே வா. இடைவிடாத இந்த வாக்கியத்தோடேயே இரு. இப்படியிருந்தா உன்னால யார்கூடயும் சண்டை போடமுடியாது. சண்டையில்லாத வாழ்க்கைதான் சந்தோஷமான வாழ்க்கை. சந்தோஷமான வாழ்க்கைதான் வெற்றியான வாழ்க்கை. திரும்பத் திரும்ப உள்ளே சொல்லு. ஒரு பொல்லாப்புமில்லை. குறிப்பா, கோபம் வரும்போது சொல்லு. ஒரு பொல்லாப்புமில்லை.”

பிரசாத் அந்த வாக்கியத்தை திரும்பத் திரும்ப சொன்னான். அவர் கால்களைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

கிழவர் சிரித்தார்.

''இதெல்லாம் தேவையேயில்லை. யார்கூடயும் சண்டையில்லாத இருந்துட்டாலே, காலைத்தொட்டு நமஸ்காரம் பண்றமாதிரிதான். உள்ளே வன்மத்தை வச்சுண்டு, கைகூப்பி நமஸ்காரம் பண்றதுதான் மகா பாவம்.''

கிழவருக்கு ஒருநாள் அவன் ஸ்நேகிதனை அறிமுகப் படுத்த அவர் முகம் திருப்பிக் கொண்டார். எதுவுமே பேசாமல் சுவர் பார்த்து உட்கார்ந்து கொண்டார்.

''அந்த ஆள் பைத்தியம். இவனைப்போய் எனக்கு ஏன் அறிமுகப்படுத்தறே...''

அவன் கையை உதறி வெளியேறி விட்டான்.

பார்த்தசாரதி கிழவர் பிரசாத்தைப் பார்த்து சிரித்தார். பிரசாத்திடம் மட்டுமே அவர் ஸ்நேகமாக இருந்தார்.

அந்த வராண்டாவில் இருவரும் ஒருவருக்கொருவர் அனுசரணையாக இருந்தார்கள்.

பார்த்தசாரதி கிழவருக்கு கால் குடைவு வந்து வலி தாங்காமல் தூக்கத்தில் கால் மாற்றிப் போடுவார். லேசாய் அனத்துவார். பிரசாத் அவர் கால்களை பிடித்து விடுவான். பத்து நிமிடம் அழுத்தி அழுத்தி பிடித்துவிட, ஆஹா...ஆஹா...என்று அந்த சுகத்தை அனுபவிப்பார்.

கோயிலில், கடற்கரையில் வெற்றிலைப் பாக்கு கடை வாசலில் எப்போதும் பாடிக் கொண்டிருப்பதால், அவருக்கு பாட்டுக்காரக் கிழவர் என்று பெயர் வந்தது.



இன்று உடம்பெல்லாம் எறும்பூறுகிற கனவு கண்ட போது, அது பற்றி கிழவர் சொன்னதை பிரசாத் மௌனமாக ஏற்றுக் கொண்டான். அதே சமயம், அதைப் பற்றி கொண்டாடுவதற்கும் ஒன்றுமில்லையென்பது தெரிந்து போயிற்று.

எனக்கு உயிர் சக்தி மேலே வந்துவிட்டதென்று யாரிடம் போய் சொல்வது. சொன்னால் யாருக்குப் புரியும். இது மிக நல்லது என்பதாய் கிழவர் பேசுகிறார். ஆனால், வாழ்க்கை இப்படியேதான் சாக்கடை வாசனையும், வராண்டா படுக்கையும், கொசுக்கடியுமாய் இருக்கிறது.

இருபத்தேழு வயதாகியும் இன்னும் சரியான வேலையில் அமரவில்லை. இந்த பி.எஸ்.சி கணக்குப் படிப்புக்கு முதல் வகுப்பு வாங்கியும், இந்த உலகத்தில் எந்த மரியாதையுமில்லை.

ரெண்டாயிரம் ரூபாய் சம்பளம். அட்வான்ஸ் கழிப்பு போக, கையில் ஆயிரத்தி எழுநூறு ரூபாய் வருகிறது, ஒரு அக்கா ஒரு தங்கை என்று சிறிய குடும்பமாயிருந்தாலும், அப்பாவின் சம்பாத்தியமும் பெரிதாக இல்லை. முப்பது வருடம் சர்வீஸ் போட்ட பிறகும் அப்பாவிற்கு மூவாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம்.

காலை ஏழு மணிக்கு கிளம்பினால் ராத்திரி எட்டு மணிக்குதான் வருவார். வந்ததும் சாப்பிட்டு உடனே தூங்கி விடுவார். மிக மோசமாய் குறட்டை விடுவார்.

அந்த குறட்டை சத்தம் அம்மாவிற்கும் தங்கைக்கும் பழகிப் போயிற்று. பிரசாத்தால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஒரு ஹால் ஒரு சமையலறை கொண்ட அந்த போர்ஷனில் எதையுமே சுதந்திரமாக செய்ய முடிய வில்லை. குறைந்தபட்சம் உறக்கமாவது நன்றாக இருக் கட்டும் என்று வராண்டாவிற்கு வந்துவிட்டான்.

பனிரெண்டு போர்ஷன்கள் கொண்ட, அந்த ஒண்டுக் குடித்தனத்தில் முதல் போர்ஷன் கிழவருடையது. கடைசி போர்ஷன் பிரசாத்துடையது. முதல் போர்ஷன் என்பது பத்தடிக்கு ஆறடி கொண்ட ஒரு அறை.

கடந்த முப்பது வருடங்களாக மெல்ல மெல்ல வாடகை உயர்த்தி இப்பொழுது அறுபது ரூபாய் வாடகையாக அந்தக் கிழவர் கொடுத்துச் கொண்டிருக் கிறார்.

அந்த ஒண்டுக்குடித்தனத்தில் வாழும் சில பெண் குழந்தைகள் இரவு அங்கு உட்கார்ந்து படிப்பார்கள். பதினோரு மணிக்கு விளக்கணைத்துவிட்டு போய் விடுவார்கள். பிறகு, காலை ஐந்து மணிக்கு படிப்பார்கள். மின்சாரக் கட்டணம் பதினைந்து ரூபாய் அவர்களே கொடுத்து விடுவார்கள். கிழவரின் மைத்துனர் வாடகை அனுப்பி விடுகிறார்.

பகல் பொழுதில் அந்த வராண்டா, அந்த அறை இரண்டுமே அந்த வீட்டிலுள்ள பெண்மணிகள் பயன் படுத்துகிறார்கள். தாயக்கட்டம் ஆடவோ, அரட்டை அடிக்கவோ வியாபாரியிடம் பேரம் பேசவோ உபயோகப் படுத்திக் கொள்கிறார்கள்.

நடுவே இந்த வராண்டாவில் படுப்பதற்காக சண்டை கூட வந்தது.

வேறு யாரோ இதற்கு உரிமை கொண்டாட மாலை ஆறுமணிக்கே படுக்கையைக் கொண்டு வந்து விரித்து விட தலைகாணியும், போர்வையும் எடுத்துக் கொண்டு பிரசாத்



கடற்கரைக்குப் போய் படுத்துக் கொண்டான். கிழவர் தன் அறைக்கு போய்விட்டார்.

விடியல் நேரத்தில் அந்த ஆளுக்கு கடும் ஜுரம் வந்து விட்டது. தொடர்ந்து நான்கு நாட்கள் வேலைக்குக்கூட போகமுடியாமல் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் படியாகி விட்டது.

அதற்குப் பிறகு யாரும் போட்டியிடவில்லை. ஆனாலும் ரகசியமற்ற ஒரு இடமாக, ஆரோக்கியமில்லாத இடமாக, புரண்டு படுக்கக்கூட வசதியில்லாத குறுகலாக ஒரு படுக்குமிடம் தனக்கு கிடைத்திருப்பது வருத்தமாகத் தான் இருந்தது.

சினிமா பார்க்கும் போதெல்லாம் அதில் வரும் குடிசை வீடுகள் கூட, இவன் வீட்டை விட அகலமாக இருக்கும்.

ஒரு குமாஸ்தாவின் வீடு, நாற்காலி, மேஜை, கட்டில், பூந்தொட்டி என்று அமர்க்களப்படும். சினிமாவில் காட்டு கிற பணக்கார வீட்டை அவன் எங்கேயும் பார்த்தது யில்லை.

ஏதோ ஒரு படத்தில் சுழலும் மெத்தை வந்தது. அது இவன் வீட்டு சமையலறையை விட பெரிதாக இருந்தது.

இப்படி சுழல் மெத்தையெல்லாம் வேண்டாம்.

ஒரு அடி உயரமுள்ள கட்டில், அதில் அரையடி உயர முள்ள மெத்தை, இரண்டு தலகாணி ஒரு நீள உருளைத் திண்டு என்கிறவிதமாய் எப்போது கிடைக்குமென்று தெரியவில்லை.

படுக்குமிடத்தில் காற்று வரவேண்டும். நாற்றம் வரக் கூடாது. புசுபுசுவென்று இடையறாது மின்விசிறிக்காற்று

வீசிக் கொண்டிருக்க வேண்டும். மெல்லிய பூப்போட்ட போர்வையால் போர்த்திக் கொண்டு தூங்க வேண்டும்.

ஆட்டோ சத்தமோ, ஸ்கூட்டர் ஹாரனோ, நாய் ஊளையோ, மனிதக் சுத்தலோ காலையில் காதில் படக் கூடாது.

குளிக்கிற இடம், துணிதுவைக்கிற இடம், கழிப்பிடம் எல்லாம் மிக நேர்த்தியாக இருக்க வேண்டும் இந்த ஒண்டிக் குடித்தனத்தில் இவையெல்லாம் மிகப் பெரிய நரகம் இந்த சுகமெல்லாம் வேலைக்குப் போய் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வந்த பிறகுதான் முக்கியமாகப் படுகிறது.

படித்துக் கொண்டிருக்கும் போதோ, வேலைக்கு அலையும் போதோ இது முக்கியமாகத் தெரியவில்லை. இந்த சுகங்கள் அவயசியமென்று தோன்றவில்லை. இதுவும் மிக சமீபமாகத்தான் உரைத்தது.

''இன்னும் கொஞ்சம் தம்பிடிச்சு, சேல்ஸ் இன்கிரீஸ் பண்ணிக் காட்டுங்க. நூறுன்றதை இருநூன்னு டபுள் பண்ணுங்க. நான் உங்களுக்கு மூவாயிரம் ரூபா சம்பளம் தர்றேன். உதவி சேல்ஸ் மேனேஜர்னு பதவி தர்றேன்.'' முதலாளி சொன்ன போது மிகவும் சந்தோஷமாகவும், சிரிப்பாகவும் இருந்தது.

ஆனால், இந்த தீயணைப்புக் கருவியை மாதம் இரு நூறு என்று ஒருநாளும் விற்க முடியாது. இதை நூறு விற்பதற்குள்ளேயே பைத்தியம் பிடித்து விடுகிறது.

முக்கால் அடி நீளமுள்ள இரும்புக் குழாயில் ஒரு வகை திரவம் அழுத்தி நிரப்பப்பட்டிருக்கும். முனையைத் தட்டி சாய்த்துப் பிடித்ததும் திரவம் பீய்ச்சியடிக்கும். பீய்ச்சியடிக்கப்பட்ட திரவத்தை நெருப்பின் மீது காட்ட, நெருப்பு உடனே அணைந்து போகும்.



பத்துப்பேர் வேலை செய்கிற ஒரு கம்பெனியில் அல்லது தொழிற்சாலையில் குறைந்தப் பட்சம் ஒரு தீயணைப்புக் கருவியாவது இருக்க வேண்டுமென்பது பாதுகாப்புச் சட்டம். ஆனால்,எந்த சட்டமும் இந்த தேசத்தில் ஒழுங்காக கடைப்பிடிக்கப் படுவதில்லை. இப்படியொரு சட்டம் இருக்கிறது என்று சொன்னாலே கோபமாகி விடுகிறார்கள்.

''இப்படி சட்டமெல்லாம் பேசினா ஒண்ணுகூட வாங்க மாட்டேன்.'' என்று பதிலுக்கு மிரட்டுவார்கள்.

இதைவிட பெரிய முட்டாள்தனம் என்னவென்றால், இதில் அடைக்கப்பட்ட திரவம் எப்படி பீய்ச்சியடிக்கப் படுகிறது என்று உடனே பார்க்க ஆசைப்படுவார்கள். ஒரு குப்பியை வாங்க ஒரு குப்பியை நாசம் பண்ண வேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள்.

ஒன்றுமே விற்காதபோது, மாதம் முப்பது குப்பி கூடனுக்கு விற்றபோது பிரசாத் வேலையில் சேர்ந்து நூறு குப்பியை காசுக்கு விற்றான்.

இந்த விற்பனையை நடத்துவதற்குள் ஏகப்பட்ட அவமானப்பட்டான்.

எட்டுமணிக்கு பஸ் பிடித்து, எட்டரை மணிக்கு ஆபீஸ் போய், மறுபடி ஒன்பது மணிக்கு படையெடுப்பு துவங்கி பிற்பகல் இரண்டு மணிக்குள் பல்வேறு கம்பெனிக்குள் ஏறி இறங்குவான். அசராமல் நடப்பான். எத்தனை அவமானப்படுத்தினாலும் பொறுத்துக் கொள்வான்.

இந்திய தீயணைப்புக் கருவியின் அலுவலகம் பம்பாயில் இருக்கிறது. பிரசாத்தின் முதலாளிதான் ஆந்திரா, தமிழ்நாடு, கேரளாவிற்கு விற்பனை ஏஜெண்டாக இருக்கிறார். அவர் தமிழர், மகாமுனி என்கிற பச்சைத்தமிழர். அவருடைய உறவினர்கள் அரசியலில்

பெரிய ஆளாக இருந்தார்கள் அவர்களிடம் காசு கடன் வாங்கி இவர் பல்வேறு விஷயங்களுக்கு ஏஜென்ஸி எடுத்திருந்தார்.

பப்பிள்கம், மடக்குச்சேர், ஹவாய் செருப்பு, ஸ்டிக்கர் பொட்டு, தீயணைக்கும் கருவி, பித்தளைப்பூட்டு, ப்ரைமர்பெயிண்ட் என்று பல்வேறு விஷயம் வரவழைத்து தமிழ்நாட்டிலும் அதன் சுற்றுப்புறத்திலும் விற்றுக் கொண்டிருந்தார்.

ஜார்ஜ் டவுன் அரண்மனைக்கார தெருவில் ஒரு பழைய கட்டிடத்தின் மாடியை வாடகை எடுத்து, அதை பழைய பிளைவுட்டுகளால் சிறிய சிறிய அறைகளாக தடுத்து. நசுங்கிப் போன டின்களிலிருந்து ப்ரைமர் பெயிண்ட் அடித்து அலுவலகத்தை ஒரு அழுக்கு சிவப்பில் அலங்கரித்திருந்தார்.

விற்பனையை இரண்டு மடங்காக்க நா கூசாமல் சொல்கிற முதலாளி, சம்பளத்தை இரண்டு மடங்காக்க மாட்டார்

ஆட்டோ அலவன்ஸோ, இரண்டு சக்கர வாகனமோ இன்ஸென்டீவோ தரமாட்டார்.

''எல்லா கம்பெனியுமா சேர்ந்து நாற்பத்தேழு பேர் வேலை பாக்கிறோம், கேன்டீன் வேணும் சார். அல்லது அதற்குண்டான காசாவது தரணும்.'' வேறு கம்பெனியிலிருந்து வேண்டுகோள்விடுத்த தொழிலாளியை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள்.

காலையும் மாலையும் இலவசமாய் டீ கொடுக்க உத்தரவிட்டனர்.

இதையெல்லாம் கூட பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், அந்த பழைய கட்டிடத்தில் உயரத்தொங்கும் நூலாம்படையும், மேலே யார் நடந்தாலும் தரையில்



உதிரும் காரைப்பூச்சும் தரை முழுக்க தெரு தூசும் வேலை செய்யவே வெறுப்பாயிருந்தன.

அம்பத்தூர் பாடி, செம்பியம் பக்கம் என்று சில கம்பெனிகளுக்குப் போகும்போது அந்த கம்பெனிகளின் நேர்த்தி மனசு மயங்க வைக்கும். வாசனையும், குளுமையும், வாயை பிளக்க வைக்கும்

வேலை செய்கிற இடம்கூட தனக்கு நேர்த்தியாய் அமையவில்லையே என்று பிரசாத்துக்கு வருத்தமுண்டு.

இந்த திருவல்லிக்கேணி நண்பர்கள் இல்லையென்றால் சேல்ஸ் என்கிற இந்த விஷயம் கூட சரியாய் விளங்கியிருக்காது.

நண்பர்கள் என்றால் அவன் வயது நண்பர்கள் மட்டுமில்லை. முப்பது, நாப்பது, நாப்பத்தைந்து என்று கொஞ்சம் வயதானவர்கள் கூட சனிக்கிழமை ஜமாவில் சேர்ந்து கொள்வார்கள்.

ராகவேந்திர மடத்திற்குப் பக்கத்தில் வெண்ணெய் கடை பத்து மணிக்கு மூடியதும் அல்லது ரேடியோரிப்பேர் செய்யும் விஸ்வநாதன் கடையில் போர்டு விளக்கு அணைத்தும் அங்கே போய் உட்கார்ந்து கொள்வார்கள்.

விஸ்வநாதன் கடையிலிருந்து நீள பெஞ்சு, நாற்காலியெல்லாம் வெளியே போட்டுக்கொள்வார்கள்.

அநேகமாய் அங்குள்ள எல்லோரும் குமாஸ்தாக்களாய், விற்பனையாளர்களாய் வாழ்க்கை துவங்கியிருந்தார்கள்.

''சேல்ஸ் ரெப்பா...ஃபையர் எக்ஸ்டிங்குவிஷரா... வெரிகுட். என்ன சம்பளம். ரெண்டாயிரமா...முதல்ல டைகட்டறது எப்படின்னு கத்துக்கோ. சேல்ஸ் ரெப்புன்

னா டை இல்லாம போகக்கூடாது. ஷூ இல்லாம நடக்கக் கூடாது.

இதெல்லாம் கம்பெனியில தருவானா...நாமளா தான் நம்மள தயார் பண்ணிக்கணும்.''

அங்கேதான் அவனுக்கு டை கட்டிக்கொள்ள கற்றுக்கொடுத்தார்கள். ஆங்கிலத்தில் உரையாட உற்சாக மூட்டினார்கள். பொறுமையாய் இருக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்கள்.

அவர்கள் பொறுமை எப்படியெல்லாம் சோதிக்கப் பட்டது என்னவெல்லாம் பரிசு கொடுத்தது என்று கதைகள் சொன்னார்கள்-

''நாய் வேஷம் போட்டாச்சு. குரைக்க வெட்கப் பட்டா முடியுமா. எப்படி குரைச்சா நல்லதுன்னு யோசனை பண்ணனும். நமக்கு மரியாதைங்கிறது பேச்சுல இல்லை. செய்கையில் இல்லை. நம்முடைய மரியாதை சேல்ஸ் டார்கெட்ல இருக்கு. கொண்டு வந்தால் தான் மனைவி. பத்து சோப்பு விக்கிற இடத்துல இருபது சோப்பு வித்தா நீ வேலைக்காரன். முப்பது சோப் வித்தா மகா கெட்டிக்காரன். நாப்பது சோப் வித்தா கிங்.அம்பது சோப்பு வித்தா அந்த கம்பெனிவிட்டு வந்துடு.''

''ஏன்...ஏன்...?'' பிரசாத் ஆவலோடு கேட்டான்.

''பத்து சோப்பு விக்கிற இடத்துல அம்பது சோப்பு வித்ததுன்னா, அந்த சோப்புக்கு டிமாண்ட் ஜாஸ்தி இருக்குன்னு அர்த்தம். டிமாண்ட் இருக்கிற இடத்திலே சேல்ஸ் ரெப்புக்கு என்னவேலை. கிளார்க் போதும். அல்லது பத்து விக்கிற இடத்துல உன்னால அம்பது விக்க முடிஞ்சதுன்னா, உன் கெட்டிக்காரத்தனத்துக்கு அதைவிட பெட்டர் கம்பெனி தேவைப்படறது. அதனால் ஜம்ப்,''



ஆங்கிலமும், தமிழும் கலந்து அந்த திருவல்லிக் கேணி நண்பர்களிடம் விளையாடிய விதம் அவனையும் தொற்றிக்கொண்டது.

ராத்திரி பதினோருமணிக்கு சலவை செய்த பேண்ட் சட்டை போட்டுக் கொண்டு வரச் சொல்லி சாக்ஸூம், ஷூவும் அணியச் சொல்லி, ஒரே உருட்ட லில் சாக்ஸ் போடச் சொல்லிக் கொடுத்து, சரசரவென்று டை அணிய கற்றுக் கொடுத்து சட்டையை அழகாக இன் பண்ண சொல்லிக் கொடுத்து, பேசுவதிலிருந்து உட்காரு வதிலிருந்து, வணங்குவதிலிருந்து, கைகுலுக்குவதிலி ருந்து அவனுக்கு அரட்டையாய் பயிற்சியளித்தார்கள். ஏகப்பட்ட விஷயங்கள் போதித்தார்கள்.

திருவல்லிக்கேணிதான் அவனை மனிதனாக உரு வாக்கியது. ஒரு நல்ல சேல்ஸ் ரெப்பாக வளர்த்தது.

''இரவு பதினோருமணிக்கு எங்கே டை எடுத்துக் கொண்டு போகிறாய்.'' ஆவலாய் பிரசாத்தின் அப்பா பின் தொடர்ந்தார்.

''ஒய் நடராஜன். பத்துபைசா காசு வாங்காம, உம்ம பையனுக்கு ஏகப்பட்டது சொல்லித்தர்றோம். எங்களுக்கு ஏதாவது மரியாதை பண்ணவேண்டாமா...'' அதட்டலாய் கேட்டார்கள்.

''என்ன பண்ணனும் சொல்லுங்கோ செய்துட லாம்.''

''பிள்ளைக்கு வரன்பார்த்து கல்யாணம் பண்ற போது, எங்களுக்கு மூணு வேளையும் சோறு போடணும். வீட்டுக்கு வந்து அட்சதை குங்குமத்தோட பத்திரிகை கொடுக்கணும். கைகூப்பி கல்யாணத்துக்கு கூப்பிடணும்.

புது ஜமுக்காளம், புது சீட்டுக்கட்டு, டிகிரி காப்பி, வெத்தலை பாக்குன்னு அமர்க்களப்படுத்திடணும்.''

“செய்துட்டாப்போச்சு.” நடராஜன் வாயெல்லாம் பல்லானார். அப்போதே தன் பிள்ளையின் கல்யாணத்தை சந்தோஷமாய் நினைத்துப் பார்த்தார்.

மூத்த பெண்ணின் திருமணத்திற்காக வாங்கிய கடன்கள் சிறிது பாக்கியிருந்தது.அதை அவரே அடைத்து விடமுடியும்.

இரண்டாவது பெண் கல்யாணத்தை பிரசாத் ஏற்றுக் கொண்டால் போதும்.

பிரசாத் ஏற்றுக் கொள்வான்.அவனுக்கு நல்ல வேலை கிடைத்திருக்கிறது. நல்ல நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். இதைவிடவும் நல்ல வேலை அவனுக்கு கிடைக்கக் கூடும்.

இந்த திருவல்லிகேணி சாதாரண இடமல்ல. இந்த இடத்திலிருந்து பல இளைஞர்கள் உலகத்தின் பல பாகங்களுக்கு வேலைக்காக போயிருக்கிறார்கள்.

டாக்டர் ராஜு அமெரிக்காவில் மிகப் பெரிய டாக்டராக சைல்டு ஸ்பெஷலிஸ்டாக இருக்கிறான். சீனிவாசன், பத்ரிநாத் சாமா, வெங்கடேஷ் பல பேர் அயல்நாட்டில் இருக்கிறார்கள்.

“ஒழுக்கம் இருந்தா போறும்பா. ரொம்ப கெட்டிக்காரனாக்கூட இருக்க வேண்டாம். நம்ம பார்த்தசாரதி பெருமாளுக்கு நான் ஒழுக்கமா இருக்கேன்னு ஒரு வாக்குறுதி கொடு, பீடி,சிகரெட்,கஞ்சா,·குடி, புகையிலை பொம்மனாட்டி எதிலேயும் மாட்டாதே.”

“மாட்டமாட்டேன்னு வாக்கு கொடு. பார்த்தசாரதி பெருமாள் உன்னை எங்கேயோ கூட்டிண்டு போயிடுறார் பாரு.”

“மூணு தலைமுறை பார்த்த அனுபவத்துல சொல்றேன். சிகரெட், குடியில மாட்டிண்டவன் எனக்குத்



தெரிஞ்சு உருப்பட்டதில்லை.மத்த இடத்திலே எப்படியோ, திருவல்லிக்கேணி பெருமாளுக்கு பிடிக்கிறதேயில்லை.”

“சேல்ஸ்ல கெட்டுப்போறதுக்கு நிறைய வாய்ப்பு கிடைக்கும். சாராயம் குடிக்க ஜமாகிடைக்கும். சிகரெட் குடிக்க டெம்டேஷன் ஏற்படும். நெவர்கோ. அப்படியே உதறி ஓடிவந்துடு.

நுரையீரல் நல்லா இல்லேன்னா, ரொம்பதூரம் நடக்கமுடியாது. தினம் ராத்திரி குடிச்சா வெயில்ல அலைய முடியாது. அலைஞ்சா தூக்கம் வரும். அதனால திரும்பத் திரும்ப சொல்றேன். சிகரெட் குடிக்காதே தண்ணீ போடாதே.

நல்லா சாப்பிடு. நிறைய நட.” பலதும் நண்பர்கள் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் எல்லோருமே நாலாயிரம் ரூபாய் சம்பளமும் ஒரு திருமணமும் என்ற எல்லையில் முடிந்தவர்கள்.

சினிமாவிற்கு பாடல் எழுதவேண்டுமென்று ஆசைப்பட்ட பையனை அவர்கள் அவசரமாய் விலக்கி விட்டார்கள்.அவன் இரண்டுபிரசுரமான கவிதைசொன்ன போது ‘இதோ வந்துடறேன்’ என்று இடத்தை காலி செய்தார்கள்.

அவன் போனபிறகு மறுபடியும் கூடினார்கள்.

“என்னடா இது. தமிழ்ல கவிதை சொல்லி உயிரை வாங்கறான். பைத்தியம் பிடிச்சு அலையப்போறான் பாரு. பிரசாத். இன்னொரு விஷயம் சொல்றேன் கேட்டுக்கோ...தயவு செய்து கவிதை, கதை பக்கம் போகாதே. அது உனக்கு உதவாது, மாறாக இடைஞ்சல் பண்ணும். நம்ம லாங்வேஜ் இங்கிலீஷ். அதை இம்ப்ரூவ் பண்ணிக்கோ.

தமிழுக்கு திரும்பினா இங்கிலீஷ் புடுங்கிக்கும். முடிஞ்ச வரைக்கும் இங்கிலீஷ்லியே பேசு. இங்கிலீஷ் லேயே யோசி. அப்படி ஏதாவது பாஷை கத்துக்கணுமா. ஹிந்தி கத்துக்கோ. ஹிந்தியோட பஞ்சாபியோ, குஜராத் தியோ கத்துக்கோ.

“நம்ம சிவகாசி நாடார் பாக்கறதுக்கு அப்பாவியா நின்னுகிட்டிருப்பான். எவ்ளோ வேகமா ஹிந்தி பேச றான் தெரியுமா. குஜராத்தி பேசற நாடாரையெல்லாம் எனக்குத் தெரியும். அவனுக்கும் கவிதை சொன்னா புரி யாது. வியாபாரிக்கு எதுக்குப்பா கவிதை.”

அந்தக் குழு தெளிவாக இருந்தது. தெளிவாக இருந் தவர்களையே சேர்த்துக் கொண்டது. “லவ் பண்ணு. தப் பில்லை, கல்யாணம் பண்ணிக்க முடிஞ்சா லவ் பண்ணு. சுய ஜாதிப் பெண்ணாவே பாத்து லவ் பண்ணு. உன் லெவலை விட ஜாஸ்தி போகாதே. உன் லெவலுக்கு கீழே இறங்காதே. ஈக்குவெல் லெவல்லே பாரு.” உபதே சித்தார்கள்.

“நான் லவ் பண்ணித்தான் கல்யாணம் பண்ணிண் டேன். கிழக்கு மாடவீதி ராஜகோபால ஐயங்கார் பொண்ணு சகுந்தலா. நம்ம மாதிரியே ஒண்டிக் குடித்த னம். அவ அப்பாவும் கம்பெனி கிளார்க். அம்மா ஸ்கூல் டீச்சர். பொண்ணு டெலிஃபோன் ஆப்ரேட்டர்.

“அடடா…நமக்கு சரியா இருக்குமேன்னு எனக்கு தோணித்து. சகுந்தலாவை கோயில்ல பாத்து, உங்க ஆபீஸ் டெலிஃபோன் நம்பரைக் கொடுங்க. உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும்னு சொன்னேன். அவ எமகாதகி. பயப்படவேயில்லை.

நிறைய பேசணும்னா லஞ்சு ஹவர்ல பேசுங் கோன்னு சொல்லிட்டுப் போயிட்டா.

அதுக்கு என்ன அர்த்தம். நிறைய பேசலாம்னு அர்த் தம். ஆனா, நான் நிறைய பேசலை.



சகுந்தலா உன் ஜாதகம் வேணும்மா எனக்கு வரன் பாத்துண்டிருக்கா. உங்க பக்கம் என்ன உத்தேசம்னு கேட்டேன்.

எனக்கும் பாத்துண்டிருக்கா. நான் ஜாதகம் போஸ்ட்ல அனுப்பறேன். நான் அனுப்பினதை சொல் லாதீங்கோன்னா,

நம்ம திருவல்லிக்கேணிஜோஸியர்லைன்பார்த்தசாரதி கிட்டதான் காண்பிச்சேன். நன்னா பொருந்திருக்குடா. முடிச்சிடுன்னு சொன்னார்.

நான் என் சேலரி கவரை எடுத்துண்டு, ஒரு ஞாயிற் றுக்கிழமை. கார்த்தால, அவ அப்பாகிட்ட கொடுத்தேன்.

நாலாயிரத்து இருநூறு ரூபா சம்பளம் பேட்டரி கம்பெனியில வேலை. மாசத்துல பாதி நாள் டூர் போக ணும். அஞ்சு வருஷம் ஆச்சுன்னா டூர் குறைச்சு, சேர்ல உட்கார வைச்சிடுவான். ரிடையர் ஆகறபோது, பதி னைஞ்சாயிரம் ரூபா சம்பளம் வரலாம். கெட்டபழக்கம் ஒண்ணுமில்லை. எப்பவாவது பீர் குடிப்பேன். எப்பவா வது வெத்தலைபாக்கு போடுவேன்னு சொன்னேன்.

அவாளுக்கு என்ன பிடிச்சிபோச்சு. அப்பா, அம்மா, பொண்ணு. அண்ணான்னு எல்லாரும் கேள்வி கேட்டா. எல்லாத்துக்கும் பதில் சொன்னேன்.

முப்பது பவுன்நகை கேப்பான்னு சொல்றேள். அத்த னைக்கு? நான் ரெடியா இல்லை. ஒரு ஒரு வருஷம் காத்திருந்தா உறவுக்காரனை கெஞ்சிக் கூத்தாடி துண்டு விழற பத்து பவுனை சரி பண்ணிடறேன். காத்திருக்க முடியுமான்னு கேட்டா.

நான் பொண் பாக்கறதுக்கு எங்க வீட்ல எல்லாரை யும் கூட்டிண்டு போனேன்.

போயிட்டு வரேன்னு எழுந்திருக்கறச்சே, எங்க அப்பாவைப் பாத்து, எனக்கு கல்யாணம்னா அது இவளோடதான். அதே நேரத்திலே உங்க மரியாதையையும் குறைச்சுக்க வேண்டாம்னேன்.

சரியா பதினோரு மாசம் கழிச்சு, கல்யாணத்துக்கு தேதி வைச்சாங்க. அந்த பதினோரு மாசமும்கீழ வீதியே தான் கதி.

லவ்வான லவ்வு. பேச்சன்னா பேச்சு. சிரிப்பான சிரிப்பு. அதுவும் எப்படி. அப்பா அம்மா அனுமதியோட.

இந்தக்காதல் கல்யாணத்துல முடிஞ்சதுக்கு காரணம் ஒழுக்கம்

பொண்ணு பெத்தவனுக்கு காதல்னா எவ்ளோ பயமிருக்குங்கிறது உனக்கு பெண் பிறந்தாதான் தெரியும்.

காதலிக்கிறியோ கல்யாணம் பண்றியோ, அதுக்கு முன்னாடி உனக்கு தேவை ஒரு நல்ல வேலை. அதை விட முக்கியம் நல்ல பெயர். இதெல்லாம் உம்மேல ஒரு நம்பிக்கை கொடுக்கும்.

நம்பிக்கை வந்துடுத்துன்னு வைச்சுக்கோ. பெத்தவனே தன் பெண்ணை நம்மகூட சினிமாவுக்கு அனுப்புவான்.

ஸ்பெஷல் பேட்டரி மார்க்கெட்டிங் பண்ணப்போறோம். அதுக்கு டெக்னிக்கல் டிரெயினிங்கா கோவால ஒரு மாசம் போஸ்ட்டிங் போட்டிருக்கான். அடுத்த ஒரு மாசம் சேலம் பெங்களூர் ரூட்ல லாரி லாரியா நிறுத்திப் பேசி, சர்வே எடுக்கணும். நாளைக்கு ஊருக்கு கிளம்பறேன். இன்னிக்கு உங்க பெண்ணோட சினிமாவுக்கு போகட்டுமான்னு அப்பனைக் கேட்டேன்.



ஒரு செகண்ட் யோசனை பண்ணினார். சரி போன்னு சொன்னார.

மறுபடி கூப்பிட்டு, மவுண்ட்ரோடு பக்கம் போகாதே கே.கே.நகர் பக்கம் கூட்டிட்டுப் போன்னார். எனக்கு அவர் பயம் புரிஞ்சுது.

நான் பரங்கிமலை ஜோதிக்கு கூட்டிட்டுப் போய்ட்டேன்.

ரெண்டு மாசம் மாடு மாதிரி உழைச்சதிலே மூணு சவரனுக்கான காசு கிடைச்சுது. ஒரு ஜதை வளையல் வாங்கி, அவ அப்பா கையில கொடுத்து இதை உங்க கணக்குல சேத்துக்கோங்கோன்னு சொன்னேன்.

அந்த மனுஷன் தலையைக் குனிஞ்சிண்டு உக்கார்ந்துட்டார். வாங்கறதுக்கு பயந்தார்.

பொண்ணை சினிமாவுக்கு கேட்டவுடனே அனுப்பிச்சீரே...அது எவ்ளோ உற்சாகம் கொடுத்ததுன்னு எனக்குத்தான் தெரியும். அந்த நன்றிக்குதான் இதப்பண்றேன். மறுக்கப்படாதுன்னு கெஞ்சினேன்.

அன்னிலேருந்து இன்னிவரைக்கு என் மாமனார் எனக்கு ஸ்நேகிதம்.

ராமானுஜம் வாடா பீச்சுக்குப்போகலாம்னு தன் பிள்ளை மாதிரி என்னை கூட்டிகிட்டு போவார். கோயிலுக்கு நான் வர்றவரைக்கும் காத்துகிட்டிருப்பார். எனக்கு ப்ரமோஷன் கிடைக்கணும்னு சுதர்சன மந்திரம் சொல்றார்.

மறுபடி சொல்றேன். இந்த எல்லா பிரியத்துக்கும் கீழே உண்டான விஷயம் ஒழுக்கம்.''

உலகில் எல்லோருக்கும் நல்ல நண்பர்கள் கிடைப்பதில்லை. அப்படி கிடைத்தாலும் பல பேர் அதை பயன்படுத்திக் கொள்வதில்லை.

பிரசாத்துக்கு கிடைத்தது. அவன் பயன்படுத்திக் கொண்டான். ஒழுக்கம் என்ற கேடயத்தைநண்பர்களிட மிருந்து பெற்றான். உழைப்பு என்கிற கத்தியை தந்தையி டமிருந்து வாங்கினான். சற்றும் மனம் தளராத விக்ரமா தித்தன் போல் வெட்டி வெட்டி முன்னேறினான்.

ஆனால், எதை நோக்கி முன்னேறுகிறோம் என்பது தான் அவனுக்கு புரியாமலிருந்தது.

இனிமே, உனக்கு நல்லகாலம். உடம்பெல்லாம் இனிமே, உனக்கு நல்லகாலம்' என்று அந்தக் கிழவர் எறும்பூறினா அதான் அர்த்தம்' என்று அந்தக் கிழவர் சொன்னாலும், நல்ல காலம் எப்போது வரும் என்ற ஏக்கம் இருக்கத்தான் செய்தது.

## 2

விஸ்வநாதனின் ரேடியோக் கடை போல, மேற்கு மாடவீதி இளைஞர்கள் கூடுகின்ற இன்னொரு இடம் உண்டு. அது சபாபதியின் கடை.

சபாபதி ஒரே பள்ளிக்கூடத்தில் பிரசாத்தோடு படித் தவன். பத்தாவது படிப்பதற்குள் இரண்டு மூன்று வரு டங்கள் ஒரே வகுப்பிலும் சேர்ந்து படித்தார்கள். பிரசாத் நன்றாகப் படிப்பான் என்பதால் சபாபதியை கைப்பிடி யாக அவன் தகப்பனார் அழைத்து வந்து, நீ படிக்கும் போது இவனையும் சேர்த்துக்க தம்பி, எப்படி படிக்க ணும்னு சொல்லிக்கொடு'' என்று பேசினார்.

சபாபதி அவன் தகப்பனார் அகன்ற பின்னும் பிர சாத் எதிரே கைகட்டி, மௌனமாக நின்றான்.

''நீ எதிலேடா வீக்'' ஒன்பதாவது படிக்கும் பிர சாத் சபாபதியைக் கேட்டான்.



''இங்கிலீஷ், கணக்கு ரெண்டுத்திலயும்.''

''மத்தது சாமளிச்சிடுவேயில்லை...''

''நல்லாவே செய்வேன்.''

''விடு. நான் பாத்துக்கறேன்'' வராண்டவில் பிரசாத் சபாபதிக்கு கணக்குப் போட சொல்லிக் கொடுத்தான்.

பத்தாவது பொதுத்தேர்வு. பிசாசு மாதிரி இரண்டு பேரும் படித்தார்கள்.

கடைப் பக்கம் நடந்து போன போது சபாபதியின் அப்பா பிரசாத்தை கைதட்டிக் கூப்பிட்டார்.

''கணக்குல எத்தனை மார்க் வரும்னு சபாபதியைக் கேட்டேன். பட்டுன்னு தயங்காம நூத்துக்கு நூறு வரும் னான். நூத்துக்கு நூறு வாங்கறோனோ இல்லையோ அவன் சொன்ன தோரணை எனக்கு பிடிச்சிப் போச்சு. கடையில நுழைஞ்சவுடனே இங்கிலீஷ் பேப்பர் படிக்கி றான். அதுவும் சந்தோஷமா இருக்கு.

யாரோ வெள்ளைக்காரங்க கோயிலுக்கு கைடு வேணும்னு கேட்டாங்க. இவன் நான் போறேம்பான்னு எகிறி குதிச்சி ஓடிட்டான்.

கூடவேயிருந்து மயிலாப்பூர், அடையார் ஆலமரம், கோட்டை மியூஸியம் எல்லாம் காமிச்சு, பாண்டிச்சேரிக்கு பஸ் ஏத்திவிட்டான். சொளையா நூறு ரூபா கொடுத் தாங்களாம். அப்படியே கொண்டாந்து எங்கிட்ட கொடுத் தான்.

நீ சம்பாதிச்சதுடா நீயே வைச்சுக்கன்னேன்.

எனக்காக எவ்ளோ செலவு பண்ணிருக்கேப்பா. நான் சம்பாதிச்ச முதல்காசு, இது உனக்குத்தான்னுட்

டான். என் பிள்ளை இப்படி தெளிவா பேச மாட்டானான்னு நான் ஏங்கியிருக்கேன். உன் ஸ்நேகிதம் கிடைச்சதிலேருந்து அவன் நல்லாருக்காம்பா. பாடம் நல்லா படிக்கிறோம் இங்கிலீஷ் நல்லா பேசுறோம்னவுடனே அவனுக்கே ஒரு நம்பிக்கை வந்துடுச்சு, எல்லாம் உன்னால தான். நான் ஒண்ணும் பணக்காரனில்லை. ஏழை. இந்தா. என்னால முடிஞ்சது...''

ஒரு பாட்டிலுள்ள தேங்காய் பிஸ்கட் மொத்தமும் கவிழ்த்து, ஒரு பட்டை சாக்லேட்டோடு தூக்கிக் கொடுத்தார்.

பிரசாத் கொஞ்சம் தயங்கி, பின்னர் ஆசையாக வாங்கிக் கொண்டான். பிளாஸ்டிக் பையை சட்டையில் மறைத்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினான்.

''நீ வாங்கி இருக்கவே படாது. இதென்ன கெட்டப் பழக்கம். படிப்பு சொல்லிக் கொடுக்கிறது மகா புண்ணியமில்லையா... அது பிஸ்கட்டோட போகணுமா. எவ்ளோ அல்பன் நீ.'' அம்மா கடிந்து கொண்டாள். தங்கை இழிவாகப் பார்த்தாள். பிஸ்கட்டை முகர்ந்து பார்த்துவிட்டு, 'எனக்கு வேண்டாம்பா' என்று தூக்கிப் போட்டாள்.

பிரசாத்துக்கு வருத்தமாகி விட்டது.

அப்பா வந்ததும் பிஸ்கட்டை, வீடு அவர் முன்னே வைத்தது. விஷயம் சொல்லிற்று.

''அடி போடி... நம்ப குழந்தைக்கு கடைக்காரன் ஆசையா கொடுத்திருக்கான். இவனுக்கு சம்பளமாவா கொடுத்திருக்கான்.

இதை சம்பளம்னு அந்த கடைக்காரன் நினைச்சா, அவனுக்குத்தான் பாவம்.'' அப்பா பொரிந்து தள்ளினார்.



''உண்மையிலேயே அந்த சபாபதி வந்து படிச்சது நம்ம பிரசாத்துக்குதான் நல்லது. அவனுக்கு கத்துக் கொடுக்கிற சாக்கிலேயே தரோவா ரிவைஸ் பண்ணிருப்பான்.

நூறு மார்க் சபாபதி வாங்கறானோ இல்லியோ, இவன் வாங்கணும். வாங்குவியாடா...''

''ஒரு ஆன்ஸ்வர் எடுத்து எழுதலைப்பா பேப்பர் பிடுங்கிட்டாங்க. தொண்ணூத்தி ஒம்பது வரும்.''

அப்பா சிரித்து விட்டு, ஒரு தேங்காய் பிஸ்கட் எடுத்துக் கொண்டார். தங்கை ஆறேழு அள்ளிக் கொண்டாள். அம்மா பாதியைப் பிரித்து டப்பாவில் போட்டுவிட்டு, மீதியை பக்கத்து வீட்டு குழந்தைகளுக்கு கொடுத்தாள்.

ரிசல்ட் வந்த போது பிரசாத் தொண்ணூத்தி ஒன்பது. சபாபதி நூறு.

சபாபதி தலைகால் தெரியாமல் குதித்தான். பார்த்தசாரதி கோயிலின் எல்லா சன்னதியிலும் விழுந்து விழுந்து வணங்கினான். திருப்பதிக்குப் போய் மொட்டையடித்துக் கொண்டான்.

அவனுக்கும், பிரசாத்துக்கும் ஒரே கலரில் சட்டை எடுத்து, ஒரே டெய்லர் கடையில் தைக்கக் கொடுத்தான்.

ஆனால், சபாபதியின் சந்தோஷம் நிலைக்கவில்லை. அவன் அப்பாவிற்கு ரிசல்ட் வந்த மூன்றாவது மாதம். இருதய நோய் வந்து உடம்பின் வலதுபக்கம் விழுந்து விட்டது.

கடை பத்து நாள் மூடியிருந்தது.

பள்ளிக்கூடத்தைவிட்டு நின்றுவிட்டு, சபாபதி கண்ணீரோடு கடையை கவனித்துக்கொண்டான்.

மொத்த திருவல்லிக்கேணியும் அவனுக்காக வருத்தப்பட்டது.

‘‘என்ன முதலியார். நல்லா படிக்கிற பையனை பள்ளிக்கூடத்துக்குப் அனுப்பாத, கடைக்கு வைச்சு கிட்டே...உன் பையனை நான் படிக்கவைக்கிறேன்யா. லயன்ஸ் கிளப்புல டொனேஷன் வாங்கி, காலேஜ் போறவரைக்கும் நான் படிக்கவைக்கிறேன்யா.’’

‘‘பெருமாளே...நகையை வித்து நானும் படிக்க வைச்சிடுவேங்க...அவன் படிச்சா மட்டும் போறாது. சம்பாதிக்கணும்.

எனக்கு ரெண்டு பொண்ணுங்க இருக்கு ஐயா. ரெண்டு பொண்ணுங்களும் சபாபதிவிட பெருசு. இவன் படிப்புக்காக நான் நகையை வித்தா, அதுங்களுக்கு கல்யாணமாகாது.

வேலையே இல்லாத சொந்தக்காரப் பையன்கூட, பத்துப்பவுன் கேக்கிறான். கல்யாணம்னா மூவாயிரம் ரூபா வரதட்சணை கேக்கறான். சம்பாதிக்கறதை நிறுத்தினா முடியுமா...இந்த மாதிரி மூலக்கடை வேற எங்கியாவது கிடைக்குமா.

எதுக்கு படிக்கிறது? சம்பாதிக்கிறதுக்கு. எதுக்கு சம்பாதிக்கிறது...?சந்தோஷமா இருக்கிறதுக்கு. படிக்காமயே சந்தோஷமா சம்பாதிக்கறதுக்கு நான் வழி சொல்லித் தரேன். இப்பமே சபாபதிய நல்ல வியாபாரியா ட்ரெயின் பண்ணிடறேன்.

உங்க மாதிரி ஐயருங்களுக்குத்தான் படிப்பு முக்கியம். ஆபீஸ் வேலை வேணும். எங்கள மாதிரி வியாபாரிக்கு இந்த படிப்பே அதிகம்.’’

அப்பா பேசுவது பிள்ளைக்கு புரிந்து போயிற்று.



சபாபதி எவர் பரிதாபத்தையும் லட்சியம் செய்யாமல் வியாபாரத்தில் மூழ்கினான். இரண்டு தமக்கைகளுக்கும் நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்தான்,

இருபத்தி ஏழு வயதில் பிரசாத் ரெண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறபோது, மாதம் இருபதாயிரம் லாபம் காட்டும் பெரிய ஷாப்பாக கடையை மாற்றிவிட்டான்.

விஸ்வநாதன் கடைக்கு பக்கத்திலுள்ள ஒரு அம்மாள் காரணமின்றி இந்தக்கூட்டத்தை கண்டித்தபோது, கூட்டம் சபாபதி கடைக்கு இடம் பெயர்ந்தது.

ஊர் அடங்கியபிறகு ஒன்பது மணிக்குமேல் தெருவில் பெண்கள் நடமாட்டம் குறைந்தபிறகு அவர்கள் கூடுவார்கள்.

வார நாட்களில் பத்தரை மணிவரை இருக்கும். சனிக்கிழமைகளில் பனிரெண்டுவரை சபாபதி கடை பெஞ்சில் உட்கார்ந்திருக்கும்.

மிக வெக்கையாக இருக்கும் நாட்களில் சபாபதி கடையிலிருக்கும் ஃபெடஸ்டல் ஃபேனை வெளியேயிருக்கும் பெஞ்சில் வைத்து சுழலவிடுவான்.

அவர்கள் பேச்சில் பங்கு கொள்ளாமல் அவர்கள் பரிமாறிக்கொள்ளும் தகவலை ஆவலோடு கேட்டுக் கொள்வான்.

அங்கே கூடுகிற பதினைந்து பேரில் ஒரு மூன்று பேருக்குத்தான் சபாபதி ஒரு பெண்ணை நேசிப்பது தெரியும்.

சபாபதியின் தமக்கையோடு ஒன்றாய் படித்த அந்தப் பெண் ஒரு வருடத்திற்கு முன்புதான் விதவையானாள்.

அவளை துக்கம் கேட்கப்போன சபாபதி, தான் பத்தாவது பாஸ் செய்த நாளிலிருந்து அவளைக் காதலிப்பதாகச் சொன்னான். மறுமுறை திருமணம் செய்து கொள்ள தயாராய் இருப்பதாகச் சொன்னான்.

''வாழ்க்கையில நான் ரொம்ப கஷ்டப்பட்டுட்டேன் சபாபதி. நீயும் வேற என்னை படுத்தாதே'' ரெண்டே வார்த்தையில் அவள் அவனைப் புறக்கணித்தாள்.

ஆனால், சபாபதி விடவில்லை. இடைவிடாமல் தன் அன்பை வெவ்வேறு விதமாக வெளியிட்டுக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் கல் கசிந்தது. அவன் காதலுக்கு சம்மதம் தெரிவித்தது. காத்திரு என்று கட்டளையிட்டது.

''இந்தக் கடை, கோயில் குத்தகை. பதிமூணு ரூபா அம்பது பைசா மாச வாடகை. ஆனா திருவல்லிக்கேணியில் சொந்த வீடு இல்லாம, ஏடாகூடமா கல்யாணம் பண்ணிக்க முடியுமா, காசு பாக்க வேண்டாமா. என்ன செய்தா காசு பாக்கலாம்?'' சபாபதி கேள்வி கேட்டான்.

''நியாயமாவா. அநியாயமாவா...'' நண்பர்கள் பதிலுக்கு கேள்வி கேட்டார்கள்.

''நியாயமாதான் சம்பாதிக்கணும்.'' சபாபதி பதில் சொன்னான்.

அங்கே பிரசாத் உட்பட மற்ற இரண்டு பேரும் விற்பனையாளர்கள்தான்.

''கடையை அடமானம் வை. மூணு லட்ச ரூபா வாங்கு. இன்னொரு மூணு லட்ச ரூபா எங்கனாவது தேத்து. பேப்பர்ல போடு. மாசா மாசம் வருஷா வருஷம் பேப்பர் விலை ஜாஸ்தியாவும். ஒரு பெரிய தொகை கடன்



கொடுத்தான்...மூணு மாசத்துல கடனா பேப்பர் கொடுத்தான்...நீ சில்லறையா கொடுத்து துட்டு அள்ளலாம்.

ஆனா, பேப்பர் வியாபாரம் மொத்தமும் மார்வாடிகிட்ட இருக்கு. மார்வாடிப்பசங்க காசு கையில இருந்தாலே மூஞ்சி கொடுத்து பேசமாட்டான்...எப்படி கடன் கொடுப்பான்.

ஒரு ஐடியா சொல்லித்தரேன். சுத்து வட்டாரத்துல ஆயிரம் பள்ளிக்கூடம் இருக்கு. ஒரு நாலு பள்ளிக்கூடம் பிடி. உங்க பள்ளிக்கூடத்துக்கு பேர் போட்டு, நோட்டு பண்ணித் தரேன்னு ஆர்டர்வாங்கு. பன்னெண்டு வகுப்பு. ஒரு வகுப்புக்கு மூணு செக்ஷன். ஒரு செக்ஷனுக்கு ஐம்பது பசங்க. ஒரு குழந்தைக்கு இருபது நோட்டு. கணக்கு போடு.

முப்பத்தி ஆறாயிரம் நோட்புக். நாலு பள்ளிக்கூடம்னா லட்சத்தி நாப்பத்தி நாலாயிரம் நோட்புக், ஒரு நோட்புக்ல சராசரி எழுவது பைசா லாபம்வை. எங்கியோ போயிடும்.''

நண்பர்கள் சபாபதிக்காக, இந்த விஷயத்தை பல்வேறு கோணங்களில் யோசித்தார்கள்.

பேப்பர் விலை, லேபர் டிரான்ஸ்போர்ட் கமிஷன், பைண்டிங் என்று பலதும் கணக்கிட்டார்கள். கிடங்கு வாடகை தெரியாமல் அலை மோதினார்கள்.

'ஆர்டர் பிடிச்சிட்டு பேப்பர் வாங்கறதா. பேப்பர் வாங்கிட்டு ஆர்டர் பிடிக்கிறதா.' தங்களுக்குள் விவாதித்தார்கள்.

ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வீட்டிற்கு இரண்டாயிரம் ரூபாய் வாடகை கொடுத்து, அங்கே பேப்பர் கொண்டு வந்து இறக்கினார்கள்.

“நீ வந்து பால்காய்ச்சு” என்று அந்த விதவைக் காதலியை சபாபதி வற்புறுத்தினான். அவள் பல்வேறு காரணங்களை சொல்லி மறுத்தாள்.

“நீ இல்லையெனில் இந்த முயற்சி எதுவும் எனக்கு முக்கியமில்லை” என்று அவன் சொல்ல, அவள் பார்த்த சாரதி பெருமாள் படம் மாட்டி, பால் காய்ச்சினாள். வந்திறங்கிய முதல் பண்டலுக்கு சந்தனம் குங்குமம் வைத்தாள். சுவற்றில் ஸ்வஸ்திக் வரைந்து ‘லாபம்’ என்று எழுதினாள்.

“டேய்...ஆர்டர் கிடைக்கலை அல்லது கிடைக்குது. நாலு பள்ளிக்கூடத்துக்கு நீயா நூறு நூறு நோட்டுப் தயார் பண்ணு. போய் விலை சொல்லு. மெட்டிரியல் பார்த்தா தானா படிவாங்க.”

நண்பர்கள் தங்கள் வேலை நேரம் போக, சபாபதி வாடகைக்கு எடுத்த ஓட்டு வீட்டில் கூடி இதை விவாதித் தார்கள்.

முற்றம், வராண்டா, ஒரு ஹால், இரண்டு ரூம் ஒரு கொல்லைப்புறம் என்று அகண்டிருந்த அந்த போர்ஷனை பிரசாத் சுற்றி சுற்றி வந்தான். ‘ரெண்டாயிரம் ரூபா வாடகையா ரெண்டாயிரம் ரூபா வாடகையா’ என்று அதிசயபபட்டான்.

இங்கு பீரோ, இங்கு கட்டில், இங்கு சமையல் கேஸ், இங்கு துணி உலர்த்த, இங்கு பாத்திரம் தேய்க்க, இங்கு பேப்பர் படிக்க... என்று கண்களால் தடவினான்,

“என்னடா அப்படி பாக்கறே” என்று சபாபதி கேட்க, “வீடு ரொம்ப நல்லாருக்குடா” என்று சொல்லி சந்தோஷப்பட்டான்.



“பழையவீடா இருந்தாலும் எங்கியோ ஒரு நல்ல அம்சம் இந்த வீட்ல இருக்கு. அது என்ன, எங்கேன்னு எனக்குத் தெரியல, ஓடுதான்... அங்கங்கே பக்காவா கண்ணாடி வச்சு. பிரைட்டா பண்ணிருக்காங்க. தெற்கத் திகாத்து அடுத்தவீட்டு சுவத்துல மோதி, முற்றத்து வழியா வீட்டுக்குள்ள வருது. மழை பெஞ்சா கொஞ்சம் கஷ்டமா இருக்குமோ...”

பிரசாத் நண்பர்களை விட்டுவிட்டு மறுபடியும் வீட்டைச் சுற்றி வந்தான்.

“சமையலறை இவ்ளோ பெருசா இருக்கக்கூடாது. லேடீசுக்கு கஷ்டம். அப்புறம் ஷெல்ஃபே இல்ல.” பிரசாத் தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

அந்த வீடு அவனுடையதாக இருக்காதா என்ற ஆதங்கம் அதிகமிருந்தது.

“அவன் வீட்டப்பத்தி ஏதோ பேசிகிட்டே இருக்கான், நீயும் அவன் கூடயே போய்க்கிட்டிருக்கே...என்னாச்சு உங்களுக்கு.”

“இல்லடா...இவன் கரெக்டா சில விஷயம் சொல் றான். வீடு பத்தி அக்கறையா தெளிவா பேசறான்.”

“இது உனக்கு வீடுயில்ல. கோடவுன்.”

“இப்போதைக்கு அப்படித்தான். ஆனா, இதை வாங்கிடணும்னு ஒரு ஆசை வந்துருச்சு. மேல வீதியில இப்படியொரு இடம் வாங்கணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசை. இப்பதானே காலெடுத்து வெச்சிருக்கேன் உங்க உதவியால...”

“என்னடா...நாங்க என்ன உதவி பண்ணினோம். எவ்ளோ பெரிய ரிஸ்க் எடுக்கப் போறேன்னு எங்களுக் குத்தான் தெரியும். ஜாக்கிரதையா பண்ணு பெருமாள வேண்டிக்கோ.”

மூன்று லட்ச ரூபாய்க்கு பேப்பர் வந்த போது பயமாக இருந்தது. ஒரு லட்ச ரூபாய்க்கு அட்டை வந்தபோது யாருக்கும் எதுவும் பேசத் தோன்றவில்லை.

மாதிரி நோட் புத்தகங்களை தயார் செய்து சபாபதி பள்ளிக்கூடங்களை சுற்றி வந்தான். தலைமையாசிரிய ருக்கு சால்வை போர்த்தி, கேக் கொடுத்து, ஒரு நோட் புக்கிற்கு பத்து பைசா கமிஷனென்று ஒப்பந்தம் செய்து கொண்டு, இரண்டு பள்ளிக் கூடங்களில் ஆர்டர் பிடித் தான்.

பெண்கள் பள்ளிக்கூடத்தில் கமிஷன் வாங்க பயந் தார்கள். நானூறு ரூபாய் புடவைகள் பத்து கொடுக்க. ஆர்டர் தரவேண்டிய டீச்சர் சந்தோஷமாய் வாங்கிக் கொண்டாள். இன்னும் பத்துப் புடவைகள் ரவிக்கைத் துணியோடு வேண்டுமென்று கேட்டாள்.

ஆர்டர் கிடைத்துவிட்டது. நிறைவேற்ற வேண்டும். ஆர்டரை நிறைவேற்ற கால நிர்ணயம் இருந்தது. கால நிர்ணயத்தை புரிந்து கொண்ட தொழிலாளிகள் கூடுதல் காசு கேட்டார்கள், அட்வான்ஸ் கேட்டார்கள்:

அச்சகத்தில் பேப்பர் களவு போயிற்று. சபாபதி திண்டாடினான். அடிக்கடி கோபப்பட்டான், இரண்டா யிரம் ரூபாய் அட்வான்ஸ் வாங்கின ஒரு பைண்டர் எங்கு போனானென்றே தெரிய வில்லை.

அவன் வீடு ரவுடிகளின் இருப்பிடமாக இருந்தது.

“ரெண்டாயிரம் ரூபா வாங்கிட்டு ஓடிப் போயிட் டானா... ஒரு ஆயிரம் ரூபா கொடு அவனை மடக்கிப் பிடிச்சி இட்டாரேன்.” கேலியாய் சிரித்தார்கள்.

வேலை நடக்காதது மட்டுமல்ல. வெறுப்பும் வளர்ந் தது.



கூடுதல் காசு ஆசை காட்டி, நன்கு வேலை செய்ப வரை தட்டிக் கொடுக்க, இரண்டு பள்ளிக்கூடங்களுக்கு குறித்த நேரத்தில் சப்ளை செய்ய முடிந்தது. பெண்கள் பள்ளிக் கூடத்திற்கு ஒரு வாரம் தாமதமாக நோட்டுப் புத்தகங்கள் இறங்கிற்று.

கடைசியில் கணக்கு பார்க்க நாற்பது பைசா மிஞ்சி யது.

ஆனால் மறுவருடம் தானாகவே பல பள்ளிக்கூடங் கள் வந்தன.

“பத்தும் பத்தும் இருபது புடவைங்க குடுத்தீங்க ளாமே... நாங்க மூணு பேர் இருக்கோம். எங்களுக்கு ஆளுக்கு பதினைஞ்சு புடவை கொடுக்கணும். எனக்கு மட்டும் கூட பத்து புடவை ரகசியமா கொடுக்கணும்.” ஒரு டீச்சரம்மாள் பேசினாள்.

சபாபதி பேயாய் அலைந்தான். உறவுக்காரப் பையனை கடையில் போட்டுவிட்டு, நோட்டுப் புத்தகங் கள் தயாரிப்பதில் முழு கவனம் காட்டினான்.

பதினாறு பள்ளிக்கூடங்கள் என்று ஆர்டர் வர, சப் காண்ட்ராக்ட் விட்டு விடலாமா என்று யோசித்தான்.

அந்த விதவைப் பெண் அவனுக்கு தைரியம் கொடுத்தாள்.

“எங்கப்பாகிட்ட வந்து பேசுங்க. நானும் கூடவே இருக்கேன்.” என்று சொன்னாள்.

நாலு நண்பர்களோடு பயந்து பயந்து ஒரு மாலை வேளையில் அவள் வீட்டு படியேறினான். அவள் அப்பா விடம் பெண் கேட்டான்.

அவர் தலைகுனிந்து பத்து நிமிடம் உட்கார்ந்திருந் தார்.

"நாலு ஸ்நேகிதக்காரங்கள கூட்டிண்டு வந்து வீட்டுப் படியேறி பொண்ணு கேட்டா, பொண்ணு பெத்தவனுக்கு சந்தோஷமா இருக்காது. அதுக்கு பதிலா பயம் வரும். கலவரமா இருக்கும்."

"நாங்கள்லாம் நல்ல வேலையில இருக்கோம் சார்." நண்பர்களில் ஒருவன் பதில் சொன்னான்.

"அது எந்த விதத்திலேயும் என் பயத்தைப் போக்காது. வெக்கமில்லாம சொல்றேன். நீங்க எல்லாரும் சேர்ந்து எம் பொண்ணை பங்கு போட்டுப்பேளோன்னு ஒரு பயம் வருது."

"கடவுளே..."

"என்ன சார் இது...?"

நண்பர்கள் விதிர்த்துப் போனார்கள்.

"நான் யாரையும் கேவலமா சொல்லலை. என் பயத்தினுடைய பரப்பளவைச் சொன்னேன்."

"இப்போ நாங்க என்ன பண்ணனும் சார்."

"திருவல்லிக்கேணியில வயசானவாளா, விவேகம் உள்ளவாளா, தம்பதிகளா ஒரு ஆறுபேர் கிடைக்க மாட்டாளா... இது நல்ல காரியம்னு மனசார பாராட்டறவா இருக்க மாட்டாளா... எத்தனை பேர் பாராட்டினாலும் இதை தூஷணையா பேசறத்துக்கு பத்துப் பேர் இருப்பாங்க. அவங்களப்பத்தி கவலையில்ல. ஆனா, பாராட்டறவங்க எட்டு பேரு இருக்கணும். அப்பதான், எனக்கு மதிப்பு, என் பொண்ணுக்கு மதிப்பு, என் பொண்ணுக்கு பிறக்கப் போற குழந்தைக்கு மதிப்பு."

"கொஞ்சம் யோசனை பண்ணிண்டு வர்றோம் சார்."

"நிதானமா வாங்கோ."



பிரசாத்தும் சபாபதியும், மற்ற நண்பர்களும் அதிர்ந்து போய் வெளியே வந்து அந்த கிடங்கிலே உட்கார்ந்தார்கள்.

"அவர் கேக்கறதிலேயும் நியாயம் இருக்கு. அவர் கேக்கறா மாதிரி ஆளுங்களுக்கு நாம எங்கே போறது. நல்லபடியான கல்யாணத்துக்கே திருவல்லிக்கேணியில இருக்கிறவன் ரேக்கிக்குவான். இதுக்கு கூப்பிட்டா யாராவது வருவானா. புடவை மெத்தட்தான்யா பண்ணணும்.

"என்ன புடவை மெத்தட்."

"பொன் வைக்கிற இடத்துல பூ வைக்கிறேன்னு அரை சவரன் பொன்னுல பூ வை. அதாவது, நாலு கிராம்ல தகடு தகடா ரெண்டு தோடு வை."

"ஏய்... பெரிய செலவுடா."

"இவன் கல்யாணத்துக்கு நான் எதுக்கு வரணும்னு யோசிப்பானில்ல... இதுக்கு வான்னு சொல்லப் போறோம். அவ்ளோதானே..."

"அரைபவுனுக்கு ஆசைப்பட்டு வந்துருவானா..."

"கொடுத்துப்பாரேன்."

"யாருக்கு...அதானே கேள்வி."

"அதே டீச்சருக்கு. வாத்தியாருக்கு. கொடுத்துப் பாரேன்."

"நல்லாருக்கே இவன் பேசறது. கொஞ்சம் அரசியலா, போலீஸ் ஆளா வந்து பாக்கலாம்."

"கரெக்ட், வாங்க போலீஸ் ஸ்டேஷன் போய் பாக்கலாம்."

அங்கிருந்த யாருமே இதுவரை போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனதில்லை. சபாபதிக்காக போனார்கள். விஷயம் சொன்னார்கள். இன்ஸ்பெக்டரை அவர்கள் இடத்திற்கு வரவழைத்தார்களா.

பள்ளிக்கூடத்தை சார்ந்தவர்களிடம் போய் விவரித்தார்கள். லோக்கல் எம்.எல்.ஏவைப் போய் பார்த்தார்கள்.

"உங்களுக்கு எவ்ளோ வேலைப்பளுன்னு எனக்கு தெரியும். ஒரு கல்யாணத்துக்கு வர்ற ரெண்டு மணிநேரம், நீங்க என்னென்னமோ வேலை செய்வீங்க. அந்த சபாபதி. சரிபண்ணனும்னு ஆசைப்படுறான். நல்ல பவுன் தோடு மோதிரம் போடணும்னு சொல்றான் பத் திரிகை வைக்கும்போதே கொடுக்கணும்னு சொல்றான். பத்திரிகைல உங்க பேர் போட்டுக்கலாம் இல்லீங் களா..."

இருபது பேர் வந்தால் இடம் போதாது என்பதால், பேப்பர் கிடங்கிலேயே பெண்ணின் தகப்பனாரோடு பேசுவதற்கு கூட்டம் கூடினார்கள்.

பெண்ணின் தகப்பனார் போட்டோகிராஃபரோடு வந்திருந்தார்.

"எனக்கு சம்மதம் நீங்கள்லாம் வந்து நடத்திக் கொடுக்கணும்."

எல்லோரோடும் ஃபோட்டோ எடுத்துக் கொண்டார்.

அது நோட்புக் சீஸன் என்பதால் ஐந்து மாதங்கள் கழித்து திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருவல்லிக் கேணி முழுவதும், ஒரு பிராமண விதவையை, இளம் பெண்ணை, சபாபதி திருமணம் செய்து கொள்ளப் போவது தெரிந்தது. விதம் விதமாய் பேசப்பட்டது. ஒரு



சாராரால் கண்டிக்கப்பட்டது. இன்னொரு சாராரால் ஆதரிக்கப்பட்டது கண்டிப்பதற்கும், ஆதரிப்பதற்கும் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சபாபதிக்கு ஒரேயொரு காரணம்தான் இருந்தது. அவன் அவளை வெறித்தனமாய் காதலித்தான். இன்னும் காதலித்துக் கொண்டிருக்கிறான்.

நண்பர்களோடு ஒரு சனிக்கிழமை மாலைப் பொழுதில் கணக்கு வழக்கு பார்த்துக்கொண்டிருக்கையில், ஒரு தூக்கு நிறைய உப்புமா கொழுக்கட்டை எடுத்துக் கொண்டு அவள் வந்தாள். பரிமாறினாள்.

நண்பர்களுக்கெல்லாம் ஆச்சரியம். ஆனந்தம்.

"உக்காரு பரிமளா" சபாபதி வேண்டிக்கொண்டதும், உட்கார்ந்தாள்.

நண்பர்களை வைத்துக்கொண்டே பத்தாவது படிக்கும்போது அவள்மீது ஏற்பட்ட காதலை அவளுக்குச் சொன்னான்.

அவளுக்காகவேதான் பேப்பர் வியாபாரம் ஆரம்பித்து விழிபிதுங்கிக் கொண்டிருப்பதை விளக்கினான்.

"இல்லேன்னா, வெறுமனே கடையில உக்காந்துகிட்டு அரசியல்ல இவன் அழிஞ்சிட்டான்னு அவன் வளர்ந்துட்டான்னு அக்கப்போர் பண்ணியிருப்பேன்.

காலையில ஒரு மணி நேரம் சாயந்திரம் ஒரு மணி நேரம் கடையில இருந்தாப் போறும். எப்பவேணா கடைக்கு வருவேங்கிற ஒரு பயமும் வேலை செய்றவனுக்கு கொடுத்துறணும்.

நாம அது பண்ணாத கடையில ரொம்ப வேலை இருக்கறதா ஏமாத்திண்டிருக்கோம். பத்து கஸ்டமருக்கு

அதை இதை எடுத்துக் கொடுத்துட்டு, ரொம்ப சோர்ந் துட்டா மாதிரி ஒரு டீ சொல்றோம்.

உண்மையா உழைக்கணும்னா பத்து மணிநேரம் சோர்வேயில்லாம உழைக்கலாம். அதுக்கொரு மனசு வேணும். உழைக்கிறதுல ஒரு ஆசை வேணும். ஒரு லட்சியம் வேணும்.

பரிமளா மேல காதல் திருவல்லிக்கேணியில ஒரு வீடு இதுதான் லட்சியம் இந்த லட்சியத்துல பரிமளாவே மறந்து போச்சு எனக்கு.

உக்காந்து உழைக்கிறதுல ஒரு புண்ணியம் இல்லை. அடுத்ததென்ன, அடுத்ததென்ன, அடுத்ததென்ன...வேலை செஞ்சுக்கிட்டே இருக்கணும். முதல் வேலை செய்து சோர்வாயிட்டா அடுத்த வேலைதான் ரிலாக்ஸேஷன்.

இதெல்லாம் இப்பதான் தெரிஞ்சிகிட்டேன். என்னால வேலை செய்யாம இனிமே இருக்க முடியாது.''

''உங்ககிட்ட ஒரு பிடிவாதம் இருக்கு.'' பரிமளா மெல்லிய குரலில் பேசினாள்.

''மனுஷாளுக்கு இந்த பிடிவாதம் ரொம்ப முக்கியம். எனக்கு இது வேணும். நான் இப்படி வளரணும் அப்படின்னு ஒரு வேகம் முக்கியம்'' பரிமளாவே தொடர்ந்து சொன்னாள்.

''நிறைய பசங்களுக்கு ஒரு அவ நம்பிக்கைதான் அடிக் குரலா இருக்கு. ரோஷமே இல்லாம இருக்காங்க. இது போறும்னு சுருண்டு கிடக்காங்க. யாராவது ரிஸ்க் எடுத்தா பக்கத்துல நின்னு கைதட்டறாங்க. தோத்துட்டா திட்டுவாங்க. எனக்குத் தெரியும் அவன் ஜெயிப்பான்னு சொல்லுவாங்க.



மத்தவங்களைப் பத்தியே நாம பேசிகிட்டிருந்தா, நம்மளப்பத்தி மத்தவங்க எப்போ பேசறது...ரிஸ்க் எடுத்தாதான் பேசுவாங்க.''

''வெரிகுட்.'' பரிமளாவின் பேச்சிற்கு பல்வேறு விதமாய் சபாபதி எதிரொலித்துக் கொண்டிருந்தான்.

சபாபதி பேசுவது எல்லாமுமே பிரசாத்திற்கு சரி யென்று பட்டது.

தன் வயதொத்த ஒரு இளைஞன் தன்னைவிட படிப்பில் சுமாரானவன், தன்னைவிட வேகமாய் முன்னேறிக் கொண்டிருப்பதை பிரசாத் உணர்ந்தான்.

இதை அதிர்ஷ்டமென்றா அழைப்பது, கொடுப்பினை யென்றா கூறுவது.

எங்கேயோ ஒரு உந்து சக்தி அவனுக்கு கிடைத்து விட்டது. சபாபதியின் உந்து சக்தி பரிமளாவா...அப்பா வின் நோய் கொடுத்த அடியா...படிப்பை பத்தாவதிலேயே விட்ட கோபமா...?

படித்து ஆங்கிலம் பேசுவதால் நான் மென்மையாகி விட்டேனா...டெம்போவில் பண்டல் இறங்குகிற போது, வேட்டியை மடித்துக் கொண்டு, ஐம்பது கிலோ பேப்பர் மூட்டையை தலையில் தூக்கிக்கொண்டு போய் சபாபதி தானே இறக்குகிறான். ஒரு பழைய ஸ்கூட்டரில் நாலா பக்கமும் அலைகிறான். ராத்திரி பனிரெண்டு மணிக்கு கடையில் சரக்கு லிஸ்ட் எடுக்கிறான்.

நானும் இப்படி ஏதாவது இயங்க வேண்டும். நானும் ஏதாவது ரிஸ்க் எடுக்க வேண்டும். இவர்கள் இழிவு படுத் தினாலும் பரவாயில்லை. நானும் ஏதாவது செய்ய வேண்டும்.

பிரசாத் திணறத்திணற யோசித்தான்.

''டேய் பிரசாத். எழுந்திரு போகலாம்.'' சட்டென்று இன்னொரு நண்பர் முதுகைத்தட்ட, சபாபதியையும் பரிமளாவையும் விட்டுவிட்டு அவர்கள் வெளியே வந்தார்கள்.

''அவங்க ஏதோ தனியா பேசணும்னு ஆசைப்படு றாங்க. அதான் வந்துட்டேன்.''

''உனக்கு எப்படித் தெரிஞ்சது'' பிரசாத் கேட்டான்.

''சபாபதி இடத்துல நான் இருந்தா எனக்கு என்ன தோணும்னு நான் யோசனை பண்ணினேன். அதான்... உடனே கிளம்பி வெளியே வந்துட்டேன். இங்க நம்ம கூடிப் பேசினாக்கூட அவங்களுக்கு கஷ்டமா இருக்கும் நம்மைப்பத்தி பேசுறாங்களோன்னு வெட்கம் வரும். நம்ம வேலையைப் பாக்க நாம போகலாம்.''

நண்பர்கள் பிரிந்து போனார்கள்.

மெல்ல மெல்ல அந்தப் பெண் அந்த கோடவுனை பார்க்க ஆரம்பித்தாள். கணக்கு வழக்குகள் கவனிக்க ஆரம்பித்தாள்.

பெண்ணின் தகப்பனாரும் தம்பியும், தம்பி மனைவி யும் வந்து உதவி செய்ய ஆரம்பித்தார்கள்.

திருமணம் மிக விமரிசையாக நடந்தது. மாலை மாற்றி தாலிகட்டி மோதிரம் அணிவிப்பதோடு முடிந்தது.

சபாபதியை பலர் பாராட்டினார்கள்.

சபாபதி நன்றி சொல்ல மைக் பிடித்தான். பிரசாத் உட்பட மூன்று நண்பர்களை மனமாரப் பாராட்டினான். மேடைக்கு அழைத்து சால்வை போர்த்தி ஒரு பவுனில் தங்கச்சங்கிலி போட்டான்.



நண்பர்கள் திகைத்துப் போனார்கள். 'எதுக்குடா இவ்ளோ' என்று கத்தினார்கள்.

''எத்தனை நாள், எவ்வளவு நாள் ராத்திரி எனக்காக கண் விழிச்சி கணக்கு போட்டுருக்கீங்க. நான் ஏதாவது பண்ண வேண்டாமா. இது பரிம்ளாவோட ஐடியா. காசே வாங்காத இவ்ளோ வேலை வாங்கறேளேன்னு வருத்தப்பட்டா. இப்போது அது மொத்தமும் குடும்ப வியாபாரமா போயிடுது.''

நண்பர்களுக்கு புரிந்தது.

இனி அங்கே அடிக்கடி போக முடியாது.

'எங்க நினைவா ஒரு பரிசு தர்றோம்' என்று சொல்லி, திருமணம் நடந்த நான்கு நாளுக்குப் பிறகு, ரெண்டா யிரம் ரூபாய்க்கு வாங்கின. நாராயணர் வெண்கலச் சிலையை தேக்கு மரபீடத்தில் பொருத்தி, அவன் கோடவுனில் கொண்டுபோய் வைத்தனர்.

சபாபதி மிகுந்த சந்தோஷமடைந்தான்.

''நான் சைவனா இருந்தாலும் பார்த்தசாரதி பெரு மாள்தாண்டா எனக்கு எல்லாம். எனக்கென்னமோ பெருமாளே வந்துட்டாப்போல இருக்கு.

அந்த நட்பு அத்தோடு முடிந்து போயிற்று.

ஆனால், பிரசாத்தின் மனதில் நிறைய கேள்விகளை எறிவிட்டது. உழைப்பது பற்றி யோசிக்க வைத்தது.

போனமுறை நூறு தீயணைப்புக் கருவி விற்றதற்கு காரணம் கூட, இந்தக் கல்யாணம் கொடுத்த வெறிதான். நம்மாலும் முடியும். இந்த சாக்கடைத் தூக்கம் வெகுநாள் தொடரக்கூடாது.

அந்த பாட்டுக்காரக் கிழவர் போல் போதுமென்று அடங்கக்கூடாது.

ஆனால், எனக்கு யார் உந்து சக்தி. சபாபதிக்கு பத்தாவதிலிருந்து பரிமளாமீது ஒரு காதலிருந்தது. எனக்கு யார் மீதும் காதல் வரவில்லையே...காதல் வர என்ன செய்ய வேண்டும்.

இன்னும் கொஞ்சம் கூட காசு வந்தால் காதல் வந்து விடுமோ... பேப்பர் வியாபாரத்தில் சபாபதி கிளைவிடுகிறான் என்பதால்தான் பரிமளா சரியென்று சொன்னாளோ...

போன வாரம்கூட அம்மா சொன்னாள். யாரோ ஜாதகம் கேட்டு வந்ததாக.

"சும்மா இரும்மா." அம்மா போட்ட கொக்கியை உடனே தள்ளிவிட்டான்.

"நூறு இருநூறா வித்துடு பிரசாத். உனக்கு ஆயிரம் ரூபா மேல தர்றேன்."

கல்யாண கொக்கியை தள்ளிவிட்ட அன்றுதான், முதலாளி சம்பளக் கொக்கியைப் போட்டார்.

ஒரு தீயணைப்புக் கருவியின் நிகரலாபம் நூறு ரூபாய் இருக்கும். இன்னொரு நூறு விற்றால் பத்தாயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். அதில் ஆயிரம் ரூபாய்தான் இவனுக்கு பங்காய் வரும்.

என்ன செய்வதென்று தீவிரமாய் பிரசாத் யோசித்தான். வேறு கம்பெனி மாற திட்டமிட்டான்.

உலகத்தில் தீயணைப்புக் கருவி விற்றவனுக்கு வேறு எது விற்பதும் கடினமல்ல.

இந்த முறை தீயணைப்புக் கருவிகளை பெரிய வீடுகளில் விற்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று தீர்மானித்தான்.



இப்படி தவித்துக் கொண்டிருக்கிற போதுதான், எறும்பூறுகிற கனவு வந்தது. அதற்கு பாட்டுக்கார கிழவர் பதில் சொன்னதே மனது பலமுறை சுட்டிக் கொண்டிருந்தது.

# 3

விடியும் நேரத்தில் தூக்கம் முற்றிலும் கலைந்து போய், ஏதோ செய்ய வேண்டும் ஏதோ செய்ய வேண்டும் ஏதோ செய்ய வேண்டும் என்ற வெறியோடு அவன் எழுந்து உட்கார்ந்தான்.

படுக்கையை சுருட்டி வைத்துவிட்டு தெருருவுக்குப் போனான்.

போகிறவனை பாட்டுக்கார கிழவர் தலைதூக்கிப் பார்த்தார்.

காற்று ஜில்லென்றிருந்தது. தெருவில் யாரோ தலையில் முண்டாசுடன் அறையிருட்டில் நடந்து போய்கொண்டிருந்தார்கள். நடந்தவர் கையில் கடிகாரம் மின்னியது.

"மணி என்ன சார்." பிரசாத் கேட்டான்.

"நாலு ஐம்பத்தைஞ்சு. யாரு... பிரசாத்தா..."

"ஆமாம், யாரு... பீமாராவா..."

"பிரசாத். மடத்துல மோட்டார் பம்ப் எரிஞ்சுடுத்து. ஒரு சொட்டுத் தண்ணிகூட இல்ல. காலையில ஆறு மணிக்கு பூஜை நைவேத்யம் ஆகணும். அதோட நான் குளிக்கணும், சமையலுக்கு தண்ணிவேணும். நாப்பதடி

கிணறு... என்னால ஒரு வாளிககு மேல இழுக்க முடியல. கொஞ்சம் ராகவேந்திரருக்காக தண்ணி எடுத்துத் தர்றியா...''

''தாராளமா இறச்சுத் தர்றேன்.''

''போய் ஒரு துண்டு எடுத்துட்டு வந்துரு. முதல் பக்கெட் உன் தலையில் விட்டுட்டுதான், மத்ததுக்கு ஜலம் இழுக்கணும். உனக்கு கிணத்து தண்ணி எதுவும் பண்ணாதில்லையா...''

''ஒண்ணும் செய்யாது. அப்படியே செஞ்சாலும் ராகவேந்திரர் பாத்துக்கிறார்...''

வீட்டிற்கு எதிரே மடமிருந்தது. மடத்திற்குப் பின்னால் பெரிய கிணறு இருந்தது. மடத்திற்குள்ளே போய் பிரசாத் ராகவேந்திரரை வலம் வந்து நமஸ்கரித்தான்.

கிணற்றில் பெரிய பித்தளைக் குடத்தை இறக்கி தண்ணீர் இரைக்கத் துவங்கினான்.

தன் தலையில் ஊற்றிக் கொண்ட தண்ணீர் போக, இருபது குடம் ஜலம் இரைத்துக் கொடுத்தான். இரைக்க இரைக்க தோளும், மார்பும் திண்ணென்றிருந்தன.

பீமாராவிற்கு பரம சந்தோஷம்.

''இங்கே எதுவுமே தப்பா நடக்கவேயில்ல பிரசாத். அந்த மோட்டார் ரிப்பேரானது கெடுதல்னு நினைச்சேன். பூஜைக்கு சோதனை வந்துடுத்தோன்னு பயந்தேன்.

பூஜைக்கு எந்த சோதனையுமில்லை. உனக்கென்னவோ ஆசீர்வாதம் பண்ணணும்னு சத்குருவுக்கு ஆசை. இல்லேன்னா, நாலே முக்கால் மணிக்கு நீ எழுந்திருப்பியா ...இல்லே. நான்தான் உன்னை கூப்பிடுவேனா...''



''நீங்க கூப்பிட்டதுக்கு ரொம்ப நன்றி பீமாராவ். வேற வேலைக்குப் போகணும்னு ஆசைப்பட்டு கிட்டேயிருந்தேன். நீங்க கூப்ட்டு வேலை கொடுத்தவுடனேயே, எனக்கு வேற வேலை கிடைச்சிடும்னு தோணிடுச்சு.''

''வேலை கிடைக்கணுங்கிற கவலை மட்டுமில்ல.. எல்லாத்தையுமே அவர்கிட்ட கொடுத்துடணும், எத்தனை இரைக்கணும்னு கேக்காம நீ பாட்டுக்கு இரைச்சே பார்... அதான் லட்சணம். ரெண்டு குடம் அப்படியே நீயும் தலையில விட்டுக்கோ. எங்கிட்ட சோப்பு இல்லை. வாசனை சீயாக்காப் பொடி இருக்கு. உடம்புல மடமடன்னு தேய்ச்சுண்டா சோப்பை விட மணமா இருக்கும். துண்டை கட்டிண்டு ஈர வேட்டியை ஒட்ட பிழிஞ்சிடு. நன்னா ஈரம் போக உதறு. இடுப்பிலே கட்டி ராகவேந்திரரையே நினைச்சிண்டு கண்ணை மூடி நில்லு. கைமேல பலன் கிடைக்கும்.''

''என்னன்னு வேண்டிக்கணும்.''

''தனித்தனியா நினைச்சுக்கணுமா. ஒரே வார்த்தை...எனக்கு வழிகாட்டும். போறாதா...மத்தது அவருக்குத் தெரியாதா.'' பீமாராவ் சலார் சலாரென்று உடம்பில் தண்ணீரை அடித்துக்கொண்டே பேசினார்.

வெறும் கௌபீனத்தோடு ஆனந்தமாய் குளித்துக் கொண்டிருந்தார். ஐம்பது வயதுக்கு திடகாத்திரமாய், ஒல்லியாய் முறுக்கு கம்பிபோல இருந்தார்.

''வரவர நம்ம தேசத்து குழந்தைகளுக்கு ப்ரேயர் பண்ணக்கூடத் தெரியல. எனக்கு நல்லதுன்னு நீ நினைக்கறதைப் பண்ணுன்னு சொல்லத் தெரியலை.

இதெல்லாம் யாரும் யாருக்கும் அக்கறையா சொல்லித்தறதேயில்ல. அதையும் சொல்லணும்.

கண்ணை மூடி உக்காந்துக்க வேண்டாம். சில பேருக்கு தூக்கம் வரும். தளர்வு வரும். முதுகு கூன்

போடும். அஞ்சும் அஞ்சும் பத்து விரக்கடை, இந்த இடை வெளிவிட்டு கால் அகட்டி நில்லு கைகூப்ப வேண்டாம். ஒரு நிமிஷம் கை குவிச்சு நின்னுட்டு, பக்கவாட்டுல வெறுமனே தொங்கவிட்டுறு. எதிர்ல உள்ள ராகவேந்திர ரையே நினைச்சுக்கோ. பிருந்தாவனம், வெள்ளிக்கவசம் அனுமார் படம்னு நினைக்காதே, சாட்ஷாத் குரு எதிர்க்க உட்காந்துண்டிருக்கார். ரத்தமும், சதையுமா ரொம்ப வும் பிரத்தியட்ஷமா. மனுஷ்ய ஸ்வரூபமா, உக்காந் துண்டிருக்கார்னு நினைச்சிக்கோ, அப்படி இருந்தவர் தானே அவர்.

என்னென்னமோ கற்பனை பண்ணிக்கிறோம். சொத்துசுகம் பொம்பனாட்டின்னு கற்பனை பண்ணிக் கிறோம். இது பண்ணிக்கப்படாதா...இதுபாவமா...?'' பீமாராவ் மறுபடி தலைக்கு தண்ணீர் விட்டுக் கொண் டார்.

''இருபதடி' தூரத்துல குரு பிருந்தாவனமா உக்காந் திண்டிருக்கார். நீ அவரை நினைச்சிக்கிறே...ராகவேந் திர ராகவேந்திர ராகவேந்திர...ன்னு மனசுக்குள்ள இடைவிடாம சொல்லிண்டே இரு. பதினைஞ்சு நிமிஷம் நில்லு. வேற எல்லாத்தையும் உதறிட்டு இதுமட்டுமே காரியமா. பதினைஞ்சு நிமிஷம் நில்லு, இதான் ப்ரேயர். இவ்வளவுதான் ப்ரேயர்.

பகவானே எனக்கு ப்ரமோஷன் கிடைக்கணு மேன்னு நினைக்காதே.

ப்ரமோஷன் கிடைச்சும் பிராணன் போயிடுத் துன்னா...ப்ரேமோஷனால என்ன பிரயோஜனம் இது நமக்குத்தெரியாது. அவருக்குத் தெரியும்.

நம்மைத்தூக்கி அப்படியே அவர்கிட்ட கொடுத்துடு வோம்.



கரெக்ட்டா ஒரு வாளி ஜலம் பின்பக்கம் போறதுக் குத்தான் இருந்தது. ராகவேந்திரான்னுதான் தெருவுல இறங்கினேன்.

யாராவது ரிக்ஷாகாரன் கிடைச்சா, ஒரு குடத்துக்கு ரெண்டு ரூபான்னு பேரம் பேசி இருபதுகுடம் பிடிக்கச் சொல்லலாம்னு நினைச்சேன்.

எனக்கு தோள்பட்டையில வலி. அரைக்குடம் கூட எடுக்க முடியலை. நாலு அம்பத்தஞ்சுக்கு என் எதிர்க்க நீ நிப்பியா...எனக்காக வாசல்ல நின்னியா...உனக்காக நின்னியா...'' பீமாராவ் துவட்டிக்கொண்டார்.

''இப்பத்தெரியாது. பின்னால தெரியும். எதுக்காக இருபது குடம் ஜலம் எடுத்தேனு ஒருநா தெரியும்.

சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் குருநாதரை கூப்பிடணுமான்னு என் பொண்டாட்டி கேப்பா.

சின்னது பெருசுன்னேயில்ல. எல்லா விஷயமும் குருநாதர்தான்.

காலங்கார்த்தால அறுக்கிறானேன்னு நினைக் காதே. நான் எல்லார்கிட்டேயும் இப்படி பேசமாட்டேன். கடவுளைப்பத்தி பிரசங்கம் பண்றது முட்டாள்தனம். கடவுளைப்பத்தி காதோரமா சொல்லணும். தனியா உக் கார வைச்சு ரகசியமா சொல்லணும்.

பிரசங்கம் ஆரம்பிச்சா பொய்தான் சொல்லத்தோ ணும். பொய்யை உரக்க சொல்லத்தோணும். உரக்க கத்தக்கத்த கேட்கிறவனுக்குத்தான் சந்தேகம் வரும்.

நான் மறுபடி சொல்றேன். கடவுளை குருவா நினைச்சிக்கோ. குருவை கடவுளா நினைச்சிக்கோ. ஒரு பதினைஞ்சு நிமிஷம் வெறுமனே நில். ராகவேந்திரர் உனக்கு பரவசமா படலையா...பார்த்தசாரதி கோயி லுக்குப் போ.

பார்த்தசாரதியும் ரத்தமும் சதையுமா இருந்தவன் தான். யாருக்கோ குருவா இருந்தவன்தான். அவன் எதிர்க்கயும் அப்படியே நில்லு திரும்ப வந்துடு. ஒண்ணும் கேக்க வேண்டாம். மறுபடி சொல்றேன். ஒண்ணுமே கேக்க வேண்டாம்.

எனக்கு போய் அடுப்பு மூட்டணும். நாழியாயிடுத்து. வரட்டுமா...'' பீமாராவ் எட்டி எட்டி நடந்து சமைய லறைக்குள் புகுந்தார்.

ஈரத்துணியோடு முன்கட்டுக்குப் போய், ராகவேந்திர பிருந்தாவனத்தை வலம் வந்து பிரசாத் அவர் எதிரே அமைதியாக நின்றான். இரண்டு பாதத்திற்குமிடையே பத்து விரக்கடை இடமிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான்.

அந்த அகலத்தில் நிற்பது சௌகர்யமாக இருந்தது.

பிருந்தாவனம் நோக்கி கை கூப்பினான். எல்லாமு மானவரே... உங்களுக்கு நமஸ்காரம் என்று ஆரம்பித் தான். ஒரு நிமிடம் நிதானமாய் ஸ்லோகம் சொன்னான். பிறகு கண் மூடி அவரையே நினைத்துக் கொண்டிருந் தான்.

உடம்பில் யானை அசைவாய் ஒரு ஆட்டமிருந்தது. தும்பிக்கையின் சங்கிலியைப் போல மனம் அவரையே நினைத்துக் கொண்டிருந்தது.

பதினைந்து நிமிடம் போனது தெரியவில்லை. கண் விழித்து பார்த்த போது வெளியே வெளிச்சம் வந்து விட் டது. பிருந்தாவனத்தை மூன்று நான்கு பேர் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு இருபது வயதுப் பெண் சுவரருகே தரையில் உட்கார்ந்து ஒரு பெரிய வெள்ளைத் துணியை விரித்தாள். அந்தத் துணியில் ராகவேந்திரர் சிம்மாசனத்தில் அமர்ந்



தது போன்ற ஒரு உருவம் பல வண்ணங்களில் எம்ப்ராய்டரி செய்யப்பட்டிருந்தது.

எம்ப்ராய்டரி அழகா அல்லது வர்ணங்களின் விசேஷமா அல்லது செய் நேர்த்தியா ஒரு அசைவில் ராகவேந்திரர் புடைப்புச் சிற்பம் போல் தோன்றியது.

வேறொருவரும் அருகே வநது பார்த்தார்கள்.

படத்திலிருப்பது ராகவேந்திரர் என்றாலும் ஒரு பெண்ணருகே எத்தனை நேரம் நிற்பது. அந்தப் பெண்ணின் கழுத்தும் முதுகும் தாமிர நிறமாய் இருந்தன. கைவிரல்களில் மருதாணி பூசி இருந்தது.

அந்தப்படத்தில் இன்னும் தையல் வேலை பாக்கியிருந்தது. வேலை செய்ய வேண்டிய பகுதியைத் தவிர மற்ற பகுதிகளை மடித்துக் கொண்டு அந்தப் பெண் எம்ப்ராய்ட்ரி போட ஆரம்பித்தாள்.

பிரசாத் நமஸ்கரித்து விட்டு வீட்டுக்கு ஓடினான்.

வராண்டாவில் பார்த்தசாரதி கிழவரை காணவில்லை.

அடுத்த ஒரு மணி நேரத்தில் டையும், ஷூவும், முழுக்கைச் சட்டையுமாய் கையில் பெட்டியோடு பஸ் ஏறினான். அழுக்கு நிறைந்த ஆபீஸில் போய் உட்கார்ந்து கொண்டான்.

''என்ன பிரசாத். நீ சொன்ன மாதிரியே பங்களா பங்களாவா போனா, இது விக்கலாம்னு தோணுது. ஒரு ஆட்டோ பிடிச்சி, நாலு பேரா ஒரு ஏரியாவுல போய் இறங்கிக்குங்க. நாலு பேரும் நாலு தெருவா போய் பேசி ஆர்டர் பிடிச்சிடுங்க.''

''நாலு பேர் ஆட்டோவுல போக முடியாது சார்.''

"போகலாம்பா. அட்ஜஸ்ட் பண்ணிக்கப்பா."

"நான் பண்ணிக்குவேன் சார். ஆட்டோக்காரன் ஒத்துக்க மாட்டான். ஆட்டோக்காரன் ஒத்துக்கிட்டாலும் போலீஸ்காரன் ஒத்துக்க மாட்டான். பிரச்சனை பண்ணாதீங்க."

"பஸ்ல போன்னு சொல்லியிருக்கணும்."

"பஸ்லியே போறோம் சார். பஸ் சார்ஜோட இந்த டீ, லஞ்ச் ரெண்டுமே அலவன்சா கொடுத்துடுங்க."

"பத்து ரூபா போறுமா."

"பத்து ரூபாய்க்கு சாப்பாடு போடுற இடத்தையும் சொல்லிடுங்க. அதுக்கு பஸ் சார்ஜையும் கொடுத்துடுங்க."

"எவ்ளோதான் கேக்கறே."

"நாப்பதுரூபா வேணும் சார்."

"ஒரு ஆளுக்கா."

அலுவலகத்துக்கு வந்தவுடன் இந்தப்பேச்சு பிரசாத்துக்கு அயர்ச்சியாக இருந்தது. இப்படி அழுதுஅழுது சம்பாதிக்க வேண்டுமா என்று தோன்றியது.

'வேற எவனையாவது வைச்சு வித்துக்கடா போடா' என்று உதறிவிட்டு வரும் வேகமிருந்தது.

'ராகவேந்திரா...' அவனையும் அறியாமல் குரல் கொடுத்தான்.

"சரி. சாமி பேரை சொல்றே. நாப்பது நாப்பது ருபா நாலு பேருக்கு தரேன். போகவர ஆட்டோ சார்ஜ் ஆளுக்கு அம்பது ரூபா போட்டுக்கங்க. டி.ஏ.அலவன்ஸ் பத்துரூபா. மொத்தம் நூறுரூபா. அந்த பெரிய பங்களா முழுக்க மூணுநாள்ல முடிச்சிடுங்க. நூறு விக்க முடியமான்னு பாருங்க."



மற்ற விற்பனையாளர்களிடம் இதுப்பற்றிப் பேசிய போது சீறினார்கள்.

"எங்கியாவது வீட்ல தீயணைப்பு சிலிண்டர் வாங்கு வாங்களாய்யா."

"இந்த ஆள் நூறுரூபா கொடுத்துட்டு வண்ட வண்டையா பேசுவான். நூத்துக்கு ஒண்ணு குறைஞ்சாலும் அக்கா, அம்மான்னு திட்டுவான். நான் அந்த ஏரியாவுக்கு வரலை. பாடி, அம்பத்தூர்னு போயிடறேன். எங்கியாவது கேண்டீன்ல சாப்பாடு சாப்பிடலாம்."

"பிரேக்ஸ் இண்டியால தயிர்சாதம் போடறான். யாரு அடையாறுல சோத்துக்கு 'அல்லாடறது.'' ஒருவன் மறுக்க அவனோடு இன்னொருவனும் சேர்ந்து கொண்டான்.

தன்னுடன் அதிகம் ஒட்டுகிற விற்பனையாளருடன் பிரசாத் பஸ் ஏறினான்.

தெற்கு நோக்கிப்போகிற பத்துமணி பஸ்ஸில் கூட்டம் குறைவாக இருந்தது. உட்கார இடமிருந்தது.

காலையில் சீக்கிரம் எழுந்ததால் தூக்கம் கண்களை இழுத்தது.

"டேய்...நான் கொஞ்சம் தூங்கறேன். நீ பெட்டிய பாத்துக்கோ."

கண்களை மூடினான். சாந்தோம் வந்ததே தெரியவில்லை. பத்து நிமிடத்திற்கு தன்னை மறந்த தூக்கம் அந்த தூக்கம் ஒரு மலர்ச்சியைக் கொடுத்தது.

அடையாரில் இறங்கி, டீ குடித்து, கைக்குட்டையை ஈரம் செய்து, முகம் துடைத்துக் கொண்டான். முதல் வீட்டில் கதவு தட்டும்போது பதினோருமணி.

மணி ஒன்றரையானபோது தனித்தனியே இருப்பத்தைந்து வீடுகள் முடித்திருந்தார்கள். ஆனால், ஒரு நியணைப்பு சிலிண்டர் கூட விற்கவில்லை.

சேல்ஸ்மேன் உத்யோகம் தப்போ. வாத்தியார் உத்தியோகத்திற்கு போயிருக்கலாமோ...

''பள்ளிக்கூடத்து வாத்தியாருக்கு சம்பளம் கம்மிடா. நான் டியூஷன் சென்டர் ஆரம்பிக்கப்போறேன். கெட்டிக்காரப்பசங்களாதான் சேக்கப்போறேன். செமத்தியாட்ரெயின் பண்ணப்போறேன்.

ஒரு பையனுக்கு முந்நூறுரூபா. கணக்கு, பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, எல்லாம் நைன்த் அண்டு டென்த். பொண்ணுங்க கிடையாது. பையனுங்க மட்டும்.

''முப்பதுபேர் இப்பவே அப்ளிகேஷன் கொடுத்துருக்கான்.'' திருவல்லிக்கேணியிலுள்ள இன்னொரு நண்பன் சொன்னான்.

''முப்பது பேர்கிட்ட சம்பளம் வாங்கிடலாம்.எங்கடா உக்காரவைச்சு பாடம் சொலித்தரப்போறே.''

''நான் வாடகைக்கு இருக்கேனே. அந்த வீட்டு மொட்டைமாடி, அழுத்தமா ஓலைக்கொட்டாய் போட்டுடப்போறேன்.நாலாயிரம் ரூபா கொட்டாய்.ஆறாயிரம் ரூபா அட்வான்ஸ். ஆயிரம் ரூபா வாடகை. பத்து பசங்களுக்கு உங்க வீட்ல பாடம் சொல்லிக் கொடுத்தா மூணு தலைமுறைக்கு நல்லதுன்னு கதை விட்டுருக்கேன். அடுத்த வருஷம், கூட வாடகை கேப்பான் கொடுத்துட்டுப் போறது.

கார்த்தால ஆறுலேருந்து ஒம்பது சாய்ந்திரம் நாலுலேருந்து எட்டு.



கார்த்தால ரெண்டு காபியை குடிச்சிட்டு வேலை பார்த்தோம்னா ஒரு பத்து மணிக்கு குழம்பு, ரசம், மோருன்னு ஃபுல்லா சாப்ட்டுட்டு தூங்கலாம். ஒரு மணி வரைக்கும் தூங்கிட்டு, ஒரு மோர் சாதம் சாப்ட்டு, ஹிண்டு பேப்பர் படிச்சுட்டு, மூணு மணித்கு மறுபடியும் டியூஷன் சென்டர் ஆரம்பிச்சா எட்டேகால் எட்டரைக்கு மூடிடலாம். வீட்டுக்குப் போய் நாலு சப்பாத்தி சாப்ட்டுட்டு, பீச்சு பக்கமா ஒரு வாக்

பத்து மணிக்கு வீட்டுக்கு வந்து ஒரு டம்ளர் பால், பத்தரை வரைக்கும் பி.பி.சி பாத்துட்டு, அப்புறம் பொண்டாட்டிய கட்டிண்டு தூங்கிடலாம்.

காத்து ஒழுங்காக அடிச்சது... உக்காந்த இடத்துல ஏழாயிரம் ரூபா சம்பாதிக்கலாம்.

வாத்தியாரா பள்ளிக்கூடத்துல வேலை செய்யறது வேஸ்ட்.

திருவல்லிக்கேணியில எனக்கு மட்டும் சொந்த வீடு இருந்தது... டுடோரியல் காலேஜ் ஆரம்பிச்சிடுவேன்.

கொட்டகை போட இடம் கொடுத்துட்டா, மொள்ள மொள்ள ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டுடலாம். என்ன சொல்றே... நீயும் எங்கூட சேந்துக்கறியா...''

ஒரு கூரைக்குள் நாற்பது பையன்களுடன் இருக்கிற அவலத்தை பிரசாத் யோசித்துப் பார்த்து வேண்டாமென்று விட்டு விட்டான்.

இங்கே அடையாரில் ஒவ்வொரு வீட்டு படிகளை ஏறி இறங்கும் போது அவன் வீடு பற்றிய கனவு அதிகரித்தது.

ஒரு வீட்டின் தோட்டம் மெய் மறக்கடித்தது. ஒரு வீட்டின் வராண்டாவே இவன் வீட்டை விட பெரிதாக இருந்தது.

தீயணைப்புக் கருவி தேவையில்லாத விஷயமென்று எல்லோரும் நினைத்தார்கள். ஏதோ அதிர்ஷ்டத்தில் விற்றால் உண்டு என்றுதான் தோன்றியது.

சாப்பிட்ட பிறகு வெற்றிலைப்பாக்கு கடையில் நின்று ராகவேந்திரா என்று கூப்பிட்டான்.

நான் விக்கணும். ஏதாவது விக்கணும். ஒரு ரூம்ல வேலை செய்யப் பிடிக்காம பெட்டியோட வெளிய வந்துருக்கேன். நாலு இடம் சுத்திப்பாக்கணும்னு ஆசைப்படறேன். நாலு ஜனங்களோட பேசணும்னு விருப்பப்படறேன். இப்படி ஒண்ணுமே விக்காம, ஒரு உற்சாகமும் காட்டாம என்னை சாதாரணமாக்கிடாதே.

மனம் கசிந்து கசிந்து அவனைப் பற்றி துக்கப்பட்டது.

மாலை மூன்று மணிக்கு வேறொரு தெருவில் உள்ளே நுழைய, ஒவ்வொரு வீடாய் நகர்ந்து வர, ஒரு டாக்டர் வீட்டில் மூன்று தீயணைப்பு கருவிகளுக்கு ஆர்டர் கொடுத்தார்கள். ஒரு கிளப்பில் ஐந்து வாங்கிக் கொள்கிறேன் என்று உறுதி சொன்னார்கள். தனியே ஒரு பங்களாவில் வசிக்கிற கிழவர் உடனடியாக காசு கொடுத்து வாங்கிக் கொண்டார்.

பெட்டியைத் தூக்கி, போதுமென்று நடந்து வந்த போது கூட வந்தவன் எதிர்பட்டான்.

"பதினேழு வித்துட்டேன்டா." அருகே வந்து சொன்னான்.

"பதினேழு வித்தியா... எங்கே."

"பள்ளிக்கூடம். கூரைப் பள்ளிக்கூடம். இஷ்டத்துக்கு பயமுறுத்தினேன் நியூஸ் பேப்பரை குப்பையா



போட்டு, எரிச்சு காண்பிச்சு, ஒண்ணு உடைச்சு அணைச்சுக் காண்பிச்சேன். கொளுத்தினது பேப்பரா... திடீர்னு காத்துல பறக்க ஆரம்பிச்சிடுச்சு."

"ஐயய்யோ..."

"விடுவேனா... ஓடி ஓடி அணைச்சு, பசங்கயெல்லாம் வீல்னு கத்தி... நல்ல வேளை நம்ம ப்ரோடக்ட் ஒண்ணும் மட்டமில்ல. நெருப்பு பொசுக்குன்னு அணைஞ்சு போச்சு. ஆறு வாங்கிண்டாங்க. காசு ஒண்ணாந்தேதி தரேன்னாங்க."

"மிச்சம்..."

"ஒரு வீட்டுக்குள்ளேயே லிக்கர் கோடவுன் வச்சிருக்காங்க. அவன் நாலு வாங்கிட்டான். அப்புறம் ஒரு ஃபிளாட்ல ஒருத்தர் வாங்க, நான் நீன்னு எல்லாரும் வாங்கிட்டாங்க. நீ எவ்ளோ வித்தே..."

"வித்ததுண்ணு பாத்தா ஒண்ணே ஒண்ணு. ஆர்டர் கொடுத்தது மூணு இருக்கு."

"ஏண்டா... நீ நல்லா பேசுவியே..." ஸ்நேகிதன். கேட்டான்.

"நாமளே பதினேழு வித்துட்டோம். பிரசாத் முப்பது நாப்பது வித்துட்டு வரப் போறான்னு நினைச்சேன்.

"எனக்கு நேரம் சரியில்ல."

"அதெல்லாமில்ல... வேணா இன்னொரு ரவுண்டு ட்ரை பண்ணுவோமா."

"மணி நாலேகால். வீட்டுக்குப் போலாம்."

"என்னதுல பாதி ஆர்டர் நீ எடுத்துக்கறியா..."

''வேண்டாம்பா, இது உன் திறமை, உன் அதிர்ஷ்டம். நீயே அனுபவி. நான் நாளைக்கு வித்துக்கறேன். என்னை விட்டு எங்கே போகும் இந்த அடையார்.''

அவர்கள் மௌனமாய் நகரத்தை நோக்கி வந்தார் கள். பிரிந்தார்கள். தனித்தனியே பஸ் ஏறினார்கள்.

வீட்டுக்குள் நுழைந்து உடைகளை கழற்றி, வேட்டி யணிந்து கொண்டு முகம் அலம்பிக் கொண்டான்.

அம்மா கால் நீட்டி சப்பாத்தி போட்டுக் கொண்டி ருந்தாள். தங்கை ஒரு மூலையில் பாடம் எழுதிக் கொண் டிருந்தாள்.

உட்கார்ந்து காபி குடிக்கிற அந்த நேரத்தில் சமைய லறை சூடு முகத்திலடித்தது.

அடையாரில் பார்த்த வீடுகள் ஞாபகம் வந்தன.

அவனுக்கு மட்டும் எதனால் அப்படியொரு வீடு கிடைத்திருக்கிறது.

ஹாலிலிருந்து இரண்டு படி இறங்க வேண்டும். ஹாலுக்குள் இருபதடிக்கு பதினைந்துஅடி தொட்டி போல் ஒரு இடம். சுற்றி மெத்து மெத்தென்ற சோபா. தரை முழுவதும் கம்பளம். சோபாவின் எதிரே கண்ணாடி மேஜை. நாலு மூலைகளிலும் பெடஸ்டல் மின் விசிறி.

எதனால் இவனுக்கு இவ்வளவு அழகிய வீடு கிடைத் தது. எனக்கு ஏன் கிடைக்கவில்லை. இருக்கும் இடம் சொந்தமாய், மிக வசதியாய் கிடைக்க என்ன செய்ய வேண்டும் என்ன பூஜை செய்ய வேண்டும். எத்தனை நாள் செய்ய வேண்டும்.

''வீடு நல்லாருக்கே... பெரிய குடும்பமா...'' வியந்து பிரசாத் கேட்டபோது தோட்டக்காரன் பதில் சொன்னான்.



''அதெல்லாம் ஒண்ணுமில்ல. புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேருதான். மூணு பசங்க. எல்லோரும் ஃபாரின்ல இருக்காங்க இருக்கிற சொத்தை ஜாலியா செலவு பண்ணி கிட்டு, பசங்ககிட்ட காசு அனுப்புங்கன்னு போன்ல கேட்டுகிட்டு சந்தோஷமா இருக்காங்க.

''என்ன தொழில் இவருக்கு?''

''சாப்டறது, தூங்கறது, பேப்பர் படிக்கிறது. கிளப் புக்குப் போய் டென்னிஸ் ஆடுறது.''

''உங்களுக்கு நல்ல சம்பளமா.''

''கொடுத்துட கிடத்துடப் போறாங்க.'' தோட்டக் காரர் துண்டை உதறி தரையில் போட்டார்.

''கஷ்டப்பட்டவங்களுக்குத்தான் சார் அடுத்த ஆள் கஷ்டம் தெரியும். பொண்டாட்டிக்கு பிரசவம் கோஷா ஆஸ்பத்திரியில சேத்துருக்கேன். செலவுக்கு காசு கொடுன்னு கேட்டேன். கவர்மெண்ட் ஆஸ்பத்திரியிலே எல்லாம் ஃபரீதானே... எதுக்கு காசு கேக்கறேங்கிறான்.

முதலாளிகூட பரவாயில்லை. முதலாளியம்மா ஒரு கேள்வி கேட்டுச்சு. பத்து வருஷமா பல்வேறு இடத்துல தோட்டக்காரனா வேலை பாத்தியே... காசு சேத்து வைக்கக் கூடாதான்னு கேள்வி கேட்டுச்சு.

காசு சேத்து வைக்கிற சம்பளமா எனக்கு. எப்படி புரிய வைக்கிறது.

இவங்க சாப்ட்டு மிச்சம் போடுவாங்களே தவிர, வீட்டுக்கு எடுத்துட்டுப் போக விட மாட்டாங்க.''

''உனக்கென்ன சம்பளம்.''

''ஆயிரம் ரூபா.''

பரவாயில்லையே...''

''வெறும் தோட்ட வேலை மட்டுமில்ல. காவல், எடுபிடி எல்லாத்துக்கும் நான்தான். திடீர்னு கூப்ட்டு, வீடு மொத்தமும் ஈரத்துணியால துடைன்னுவாங்க. பரணையிலிருந்து மரப்பெட்டியா எடுக்கச் சொல்லுவாங்க.''

''என்ன இருக்கு மரப்பொட்டியில...''

''யாருக்குத் தெரியும். இந்தடப்பாவ தூக்கிகிட்டு ஏன் அலையறே...சோப்புசீப்பு ஏதாவது விக்க வேண்டியதுதானே லேடீஸ் அயிட்டமா என் மச்சான் விக்கிறான் நல்ல பிஸ்னஸ்.''

இன்றைக்கு சோர்வு அதிகமானது அந்த தோட்டக்காரனுடன் பேசியபோதுதான். அந்த சோர்வு இன்னுமிருக்கிறது.

அம்மா அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

''அன்னிக்கு ஜாதகம் கேட்டானு சொன்னேனே... அவா மறுபடியும் வந்திருந்தா. பத்து பவுன் போடறாளாம். மூவாயிரம் டிரஸ்சுக்கு கையில தர்றாளாம். பொண்ணு பிளஸ்டு படிச்சிருக்கு. ஆனா, வேலைக்குப் போகலை. வேலைக்குப் போகணும்னு சொன்னா போவாளாம். நீ என்ன சொல்றே...''

''வேலைக்குப் போகச் சொல்லு.''

அம்மா முகம் மலர்ந்தாள்.

''போய் பொண்ணு பாக்கறயா''

''வேலைக்குப் போகச் சொல்லு. நிறைய சம்பாதிக்கச் சொல்லு. கூட வேலை செய்றவனையே லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கச் சொல்லு.''



''என்னடா இது அசிங்கம். நான் ஒண்ணு கேட்டா நீ ஏதோ பதில் சொல்றே.''

''வேலைக்கு போற பெண் எனக்கு வேண்டாம்.''

''ஏன்'''

''வீட்டை யார் பாத்துப்பா?''

''கூட காசு வருமே.'' தங்கை சட்டென்று விவாதத்தில் புகுந்தாள்.

''பிரச்னைகளும் நிறைய வரும் டென்ஷன் வரும். எனக்கு வீடு வீடா இருக்கணும். சின்ன வீடா இருந்தாலும் சுத்தமா இருக்கணும்.''

''உன் ரெண்டாயிரம் ரூபா சம்பளத்துல எப்படி குடித்தனம் பண்றது. வர்றவ ஒரு ரெண்டாயிரம் ரூபா கொண்டு வந்தா, நன்னாருக்காதா...''

''நாலாயிரம் நான் சம்பாதிக்கிறவரைக்கும் கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லை.''

''என்னிக்கு நீ நாலாயிரம் ரூபா சம்பாதிக்கிறது. என்னிக்கு கல்யாணம் பண்ணிக்கிறது.''

''இன்னும் ஒரு வருஷத்துல.''

''முடியுமா.''

''முடிஞ்சாகணும். இல்லேன்னா கல்யாணம் பண்ணிக்கக் கூடாது.''

''அப்பாவுக்கே மூவாயிரத்தி முன்னூறுதான் சம்பளம். உனக்கெப்படி நாலாயிரம் ரூபா கிடைக்கும். தங்கை அசடுபோல் பேசினாள்.

ஒன்பதாவது படித்தாலும் வெளிஉலகம் தெரியாத குழந்தை அது.

''எனக்கு கிடைக்கும். முயற்சி பண்ணிண்டிருக்கேன்.''

''வெளியூர் போய்டுவியாடா.'' அம்மா கவலையோடு கேட்டாள்.

''அப்பன்னா, ஐயாயிரம் ரூபா சம்பளம் கேப்பேன்.''

''அஞ்சு ஆயிரமா..அஞ்சு பின்னால மூணு சைஃபரா. அப்படின்னா தினம் நம்மாத்துல இட்லி தோசை இருக்குமில்ல...''

''பன்னி. திங்கிறதுலேயே இரு.'' அம்மா கடிந்து கொண்டாள்.

''ஒரு நகை பண்ணி போட்டுப்போம். மிக்ஸி கிரைண்டர் வாங்குவோம். அப்படின்னு இல்ல... இட்லி தோசைங்கிறா பார்.''

''அவ சின்னக் குழந்தைம்மா.''

''சரி. இருக்கட்டும். உனக்கு நாலாயிரம் ரூபா வேலை சீக்கிரம் கிடைச்சுடுமா...அவாகிட்ட இன்னும் அதிகமா எதிர்பார்க்கிறோம்னு சொல்லட்டுமா. பதினைஞ்சு சவரன் நகை, ரெண்டுகிலோ வெள்ளிப்பாத்திரம் கேக்கட்டுமா.''

''இது ரொம்ப அநியாயம்மா. கேக்கவே கூடாது.''

''எனக்கும் இஷ்டமில்லைதான். இவளுக்கும் ஏதாவது பண்ணியாகணுமே...'' அம்மா பிரசாத்தின் தங்கையைக் காட்டினாள்.

''அவளுக்கு இன்னும் எட்டு வருஷம் இருக்கு கல்யாணத்துக்கு.அதுக்குள்ளே நான் தலை தூக்கிடுவேன். நீ நினைக்கிறத விட நிறைய பண்ணுவேன்.



' நாங்க போன வாரம் தான் மவுண்ட் ரோட்டுல ஊர்வலம் போனோம்.'' தங்கை சொன்னாள்.

''என்ன ஊர்வலம்'' பிரசாத் கேட்டான்.

''கொடுக்க மாட்டோம் கொடுக்க மாட்டோம். வரதட்சணை கொடுக்க மாட்டோம்.''

''என்ன இழவு இது. இதுக்கெல்லாமாடி ஊர்வலம் போவா.''

''ஏய்... நீ பாடத்தைப் படி. பேச்சுக்கு வராதே.''

பிரசாத் எழுந்தான், அவனுக்கு ராகவேந்திரரை போய் பார்க்க வேண்டுமென்று தோன்றியது.

''சரி. நான் அவாளுக்கு என்ன சொல்றது.'' அம்மா தலை நிமிர்ந்து கேட்டாள். சரியென்று சொல் என்கிற கெஞ்சல் அவளிடமிருந்தது.

''இப்போ கல்யாணம் எனக்கொரு சுமைம்மா. என்னால தாங்க முடியாது.''

''அந்தப் பொண்ணுக்கு வேலை வாங்கி கொடுத்துடுவாளாமே... '

''கடவுளே... லேடீஸ் வேலைக்கு போகக்கூடாதும்மா.''

''நீ சொல்றதும் சரிதான். அந்தப் பொண்ணு ஒரு எம்பராய்ட்ரியில ராகவேந்திரரை போட்டிருக்கு. அப்படியே அசந்துப்போயிட்டேன். அப்படியே தத்ரூபமா கண்ணுல ஒத்திக்கிறா மாதிரி இருந்தது.''

''என்ன...'' பிரசாத் திடுக்கிட்டு திரும்பினான்.

''எம்ப்ராய்ட்ரி போடுவாளாம். பெயிண்டிங் பண்ணுவாளாம். காகிதக் கூடுல பொம்மை பண்ணுவாளாம்.

நவராத்திரி அன்னிக்கு இந்த மாதிரி அலங்காரம் வேணும்னு ஒருவாரம் முன்னாடியே சொல்லிட்டா, மடமடன்னு அந்த மாதிரி ஏற்பாடு பண்ணிட்டு வந்துடு வாளாம்.

எல்.ஐ.சி நரசிம்மன் வீட்ல ஏர்போர்ட், பரங்கிமலை மாதாகோயிலோட பண்ணிவைச்சாளாம்.

விரல் உசரத்துக்கு நூத்தி இருபது பொம்மை வாங்கி, ஒரு கல்யாணக்காட்சி பண்ணிருந்தாளாம். பொண்ணை மடியில வைச்சு. தாலி கட்றா மாதிரியே பொம்மை பண்ணிருந்தாளாம்,

எல்லா பொம்மைக்கும் சட்டை வேஷ்டி. நாதஸ்வரம், டைனிங்டேபிள். சாப்பாட்டு பந்தி, பார்த்து பார்த்து, ரசிச்சு ரசிச்சு அப்படி பண்ணிருந்தாளாம்.

பொண்ணோட அம்மாவும், பக்கத்து வீட்டு மாமியும் வந்திருந்தா.

பார்த்த அத்தனை பேரும் சொல்லிட்டாளாம். இத்தனை அழகா இத்தனை ஆசையா பண்ணிருக்கியே... உனக்கு இன்னும் ஒரு வருஷத்துல கல்யாணமாயிடும்னு சொல்லிருக்காளாம்.

வக்கீல் சாம்பசிவம் வீட்ல அவர் சொல்ல சொல்ல, பிருந்தாவனக்காட்சி பண்ணித் தந்தாளாம். இது அரை யடி உயர பிளாஸ்டிக் பொம்மையாம். மாவுல மோல்டு பண்ணி முப்பது நாப்பது பசுக்கள் பண்ணியிருந்தாளாம். சீதாலக்ஷ்மிபாட்டி பாத்துட்டு விக்கி விக்கி அழுதுட்டா ளாம்.

சும்மா விசாரிச்சேன். கற்பகவல்லி எப்படிப்பட்ட பொண்ணுன்னு. அத்தனைபேரும், ஆஹா, ஓஹோங் கிறா.



ஒரேயொரு வேதனை. காசு இல்லை. இந்த பத்து பவுனே அங்கே இங்கே பிச்சை வாங்கி போடறாபோல இருக்கு.

யாரோ ரெண்டாந்தாரத்துக்கு கேட்டிருக்கா. அவ சரினனு சொல்லிட்டாளாம். அவ அப்பா மாட்டேன் னுட்டார்.

எம்ப்ராய்ட்ரி பாத்த கையோட, மடத்துக்குப் போய் அந்தப்பொண்ணையும் பாத்துட்டு வந்தேன்.''

''எந்த மடத்துல...''

''எதிரே ராகவேந்திர மடம். அங்கேதான் அந்தப் பொண்ணு உட்காந்துண்டு எம்ப்ராய்ட்ரி போடறது. ஒரு எம்ப்ராய்ட்ரி நானூறு ரூபாய்க்கு விக்கிறாளாமே...

இந்த கல்யாண டெக்கரேஷனுக்கு கொலு வைச் சவா வீட்ல ஐநூறுரூபா கொடுத்தாளாம். அப்படியே அந்தப்பணத்தை நித்தியப்படி பூஜைக்கு கொடுத்துடுத் தாம். மடத்துல அவளுக்கு ரொம்ப மரியாதையாம்.

''நீ என்ன சொல்றே...நான் உனக்கு பாக்கட்டுமா.''

சரி பார் என்று சொல்ல மனம் ஆசைப்பட்டது.

''வேண்டாம்மா,'' வாய் மறுத்தது.

''ஏண்டா.''

''எனக்கு நாலாயிரம்ரூபா சம்பளம் வரட்டும்.''

''முடியாது, நீ இப்பவே பண்ணிக்கணும்.'' தங்கை குழந்தைபோல் சீறினாள்.

பிரசாத் வீட்டை விட்டு வெளியே நடந்தான். மடத் துக்குப் போனான். ராகவேந்திரரை நமஸ்கரித்தான்.

ஒரே ஒரு நம்பர் விக்கிறத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டு, எனக்கு கல்யாண ஆசை வேற காட்றியா. ரெண்டாயிரம் ரூபா சம்பளத்துல கல்யாணம் பண்ணிண்டு, பொண்டாட்டியை ரெண்டாயிரம் ரூபா சம்பளத்துக்கு வேலைக்கு அனுப்பி, இந்த திருவல்லிக்கேணி சந்துலேயே சாகச் சொல்றியா...நான் மூச்சுமுட்டி செத்துப் போயிடுவேன்.

ஒவ்வொருத்தருக்கும் எவ்ளோ அழகா வீடு கொடுக்கிறே. எனக்கு காரும் வேண்டாம். பங்களாவும் வேண்டாம்.

வீடு காத்தோட்டமா இருக்கணும். நாத்தமில்லாம இருக்கணும்.

அதே மாதிரி பிடிச்ச வேலை, சந்தோஷமான வேலை ஒரு மனுஷனுக்கு ஏன் கிடைக்கக்கூடாது.

ராகவேந்திரா...நான் சோம்பேறியில்லை. உழைக்கிறது ஒரு பிரச்சனையேயில்லை. யாருமே லட்சியம் பண்ணாத தீயணைப்புக் கருவியெல்லாம் விக்கிறதுக்கு என்னை விரட்டாதே. வேற ஏதாவது விக்கிறதுக்கு ஏற்பாடு பண்ணு.

வேணா, வடாம், அப்பளம் விக்கட்டுமா. வெறும் உருளைக்கிழங்கு வறுவலை மாமா சிப்ஸ், தாத்தா சிப்ஸ்னு விக்கிறானே...அந்தமாதிரி ஏதாவது செய்யட்டுமா.

மனம் ராகவேந்திரரை நாடிப்போனது. அவரை நாடி பேசியது.

மடத்துக்குள் நுழையும் முன்பே பிருந்தாவனம் கண்ணில் நின்றது. படியேறினான். உள்ளே போனான்.



''அட...பிரசாத் வந்துட்டான்.'' பீமாராவ் மராட்டியில் கத்தினார்.

''என்ன பீமாராவ்.''

''தண்ணீர் இறைக்கணும்பா.''

பிரசாத்திற்கு சட்டென்று உள்ளே ஒரு கோபம் வந்தது.

''சாயந்திரம் குளியலுக்கா.''

''நான் குளிச்சாச்சு. கார்த்தால நீ இறைச்ச தண்ணியிலேயே குளிச்சுட்டேன். பம்ப் மேஜர் ரிப்பேர். வேற பம்ப் வாங்கிண்டு வரேன்னு இங்க வர்றவர் கார் எடுத்துண்டு போயிருக்கார். அப்படியே வாங்கிண்டு வந்தாலும், கட்டிடம் கட்டி பம்ப் வைக்கணும், ரெண்டு நாளாகும்.

நாளை காலையில ஒரு ஹோமம். குரு பூஜை. இந்த இடம் முழுக்க பிசுபிசுன்னு ஒட்டறது. பத்து குடம் இறச்சுக் கொடுத்தீன்னாக்க, சரசரன்னு தள்ளிடலாம். பிளீச்சிங் பவுடர் வாங்கி வைச்சிருக்கேன். கொஞ்சம் ஹெல்ப் பண்ணு.''

''இறக்கிறத்துக்கு உங்க ஆட்கள் யாரும் கிடைக்காது இல்லியா.'' பிரசாத் கேலியாகக் கேட்டான்.

''நீயும் எங்க ஆள்தாண்டா.''

''கிருஷ்ணாராவ், ராமாராவ், மாதவராவ்னு பொங்கல் சாப்பிடறதுக்கு மட்டும் நூறு நூத்தம்பதுபேர் வருவாங்களே... இப்போ ஒருத்தரையும் காணோம்.''

''அப்படி பேசச்கூடாது. காத்தால தண்ணி இறக்குறதுக்கு ஆள் வேணுமேன்னு நான் நினைச்ச போது நீ

வந்தே, சாயங்காலம் நினைச்ச போது நீ வர்றே, ராயருக்கு தண்ணி இறச்சு ஒரு நாளும் குறைவு வராது.

இன்னிக்கி காத்தால தண்ணி இறைச்சே... உடனே கைமேல பலன் கிடைச்சிருக்குமே... பிஸ்னஸ் ஒஹோன்னு ஆயிருக்குமே...'.

"இல்லை."

"என்னது..."

"ஆகலை."

"அப்படியா... அதான் சாயந்திரமும் ராயர் உன்னையே தண்ணி இறைக்கச் சொல்றார்."

"பீமாராவ். எனக்கு வயசாயிடுத்து என்னால தண்ணி இறைக்க முடியலைன்னு சொல்லுங்கோ. சும்மா ராயர் கூப்பிட்டார் ராயர் சொல்றார்னு சொல்லாதீங்கோ."

"டேய்... வேண்டாம். விட்ரு. வேற யாராவது இறைச்சுட்டுப் போறா. ராயர் வேலையை சந்தோஷமா முக மலர்ச்சியோட பண்ணனும். அழுதுண்டே செய்ய வேணாம்."

"குடம் எங்கே இருக்கு"

"முடியலன்னா பரவாயில்லே. ராயர் வேற யாரையாவது அனுப்புவார்."

"என்னால முடியும். குடத்தைக் கொடுங்கோ."

பிரசாத் குடம் வாங்கிக்கொண்டு மடத்திற்கு பின் பக்கம் போனான். குடத்தின் கழுத்தில் சுருக்கிட்டு. கிணற்றில் இறக்கினான். கழுத்துக் குறுகலான பெரிய சொம்புக் குடம் அது.

நீரை தொட்டியில் விட, அதை சிறிய பக்கெட்டில் பீமாராவ் எடுத்துக் கொண்டு போய், தரையில் அடித்து



வீசினார். பிளீச்சிங் பவுடர் தூவினார். மூக்கை அறுக்கும் நெடி அந்த இடத்தில் சூழ்ந்தது.

பீமாராவ் குனிந்து தென்னந் துடைப்பம் போட்டு, பிளீச்சிங் பவுடரை நிரப்ப.

"மாமா நான் அலப்பி விடட்டுமா." ஒரு குயில் குரல் கேட்டது.

இடுப்பு அசைய, புடைவையை சற்று தூக்கிப் பிடித்து நுனிக்காலில் நடந்தபடி, அந்தப் பெண் கற்பகவல்லி உள்ளே வந்தாள்.

"சத்குரு... யாராவது செய்ய மாட்டாளான்னு நினைச்சேன். நல்ல வேளை, நீ வந்துட்டே ...பிளீச்சிங் பவுடர் அலர்ஜி இல்லியே..."

"எதுவுமே அலர்ஜியில்லை."

அவள் குத்திட்டு உட்கார்ந்து, துடைப்பத்தால் நீர் கலந்து பிளீச்சிங் பவுடரை பரப்ப ஆரம்பித்தாள்.

அவளைப் பார்த்து திகைத்துப் போன பிரசாத் சுதாரித்துக் கொண்டு மட மடவென்று நீர் சேந்த ஆரமபித்தான், கிணற்றுக்கு அருகிலுள்ள சிமெண்ட் தொட்டியை நிரப்பினான்,

பீமாராவ் சிறிய பக்கெட்டுகளில் நீர் எடுத்துக் கொண்டு போய், தரையை ஈரப்படுத்தினார்.

"கற்பகம். எண்ணைப் பிசுக்கு. வழுக்கிடப்போறது, ஜாக்கிரதை. கண்ணுல பிளீச்சிங் பவுடர் பட்டுதுன்னா, உடனே தண்ணிவிட்டு அலம்பு. கசக்காதே."

கற்பகம் பின்னல் அசைய உற்சாகமாய் தரை தேய்த்தாள். இரண்டு முறை நிமிர்ந்து பிரசாத்தைப் பார்த்தாள்.

''பிரசாத்தோட அம்மா ரொம்ப நல்லவ மகா சாது. ஒரு அஞ்சு வருஷம் மாமியார் வீட்ல பாடுபட்டா. பிரசாத்தோட அப்பாவும் ரொம்ப நல்லவர்.

எங்க அம்மா சின்ன வயசிலேயே விதவையாயிட்டா. கொஞ்சம் தான் இப்பிடி ஆயிட்டோமேங்கிற ஆதங்கத்துல மத்தவாகிட்ட கடுமையா நடந்துக்குவா. நானும் கோவிச்சுண்டா ரொம்ப வருத்தப் படுவோங்கிறதுனால நான் கோச்சுக்கிறதில்லை. வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசாத, கொஞ்சம் விட்டுக்கொடுத்து நடந்துக்கோ. உனக்கு தொந்தரவு இல்லாத, நான் இருப்பேன்னு சொன்னாராம்.

நல்லவேளை...மாமியார் ரொம்ப படுத்தலை கண்ணு தெரியாத ரோடு கிராஸ் பண்றபோது, ஸ்கூட்டர் காரன் இடிச்சு தூக்கிப் போட்டுட்டு போயிட்டான். பத்து நாள் ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில இருந்து, ஜுரத்துல செத்துப் போயிட்டா.

அறுபதாயிரம் ரூபா இன்ஷுரன்ஸ் கம்பெனி நஷ்ட ஈடு கொடுத்தது. அதை அப்படியே பண்டாபீஸ்ல போட்டு ஒன்றரை லட்சரூபா ஆனவுடனே, எடுத்து, மூத்த பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்தா.

அதுலேருந்து ஒரு குண்டுமணி தங்கம் கூட பிரசாத் அம்மா எடுத்துக்கலை. பாட்டி சொத்தை பேத்தி எடுத்துக்கலாம். மாமியார் சொத்தை மருமக எடுத்துக்கலாமா. எனக்கு வேண்டாம்பான்னுட்டாளாம்.

எத்தனை நல்ல மனசு இருந்தா அவ இப்படி சொல்லுவா. என் ஆம்படையான் சம்பாதிச்சுப் போட்டாதான் எனக்கு மரியாதை.

ஒரு வேளை, என் ஆம்படையானால நகை பண்ணிப்போட முடியலைன்னா..., பட்டுப்புடவை வாங்



கித் தர முடியலைன்னா...பரவாயில்லை. என்னை மரியாதையா நடத்தி, வயிறார சோறு போட்டா போறும்.

இது வேணும் அதுவேணும்னு எம் புருஷனை நான் கேக்கவே மாட்டேன். ஏன் தெரியுமா. என் புருஷனும் கேக்கறதேயில்லை. இதை பண்ணிப்போடு அந்தக்காரியம் பண்ணு அப்படின்னு சொல்றதேயில்லை. என்ன செஞ்சு போட்டாலும் சாப்பிட்டு போயிடுவார். எனக்கு முடியலை...தான் உக்காந்து செய்வார்.

குழந்தைகளைக் கூட அவர் மிரட்டறதில்லை. படிப்புக்குக்கூட அதட்டறதில்லை.

கணக்குல நாப்பது மார்க் வாங்கிண்டு வந்தா கடைசி இவ.

இதான் உன்னால முடியும்னா ரொம்ப சந்தோஷம்னுட்டார். அடுத்த தடவை எண்பது மார்க் வாங்கிண்டு வந்தா. அதுக்கும் பாராட்டில்லை.

பர்ஸைப்பிரிச்சு, இருவது ரூபா கையில கொடுத்து, என்ன வேணுமோ வாங்கிக்கோன்னுட்டார்.

குழந்தை அந்தக்காசை எங்கிட்ட கொடுத்துட்டா. அவ என் பொண்ணாச்சே...

இதுதான் மாமி எங்க வீடு. எங்களுக்குள்ள கிச்கிமார் சண்டை கிடையாது.

எங்க ஆத்துக்கு வரப்போற பொண்ணும், கோபப்படாத பொண்ணு, குரல் உயர்த்தாத பொண்ணா இருக்கணும்.

ஆடலாம், பாடலாம், அவசியமானா கார்த்தால ஏழு மணிவரைக்கும் தூங்கலாம். அம்மா வீட்டுக்குப் போகலாம். வரலாம். ஒரு கட்டுப்பாடும் கிடையாது.

பதட்டமில்லாம இருக்கணும். மத்தவாள பதட்டப்படாம வைக்கணும்.

என் புள்ளைக்கு ரெண்டாயிரம் ரூபாதான் சம்பளம். வேலைக்குப் போற பொண்ணா இருந்தா நல்லதுன்னு நினைச்சிண்டிருக்கோம். அவன், சம்பளம் போறலை இப்போ கல்யாணம் வேண்டாம்னு சொல்றான்.

இவன்கூட இவனைவிட சுமாரா படிச்சவான்லாம் ஓஹோன்னு இருக்கா. இவனுக்கு என்னமோ பகவான் கண்ணை திறக்கலை.

இந்த வீடு எங்களுக்கு போறாதுதான் மாமி. பாவம் எம்புள்ள வராண்டாவிலதான் படுத்துக்கறான். நிம்மதியா தூங்க முடியலையேனு வருத்தப்படறான். என்ன பண்றது...சுகப்படறதுக்குன்னு ஒரு நேரம் வரணுமே...

இந்த ராகவேந்திரர் எம்ப்ராய்டரி ரொம்ப நன்னா இருக்கு. நூறுரூபாயன்னாக்கூட வாங்கிடுவேன். நானூறு ரூபாய்க்கு விக்கிறதுன்னா அதை எப்படி நான் நூறு ரூபாய்க்கு கேக்கறது. அந்தப் பொண் சௌக்கியமா இருக்கணும். அவளுக்கு நல்ல புருஷனா கிடைக்கணும்.

எங்க வீட்ல யாருக்கும் இந்த மாதிரி கைவேலையெல்லாம் தெரியாது. யாராவது செய்தா அவாளை ரொம்ப மரியாதையா பாப்போம்.

அந்த பெண் கன்யாராசி அதான் உடம்பும் பொம்மனாட்டியா, மனசும் பொம்மனாட்டியா இருக்கு.

நான் நல்ல வரன் காதுல பட்டா சொல்றேன் மாமி.''

பிரசாத்தின் அம்மா எம்ப்ராய்டரியை மடித்து திருப்பி கொடுத்துவிட்டாளாம். மறுமுறை பிரித்துப் பார்த்து கண்ணில் ஒற்றிக் கொண்டாளாம்.



''வேற யாருக்காவது இப்படிப் பேச மனசு வருமா. அது ஒரு நல்ல குடும்பம்.

கற்பகவல்லியை பக்கத்துவீட்டு மாமி வாயார பாராட்டினாள்.

கூட இருந்து குறைச்சல் மார்க் வாங்கினவனெல்லாம் நல்ல சம்பாத்தியத்திலிருக்க உனக்கு மட்டும் ஏன் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம். உன் முகம் ஏன் உலர்ந்து போயிருக்கிறது.

விற்பனையாளனுக்கு முகம் பள்பளப்பாக இருக்க வேண்டாமா. முகம் பளபளப்பாய் இருக்க, இரவு தேங்காய் எண்ணெயால் முகத்தை துடைத்துக் கொள்ள வேண்டுமென்று யாரும் சொல்ல வில்லையா...

பதினைந்து ரூபாய்க்கு களிமண் பவுடர் விற்கிறது. அதை வாரத்திற்கு ஒரு முறை குழைத்து முகத்தில் அப்பிக் கொண்டால் முகம் புத்துணர்வு பெறும் என்று யாரும் சொல்ல வில்லை.

கால் நகம் சரியாக வெட்டவில்லை. கை நகமும் இதே நிலையில் தானே இருக்கும். சுத்தம் சோறு போடுமென்று படித்ததேயில்லையா.

சுத்தமாய் இருக்கிறவரிடம் மகாலெட்சுமி கடாக்ஷம் இருக்கும். லக்ஷ்மி கடாக்ஷம் உள்ளவர்களை மற்றவர்கள் எளிதில் நம்புவார்கள். புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

பொறுப்பு என்பது உத்யோகபலம். உத்யோகபலம் தான் செல்வம். செல்வத்தின் வெளிப்பாடு சோறு.

நீ உன்னுடைய கிராப்பைக் கூட சிறிதாக வெட்டிக் கொள்ள வேண்டும். தலை முடி இவ்வளவு கலையக் கூடாது.

ஏன் முகத்தை தூக்கிக் கொண்டு தண்ணீர் இறைக்கிறாயென்று தெரியவில்லை. செய்கிற வேலையை சந்தோஷமாகச் செய். இல்லையெனில் உதறிவிட்டுப் போய் விடு.

கற்பகவல்லி பிளீச்சிங் பவுடரை தேய்த்து தேய்த்து பரப்பினாள்.

வேலைக்குப்போ வேலைக்குப்போ என்று அம்மா சொல்லிக் கொண்டேயிருக்கிறாள். ஆபீஸ் வேலைக்குப் போவதற்கு இஷ்டமேயில்லை. யாருடைய கணக்கு வழக்குகளையோ யாருக்காகவோ பார்ப்பது மூட நம்பிக்கையைப் போல் இருக்கிறது.

''சேமியா விக்கலாம். வர்றியாடி. அணில் மார்க் சேமியா. வீடு வீடா, கேண்டீன் கேண்டீனா, போய் வித்துட்டு வரலாமா.''

போனாள். சில வீட்டில் முகத்திலடிப்பது போல பேசித் துரத்தியது பிடிக்கவில்லை.

''தஞ்சாவூர் பெயிண்டிங் கத்துக்கறியா, நாலாயிரம் ரூபா ஆகும்.'' யாரோ கூப்பிட்டபோது, ஆசையாக இருந்தது ஆனால், காசில்லை.

''கற்பகம் வேலைக்குப் போக வேண்டாம். வீட்டோடு இருக்கிற வரனாக பார்க்கலாம். புருஷனை வேலைக்கு அனுப்பிவிட்டு ஒழிந்த நேரத்தில் அவள் ஆனந்தமாய் கைவேலைகள் செய்து கொண்டிருக்கட்டும்.

அப்பா அவளை வேலைக்கு அனுப்ப மறுத்து விட்டார்.



''வேலைக்கும் அனுப்ப மாட்டேள். பத்து சவரனுக்கு மேலேயும் போட மாட்டேள். எப்படி கல்யாணமாகும்.''

''எல்லா வசதியும் இருக்கிற பெண்களுக்கு உடனே கல்யாணமாயிடறதா. அப்படி கல்யாணம்மானவா எல்லாம் சௌக்கியமா இருக்காளா.

கற்பகம் இங்க வா. சின்னதும் பெருசுமா பத்துப் படம் போடு. எம்ப்ராய்டரியில படம் போடுறியோன்னோ... பத்து ராகவேந்திரர் படம் போட்டு பத்தாவது படம் போடும் போது கல்யாணம் முடிவாயிடும்.

அவசர அவசரமா போடாதே. அலட்சியமா போடாதே. ஒவ்வொரு படமும் யார் வீட்லயோ, காலா காலத்துக்கு, காவல் தெய்வமா இருக்கப் போறதுன்றதை நினைச்சுண்டே போடு. உன் பேரை போடாதே.

ராகவேந்திரரே தன்னை எம்ப்ராய்டரியா வரைஞ்சுண்டார்னு நினைச்சிண்டு படம் போடு. அதுல வர்ற காசை, அப்படியே மடத்துப் பேர்ல தினப்படி பூஜைக்கு கொடுத்துடு.

குருவை சந்தோஷப்படுத்து, குருவுக்கு மரியாதை கொடு. குருவை கொண்டாடு. உன் கல்யாணத்தை அவர் பார்த்துப்பார். உன் புருஷனை அவர் கூட்டிண்டு வந்து விடுவார்.

நீ வேலைக்குப் போய் வேதனைப்படறது எனக்குப் பிடிக்கலை. போய்த்தான் ஆகணும்னா போ.''

கற்பகம் பிளீச்சிங் தரை மொத்தத்தையும் தென்னந்துடப்பத்தால் பரப்பினாள். இடுப்பும் முதுகும் வலித்தன. மனசு சந்தோஷமாக இருந்தது.

அவன் கால்களை பரப்பிக் கொண்டு முதுகு வளைக்காமல் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தான்.

கரணைக்கரணையான கால்களும், முதுகும் அவளுக்குப் பிடித்திருந்தன.

அகலமாக இருந்தான். அழகாக இருந்தான். முகம் மட்டும் அமைதியற்றிருந்தது.

அவள் நிமிர்ந்து புடவைத் தலைப்பு உதறி இடுப்பில் சொருகிக் கொண்ட போது, திமிறிய பெண்மை கண்ணில் தட்டுப்பட்டது. கன்னச் செழுமையும், பற்கள் வரிசையும் பரவசப்படுத்தின.

அவள் பிளீச்சிங் பவுடரை பரப்பினவிதமே ஒரு அமைப்பாக, ஒரு அழகாக கடலலை போல், வளையம் வளையமாக இருந்தது.

இவளோடு பேச வேண்டும் என்று ஆசை துளிர் விட்டது.

அவளுக்கும் அது போல ஒரு ஆசை உண்டாயிற்று.

அவனுக்கும் உற்சாகமாக அவளிடம் ஏதாவது பேச வேண்டுமென்று தோன்றியது. ஆனால் என்ன பேசுவது.

எம்ப்ராய்ட்ரியில் ராகவேந்திரர் படம் மிக நன்றாக இருந்தது. எனக்கொன்று அது போல செய்து தாருங்கள் என்று கற்பகத்திடம் கேட்கலாமா. ஆனால், ஒரு படம் நானூறு ரூபாய் ஆகிறதாமே...

நானூறு ரூபாய்க்கு எங்கே போவது. வெறுமனே பாராட்டுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல ராகவேந்திரர் படம் போட வேண்டும். மூலராமருக்கு பூக்கள் போடுவது போன்று பிரகாசமான



படம் போடவேண்டும். அப்படியொரு படம் போட்டதேயில்லை.

அப்படி ஒரு படம் போட்டு, இவனிடமோ இவன் அம்மாவிடமோ கொடுத்துவிட வேண்டும். முடிந்தபோது முடிந்த காசை கொடுங்கள் போதுமென்று சொல்லிவிட வேண்டும்.

உலகத்தில் நல்லவர்களை சந்தோஷப்படுத்துவது மிக முக்கியம்.

‘‘என்ன...பிளீச்சிங் பவுடர் போட்டுட்டியா’’ பீமாராவ் பின்கட்டுக்கு ஓடி வந்தார்.

‘‘அடேங்கப்பா...இந்த நெடி அடிக்கிறதே... இதுகூட காசு கொடுத்து வாங்கலை. மடத்துக்கு வந்தவர் கொடுத்ததுதான்.

லெதர் க்ளீன் பண்ண உபயோகிக்கிற பிளீச்சிங் பவுடர் ஜாக்கிரதையா யூஸ் பண்ணுங்கன்னாரு. ஒன்னும் எரியலையே...’’

‘‘விரல் நகமெல்லாம் எரியறது.’’ கற்பகம் கைகளைக் காட்டினாள்.

‘‘சத்குரு. சொல்லப்படாதா. இங்கவா. தொட்டியில கையவிட்டு வேகமா அலம்பு. இந்த துண்டால சுத்தமா துடைச்சிக்கோ.’’

‘‘நெடி ரொம்ப ஜாஸ்தியா இருக்கு சார்’’ பிரசாத் மூக்கை மூடிக் கொண்டான்.

‘‘வாங்கோ...நானும் நினைச்சேன். வாங்கோ அந்தப் பக்கம் போயிடலாம்.’’

பீமாராவ் திறந்த வெளிபக்கம் நகர, அவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

"கற்பகம். இது யாரு தெரியுமோ...பிரசாத். இதே தெருவுல நம்பர் இருபத்தெட்டுல குடியிருக்கான். இது கற்பகம். இந்தப் பக்கம் நூத்தி இருபத்தி மூணுல இருக்கா.

கற்பகம் போடற எம்ப்ராய்டரி பாத்துருக்கியா பிரசாத்."

பிரசாத்திற்கு பீமாராவ் மீது திடீரென்று நன்றி வந்தது. சந்தோஷம் வந்தது.

"பாத்துருக்கேன் பீமாராவ். ரொம்ப நல்லாருக்கும்."

"இது வரைக்கும் ஏழு போட்டுருக்கா ஒவ்வொண்ணும் முந்நூறு நானூறுன்னு வித்து மடத்துக்கு கொடுத்துடுவா. மடத்திலேயே இருக்கும்படியா ஒண்ணு போடச் சொல்லிருக்கேன். நல்லா பெருசா, ஆறடிக்கு நாலடி, சிஷ்ய கோடிகளோட நடந்து வர்றா மாதிரி, துங்கபத்ரா நதி, காடு, மொகலாயர் கோட்டையெல்லாம் இருக்கணும்னு சொல்லிருக்கேன். போடறேன்னு சொல்லிருக்கா.

கற்பகம், பிரசாத் எனக்கு தெரிஞ்சு ஆறு வயசிலேருந்து இந்த மடத்துக்கு வர்றான். ரொம்ப நல்ல பையன். ரொம்ப ஒழுக்கமானவன். ரொம்ப தெளிவானவன்.

கார்த்தால நாலே முக்காமணிக்கு வந்து, தொட்டி முழுக்க ஜலம் ரொப்பிட்டுப் போறான்.

இன்னிக்கு நீ இறைச்ச ஜலத்தாலதான் ராயருக்கு அபிஷேகமாச்சு. ராயருக்கு அபிஷேகம் பண்ற போது உன்னை நினைச்சிண்டேன்.

சாயந்திரம் தண்ணி இறைக்கிறதுக்கு, எங்க மனுஷாள்லியே ஒரு நாலுபேரை கூப்பிட்டேன். இதோ வரேன்னு போனவன்தான்... ஒருத்தனையும் காணோம்.



மடத்திலே இன்னிக்கி பாயசம்னு சொல்லு. நாலஞ்சு குழந்தைகளை கூட்டிண்டு வந்துடுவான். சொம்போட.

ஒண்ணே ஒண்ணு சொல்றேன். கேட்டுக் கோங்கோ. ராயருக்கு பண்ற சேவை வீணா போகவே போகாது.

இன்னொன்னும் சொல்றேன் கேட்டுக்கோங்கோ. எல்லாராலயும் ராயருக்கு சேவை பண்ணிட முடியாது. நீங்களா வந்தேள். நீங்களா செய்றேள். உங்க ரெண்டு பேருக்கும் ஏதோ நல்லது நடக்கப் போறது. ஆமாம்னு என் நெஞ்சுக் கூட்டுல ராயர் குரல் கேக்கறது. பகவானே உன் இஷ்டம்."

"அலம்பி விட்டுடலாமா..."

"எனக்கு இந்த நெடி தாங்கவேயில்லப்பா." பீமாராவ் துண்டால் முகத்தைச் சுற்றிக் கொண்டார்.

"பீமாராவ். நீங்க துண்டைக் கொடுத்துட்டு அந்தப் பக்கம் போங்க. மறுபடியும் தண்ணி பட்டா நெடி ஜாஸ்தியாகும். அவாளுக்கும் மூஞ்சியில சுத்திக்க ஒரு துணி கொடுங்கோ."

பீமாராவ் இன்னொரு டவல் தர, கற்பகமும் பிரசாத்தும் முகத்தை சுற்றிக் கொண்டு, அந்த ஹாலை அலம்பினார்கள்.

இந்த முறை மிக சந்தோஷமாக பிரசாத் தண்ணீர் இறைத்தான்.

எல்லா மின் விசிறிகளையும் சுழலவிட்டு, தடேதடேரென்று நீரடித்து ஓட்டினான்.

நாற்பது நிமிடத்தில் அந்த இடம் படு சுத்தமாயிற்று.

கற்பகமும் பிரசாத்தும் அசந்து போய், கிணற்று மேடையில் உட்கார்ந்து கொண்டார்கள். ஒருவரை யொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

''உங்க ஜாதகம் வந்தது.'' பிரசாத் மெல்ல பேசினான்.

''ஆமாம். சரஸ்வதி மாமிதான் கொண்டு போய் கொடுத்தா.''

''இதான் எனக்கு வந்த முதல் ஜாதகம். எங்க அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம்.''

''எது ஜாதகம் அனுப் பிச்சதா.''

''இல்ல உங்களைப் பத்தி கேள்விப் பட்டு, ரொம்ப பாராட்டிப் பேசினா.''

''நீங்க வேண்டாம்னு சொல்லிட்டேளாமே...''

''எதை...''

''கல்யாணப் பேச்சையே...''

'ரெண்டாயிரம் ரூபா சம்பளம். ரிக்ஷாக்காரனுக்கே இதைவிட அதிகமா வர்றது. நான் எப்படி சரின்னு சொல்லுவேன்.''

''உங்கம்மா ரொம்ப நல்லவளாம்.''

''எங்கப்பாகூட ரொம்ப நல்லவர். அம்மாவ நான் கோச்சுண்டாகூட அவருக்குப் பிடிக்காது.''

''நீங்க கோச்சுப்பேளா...''

''கடவுளே...அதெல்லாம் பண்ணவே முடியாது. பண்ணவேண்டிய அவசியமில்லை.''

''எங்கே வேலை''.



''ஏதோ ஒரு வேலை, இன்னும் சரியா கிடைக்கலை.''

''குவைத், துபாய்னு போகப்படாதோ.''

''டாக்டர், இன்ஜினீயர்னா போலாம். எனக்கு அப்படி ஒண்ணும் படிப்பில்லையே...கிளர்க்காதானே போகணும். நாய் மாதிரி நடத்துவான். காசு சம்பாதிக்கலாம். மனசு கருகிப் போய்விடும். மனசு கருகிப்போயிட்ட பிறகு, காசை வைச்சுண்டு என்ன பண்றது.

பொண்டாட்டி மேலயும், குழந்தைகள் மேலயும் சீறிவிழறதே வாழ்க்கையாப் போயிடும்.

காசு சம்பாதிக்கிறது சந்தோஷமா இருக்கிறதுக்குத் தானே...நான் துபாய் போகவே மாட்டேன்.

''நீங்க பேசறது எனக்குப் பிடிச்சிருக்கு'' அவன் பேச்சுக்கு உடனடியாக அவள் பதில் சொன்னாள்.

''துபாய்க்குப்போன நிறைய பேர் வீட்ல, மனசு வேதனை அதிகம்.''

''நீங்க சொல்றது கரெக்ட் கற்பகவல்லி. பொண்டாட்டியை விட்டுட்டு மிடில் ஈஸ்ட் போய் பொண்டாட்டி ஏக்கத்துல குடிக்க ஆரம்பிச்சார். ரெண்டு வருஷமா குடிச்சு, குடியைவிட முடியலை. மெட்ராஸ் வந்தும் குடிச்சார்.

பொண்டாட்டி ச்சீ... போடா நாயேன்னு சொன்னா தூக்கு போட்டுண்டு செத்துப் போயிட்டார்.''

''ஐயோ...''

''ரொம்ப நல்ல மனுஷன், மிடில் ஈஸ்ட் போறதுக்கு முன்னாடி ஒரு கெட்ட பழக்கம் கிடையாது.''

''காசு கவிழ்த்து விட்டுடுத்து.'' கற்பகவல்லி பரிதாபம் நிரம்பிச் சொன்னாள்.

இருவரும் சற்றுநேரம் மௌனமாய் இறந்தவரையே நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

கற்பகத்தை நோக்கி திரும்பி, மெல்லியதாய் பிரசாத் சிரித்தான்.

''உங்க வீட்ல கல்யாணத்துக்கு உடனே அவசரப்படுத்தறாளா.''

''அப்படி ஒண்ணுமில்லை. பாத்துண்டே இருக்க. ஏன் கேக்கறேள்.''

''ஒரு வருஷம் உங்களால வெயிட் பண்ண முடியுமா.''

''ஏன்?''

''நாலாயிரம் ரூபா சம்பளத்துக்கு நிச்சயம் வந்துடுவேன்.''

''வந்து...?''

''எங்கம்மாவ அனுப்பிச்சு மேற்கொண்டு பேசச் சொல்லுவேன்.''

''கேக்க நன்னாயிருக்கு. இதப்போய் நான் வீட்ல சொல்லமுடியுமா.''

''ஜாதகம் கொண்டு வந்தாளே... அந்த மாமி பேரென்ன.'' பிரசாத் ஆவலாக கேட்டான்.

''சரஸ்வதி.''

''அவங்ககிட்ட நான் போய் பேசறேன். உங்க வீட்ல சொல்லச் சொல்றேன்.



''உங்களை ஒண்ணும் சொல்லமாட்டா. எங்கிட்ட வந்து, என்னடி லவ்வான்னு கேப்பா. நான் இல்லைன்னு சொல்லணும். சத்தியம் பண்ணணும்.

''என்னைப் பிடிக்கலியா உங்களுக்கு.'' பிரசாத் தாழ்ந்த குரலில் கேட்டான்.

''பிடிச்சிருக்கு. ஆனா லவ் இல்லை.'' நீங்கதான் வேணும்னு சங்கல்பமில்லை. இந்த பிடிச்சிருக்குன்னு சொல்றதுகூட உங்களை மட்டுமே சொல்லலை. உங்கம்மாவை, அப்பாவை எல்லாரையும் சேத்துதான் சொல்றேன்.''

''ஆனா, நான் சொல்றேன் கற்பகவல்லி. உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு. இந்த மாதிரி கைவேலை பண்றவா அமைதியா இருப்பா. அமைதியா இருக்கறதுனால பிரியமா இருப்பா. எப்படியாவது உங்கள கல்யாணம் பண்ணிக்கணும்னு தோணறது. எப்படின்னுதான் தெரியல.''

''ராகவேந்திரர் கிட்ட விட்டுறுங்கோ.''

''விட்டுட்டேன். ''பிரசாத் கண் மூடிக் கொண்டான்.''

அப்புறம் இன்னொரு விஷயம். இன்னிக்கி என்னமோ வாய்ப்பு கிடைச்சது. பின்பக்கம் யாருமில்லை. உக்காந்து பேசிண்டிருந்தோம். இது மாதிரி தினம் முடியுமா. பேசினா நன்னாருக்குமா. நான் இனிமே பேச மாட்டேன். தயவுசெய்து தப்பா எடுத்துக்காதீங்கோ.',

''தப்பா எடுத்துக்கலை. ஆனா, மெல்லிசா சிரிச்சா சந்தோஷமா இருக்கும்.'' பிரசாத் வேண்டுகோள் விடுத்தான்.

''சிரிப்பு தானா வரும் உங்களைப் பார்த்ததும்.''

"எதுக்கு சிரிப்பு வரணும்."

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக, கூட ரெண்டாயிரம்ரூபா சம்பாதிக்கிறதுக்கு என்ன பாடுபடறேளோன்னு நினைக்கிறபோது சிரிப்புதான் வரும்."

"ஏதோ சிரிச்சா சரி."

அவர்கள் இருவரும் சிரித்தார்கள். பிரிந்தார்கள்.

கற்பகம் எழுந்து வெளியே போனாள்.

கழுவிவிட்ட நீர், ஒரு குழாய் வழியே சாக்கடைக்குப் போனது. அந்தப்பாதையில் பிளீச்சிங் நெடி கடுமையாக இருந்தது.

நாளைக்கு ஹோமம் என்று ஏதோ சொல்கிறார்கள். இங்கு உட்கார்ந்தால் மயக்கம்தான் வரும். அல்லது அலர்ஜி ஏற்படலாம்.

இன்னும் மூணுகுடம் தண்ணீர் எடுத்தான் கயிறோடு எடுத்துக்கொண்டேபோய், சாக்கடையில் ஊற்றினான்.

காரநெடி மிகவும் குறைந்தது. ஆனாலும் பிளீச்சிங் பவுடர் தூவியிருப்பது லேசாய் மூக்குக்குத் தெரிந்தது.

ஸ்டோர் ரூமுக்குபோய் இரண்டு கட்டு ஊதுவத்தி வாங்கி வந்தான். செடியில்லாத ஒரு மண் சட்டியில் சொருகி வைத்தான்.

"இடத்தை சுத்தம் பண்ணிட்டேன். சாயந்திரம் எல்லா சாமான்களும் வந்துரும். கார்த்தால பஞ்சகச்சம் கட்டிட்டு வாங்கோ. ஹோமம் பண்ணிடலாம். யாரு ஊதுவத்தி கொளுத்தி வைச்சது."

"நான்தான் பீமாராவ்."



"வெரிகுட். சார்தான் நாளைக்கு சுதர்சன ஹோமம் பண்ணப் போறார். கணபதி பட்டுன்னு பேரு. கெமிக்கல் வியாபாரம். அவரு பேரு பிரசாத். சின்ன வயசிலேருந்தே மடத்துக்கு வர்றார். ராயரண்ட ரொம்ப பிரியம்.

நம்ம ஆட்கள் வேலைக்குன்னா வர்றதேயில்லை. இவர் கேட்டுக்கேட்டு வேலை வாங்கிப்பார். இந்த மடத்துக்குள்ள என்ன வேலை செய்தாலும், அது ராயரோட வேலைன்னு தெளிவா இருக்கார்."

"எங்கியாவது வேலை பண்றேளா." கணபதி பட் விசாரித்தார்.

"ஆமாம்." பிரசாத் விவரம் சொன்னான்.

"நாளைக்கு ஒரு நாள் லீவுபோட முடியுமா. என் புள்ளைகளுக்கு வரமுடியல. ரெண்டுபேரும் மைசூர்ல இருக்கா. சரியான ஆள் இல்லாம, இந்த ஹோமம் சுணங்கப்படாது."

"நான் இருக்கேன் சார்." பிரசாத் தன்னையறியாமல் சொன்னான்.

பீமாராவோடும், பண்டிதர்களோடும், அவர் விவாதிக்கும் வரை அவன்கூடவே இருந்தான்.

பீமாராவிடம் திரும்பி பத்தாயிரம் ரூபாய் கட்டு கொடுத்தார். பிரசாத்திடம் திரும்பி, பீமாராவிற்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னார்.

துணிகளும், மூலிகைகளும், உணவுப் பொருள்களும், பூஜை சாமான்களும் வாங்கினார்கள். ஸ்டோர் ரூம் பூட்டி வைத்தார்கள்.

"நூத்தி இருபத்தி மூணுல கற்பகவல்லிகிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு வர்றியா... நான் கணபதி பட்டுகிட்ட கொஞ்சம் பேசிட்டு வர்றேன்."

பக்கத்து வீட்டு குழந்தைக்கு கற்பகவல்லி சாதம் ஊட்டிக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் துள்ளி எழுந்தாள். கொஞ்சம் மிரண்டாள்.

''பீமாராவ் கொஞ்சம் வந்துட்டுப் போகச் சொன்னார்.

''எதுக்கு.''

''தெரியல.''

''கோலம் போடறதுக்கா இருக்கும்டி'' கொஞ்சம் தடித்த அம்மாள் கற்பகவல்லி வீட்டை விட்டு வெளியே வந்தாள்.

''நீங்க யாரு.''

''பிரசாத்.''

''அம்மா இவர் கல்யாணி மாமி பிள்ளை.''

அந்த அம்மாவிற்குப் புரிந்தது. சட்டென்று அமைதியானாள். வாங்கோ என்று போர்த்திக் கொண்டாள்.

வாங்கின சாமான்களை, ஸ்டோரில் இடம் பார்த்து பொட்டலங்களைப் பிரித்து, பிளாஸ்டிக் கவரில் போட்டு பிரசாத் வைக்க, அம்மாவின் துணையோடு பெரிய பெரிய தாமரைக் கோலம் கற்பகவல்லி போடத் துவங்கினாள்.

முதல் இரண்டு முறை பார்க்கும் போது அவர்கள் பார்வை பரவசமாய் சந்தித்துக் கொண்டன. பிறகு, மனசு வேலையில் ஈடுபட, பரபரப்பு, தானாய் அடங்கிப் போயிற்று.

அவள் கோலம் முடிக்க நள்ளிரவு பனிரெண்டு மணி ஆயிற்று.

அவனுடைய வேலை முடிக்க ஒரு மணியாயிற்று.



படுத்தவுடன் தூக்கம் கவ்விக் கொண்டது. விடியற் காலை ஐந்து மணிக்கு விழிப்பு வந்தது.

குளித்து விட்டு, மடத்துக்குப் போக பகல் பதினொரு மணிவரை, வேலை சரியாக இருந்தது.

கணபதிபட் மனைவியோடு மட்டுமே வந்திருந்தார். இவர்கள் ஏன் வரவில்லை அவர்கள் ஏன் வரவில்லை என்று வாசலையே பார்த்துக் கொண்டிருந்தார். யாரும் வரமாட்டார்களென்று தெரிந்து முழுவதுமாய் ஹோமத்தில் கவனம் செலுத்தினார்.

''பத்து பன்னெண்டு உறவுக்காரப்பசங்க இருக்காங்க. ஒருத்தரையும் காணோம். நீ மட்டும் இல்லேன்னு வைச்சுக்கோ. ஹோமம் சிரமப்பட்டிருக்கும்.''

''இல்ல சார், பீமாராவ் குரல் கொடுத்தா திருவல்லிக்கேணியில பாதி பேர் வந்துருவா. பீமாராவ் கூப்பிடற இல்லை. எவனுக்கு கொடுப்பனை இருக்கோ அவன் வரட்டும்னு நினைப்பார். இந்த மடம் மனுஷாள நம்பி நடக்கலை. ராயரை நம்பி நடக்கிறது.'' பிரசாத் பேசிய படியே பிருந்தாவனத்தை சுட்டிக் காட்டினான்.

''எத்தனை நாளா சேல்ஸ்ல இருக்கே.''

''ஆறு வருஷமா.''

எங்கெல்லாம் இருந்திருக்க...''

''மெட்ராஸ், ஆந்திரா ரெண்டு இடம் மட்டும்தான். ஆந்திரா ஒத்துக்கலை. விட்டுட்டு வந்துட்டேன்.

''தமிழ்நாடு ஒத்துக்குமோ.''

''புரியலையே...''

''திருச்சி தஞ்சாவூர் ஒத்துக்குமானு கேக்கறேன்.''

''தஞ்சாவூர் நான் பொறந்த இடம் சார். திருச்சி எங்கம்மாவுக்கு பிறந்த ஊர். ஏன் சார் கேக்கறேள்.''

‘‘நான் பூச்சி மருந்து தயார் பண்றேன். மைசூர்ல தொழிற்சாலை இருக்கு. மைசூர், மாண்டியா, துங்க பத்ரா, கூர்க் எல்லா இடத்திலேயும் அற்புதமாவிக்கிறது நானே ஒரு கெமிஸ்ட். புதுசு புதுசா நானே நியை மருந்து கண்டு பிடிக்கறேன்.

தமிழ்நாட்டுப் பக்கம் யாரும் எனக்கு சரியா ஆள் கிடைக்க மாட்டேங்கிறாங்க. டீலர் விக்கிறதைவிட, ரெப்ரசன்டேட்டிவ் வைச்சா, நல்ல விற்பனையாகும்ன் றது என் அபிப்ராயம்.’’

‘‘ஏன் சார்.’’

‘‘டீலர் ஏமாத்தறான். மருந்துல தண்ணியைக் கலந்து. ஒரு பாட்டிலை ரெண்டு பாட்டிலா வித்து வீரி யத்தை குறைக்கிறான். பவுடர்ல கலப்படம் பண்றான். வேற பிராண்டு விக்கிறது. விக்கிறதுக்காக நம்ம பிராண்டை மட்டப்படுத்தறான். ஒரு வாரம் மைசூருக்கு வா. நான் பூச்சிமருந்தைப் பத்தி பாடம் நடத்தறேன். தமிழ்நாட்டுல எல்லா இடத்துலேயும் நான் கைவைக் கலை வெத்தலையை மட்டும் பிடிக்கணும்னு நான் ஆசைப்படறேன்.

நீ எனக்கு ஹெல்ப் பண்ணு பிரசாத். நரன் உனக்கு ஹெல்ப் பண்றேன். எனக்கு டீலர்டெபாசிட் வேணாம். ஹானஸ்டி வேணும் என் கம்பெனிய உன் கம்பெனியா நினைக்கணும்.’’

‘‘செய்றேன் சார். ஆனா, என் வீடு திருவல்லிக்கேணி யில இருக்கு. தங்கை இப்போ ஒன்பதாவது படிக்கிறா.’’

‘‘பீமாராவ் உன் வீடு பத்தி சொன்னார்: அதனால் தான் உன்னோட தைரியமா பேசறேன். உனக்கு கல்யா ணத்துக்கு பாத்துண்டிருக்காங்களாமே...’’

‘‘ஆமாம் சார்.’’



‘‘திருச்சி பக்கம் சின்ன டவுன்ல போய் தங்கு. வெத் தலை பெல்ட் எங்கோ இருக்கோ அந்த இடத்துல உக்காந் துக்க. வேலை பிடிச்சிருந்தா கல்யாணம் பண்ணிக்க. அப்பா அம்மா திருவல்லிக்கேணியில இருக்கட்டும். உங்கப்பா ரிடையர்ட் ஆனபிறகு அந்தப்பக்கம் கூட் டிக்கோ.’’

‘‘நான் போய் பாக்கறேன் சார்.’’

‘‘பிரம்மச்சாரி லைஃப் கிராமத்துல கஷ்டமா இருக் கும். கல்யாணம் பண்ணிண்டா ரொம்ப நிம்மதியா இருக்கும், நான் கல்யாணமாகி முதல் பத்து வருஷம் கூர்க்லதான் இருந்தேன். காஃபி கொட்டை பூச்சிக ளோட மல்லாடிகிட்டிருந்தேன். என்ன சொல்றே...’’

‘‘பூச்சி மருந்து ஒரு பெரிய ஃபீல்டு சார். நிறைய ஸ்கோப் இருக்குன்னு கேள்விப்பட்டிருக்கேன்.’’

‘‘நிச்சயமா வாய்ப்பு இருக்கு. மருந்து புதுசு புதுசா கண்டுபிடிச்சாகணும். இல்லேன்னா வெத்தலை உயிர் வாழ்றது கஷ்டம் தாக்குப் பிடிக்கிறதுக்கு கத்துக்கோ. மருந்து வித்தாமட்டும் போறாது.வெத்தலையை கவனிச்சு விதவிதமா பூச்சிகளை எனக்கு அனுப்பணும்.’’

‘‘புரியறது சார்.’’

‘‘இப்போ ரெண்டாயிரம் வாங்கறியா.’’

‘‘ஆமாம் சார்.’’

‘‘மூவாயிரம் தர்றேன். திருச்சி பக்கத்துல முசிறி, தொட்டியம்னு ரெண்டு இடங்கள் இருக்கு. எங்க வேணு மானாலும் தங்கிக்க. ரெண்டுமே சின்ன ஊர்தான். ஒரு பத்து வருஷம் ஜாலியா இருக்கலாம். அப்புறம் திருச் சிக்கு வந்துடலாம். தமிழ்நாடு ஹெட்குவாட்டர்ஸை

திருச்சியா மாத்திடறேன். நாலு பசங்களை வைச்சு நீ வேலை செய்யலாம்.

ஆனா ஒண்ணு...என்கூட, மூணுவருஷம் காண்ட்ராக்ட் போட்டுக்கணும்.''

''சரி சார்.''

''உங்க அப்பாவையும், அம்மாவையும் மத்தியானம் மடத்துக்கு சாப்பிட கூட்டிண்டு வா.''

அப்பா கணபதிபட் அருகே உட்கார்ந்து சாப்பிட்டார். அம்மா அவருக்கு நேரெதிரே உட்கார்ந்து கொண்டாள்.

மடத்துக்கு வந்த அறுபதுபேரும் இலையின்முன்னால் உட்கார்ந்து கொண்டார்கள்.

''எம்புள்ளைங்கிறதுக்காக சொல்லலை. பிரசாத் ரொம்ப உண்மையான பையன் சார். அவனுக்கு சரியான வழிகாட்டி கிடைக்கலை.

''நான் வழிகாட்றேன் சார். எனக்கு உண்மையான ஆட்கள் கிடைக்காமத்தான் ரொம்ப அவஸ்த்தைப்பட்டேன்.

பிரசாத் இந்தா ஐநூறு ரூபா. நேரா மைசூர் போ. என் வீட்ல தங்கு.''

பிரசாத் மைசூரின் ஒதுக்குப்புறமாய் உள்ள ஒரு தொழிற்பேட்டையில் கணபதிபட் வீட்டில் தங்கி, வேலை கற்றுக் கொண்டான்.

---

சென்னை வந்தான். புதுப்பெட்டி வாங்கினான். திருச்சிக்குப் போய் இறங்கி, அங்கிருந்து முசிறிக்கு பஸ் பிடித்து, லாட்ஜில் தங்கினான்.



அதுவரை பார்த்தேயிராத இடங்களை வினோதமாய் பார்த்துக் கொண்டு, தொட்டியம் பக்கம் பஸ் பிடித்துப் போய் வெற்றிலைக் கொடிக்காரர்களைப் பார்த்தான்.

''அட... சும்மா கழுத்துப் பட்டை கட்டிக்கிட்டு, பை எடுத்துகிட்டு வந்துடுறீங்க.'' இதைப்பாத்தாலே எங்களுக்கு பிடிக்கல.'' கொடிக்கால் ஆட்களின் முதல் பேச்சே முகத்திலடிப்பது போலிருந்தது.

கழுத்துப்பட்டை உருவி பையில் போட்டுக் கொண்டான்.

''என்ன வோணும்னு இங்க வந்துருக்கே.'' ஒரு வெற்றிலைத் தோட்டத்தில் சீறினார்கள்.

''என் பேரு பிரசாத்.''

''அதனால் என்ன இப்போ.''

''வெத்தலைக் கொடியப்பத்திப் தெரிஞ்சுக்கிறதுக்கு வந்தேன்.''

''எங்ககிட்டயே தெரிஞ்சுக்குவீங்க. எங்ககிட்டேயே பூச்சி மருந்து விப்பீங்க. ரெண்டு வாரம் சுத்தி சுத்தி வந்துட்டு ஊர நாட்டப் பாக்கப் போயிடுவீங்க.

வெத்தலை பொம்பளை தாவரம். கொடிவகை. அதப்பத்தி தெரிஞ்சுக்கணும்னா அதுகூட வாழணும். ரெண்டு வாரத்துல தாலியறுத்துப் போயிட்டா, என்ன தெரிஞ்சிக்க முடியும்.''

''அட கவுண்டரு... ஏன் அவர்கிட்ட போய் சல்லு புள்ளுன்னுகிட்டு. ஏதோ வேலை பாக்க வந்திருக்காரு. விசாரிக்கிறாரு. இந்த வேலை பிடிக்கலைன்னா, வேற வேலைக்குப் போயிடுவாரு. அப்பப்ப இங்க வந்து நிக்க முடியுமா.''

''ஏன் இந்த வேலை ஒருத்தனுக்கும் பிடிக்கலைன்னு தெரியலையே...''

''அவங்க பட்டணத்துக்காரவுங்க. முசிறி தொட்டியத்துல உக்கார முடியலை.''

''நான் இனிமே இங்கதான் இருக்கப் போறேன்.'' பிரசாத் கொடிக்காலுக்கு நடுவே வந்து கூறினான்.

''இந்த மாதிரி ஏகப்பட்ட வஜனம் பாத்துட்டோம். சொல்லிட்டு சாயந்திரம் வண்டி ஏறிடுவாங்க. மறுநா முழுக்க என்னை யாரோ செருப்பால அடிச்சா மாதிரியே இருக்கும்.''

''எனக்குப் புரியுதுங்க. எனக்கொன்னும் சொல்லித் தர வேணாம். ரெண்டுவாரம் தங்கின பிறகு, உங்களுக்கு நம்பிக்கை வந்தா சொல்லிக் கொடுங்க''

''அட நீங்க ஒண்ணு. தேவையில்லாத ரோஷப்பட்டுகிட்டு... கவுண்டருக்கு ஒரு கட்டு பீடியும். ரெண்டு கத்திரிக்கோல் சிகரெட்டும் வாங்கிக் கொடுத்தா சகலமும் சொல்லிடுவாரு.''

''நான் சிகரெட் குடிக்கிறதில்லையே...'' பிரசாத் பேசினான்.

''நாங்க குடிப்போம்.'' விவசாயிகள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''அதுவும் வெத்தலைக் கொடியில குடிக்க மாட்டோம் வெளிய போய் தான் குடிப்போம்.''

''ஏங்க?''

''வெத்தலை கொஞ்சம் வெக்கப்பட்ட பயிரு. தீட்டுப் பட்டா ஆவாது. பீடி, சுருட்டு, குடி, சூது, இதெல்லாம் உள்ள நடக்காது. இது ஒரு மாரியாத்தா கோயில் மாதிரின்னு வைச்சிக்கயேன். செருப்பு போட்டுகிட்டு கூட உள்ளே வரக்கூடாது.''



''நான் எதுனா வேலை செய்யட்டுங்களா.''

''மொரடு கிள்ளிக்கிட்டு வாங்க. மொரடுன்னா பீடா வெத்தலை. ஒரு கொடியிலேருந்து மூணுக்கு மேல பறிக்காதீங்க.''

''இதானே முரடு.''

கரும்பச்சையாய், அகலமாய், கடினமாய். வெற்றிலை இருந்தது. சில கொடியில் நாலைந்து முரடுகள் கூட இருந்தன.

அந்த வெற்றிலை மணமாக, காரமாக இருந்தது. சின்ன துண்டு களிப்பாக்கும், ஒரேயொரு வெற்றிலையும் வாய் முழுக்க மணக்க வைத்தது.

அந்த ஒன்றரை ஏக்கர் தோட்டத்தில் ஆறு ஏழு பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். நாலு விவசாயிகள் கூட்டு சேர்ந்து, நிலத்தை குத்தகைக்கு எடுத்து, குத்தகை பணத்தை முன்னால் கொண்டுபோய் கட்டி, நிலம் சுற்றி அடைத்து மூங்கில் வேலி கட்டினார்கள். தென்ன ஓலைகளால் மறைத்தார்கள்.

பிறகுதான் வெற்றிலை பயிர் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஒரு நாள் முழுவதும் முரட்டு வெற்றிலை பறித்து கொடுத்துட்டு, 'வர்றேங்க' என்று கைகூப்பிப் போய் விட்டான்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு அதே கொடிகாலில் போய் நின்றான்.

இந்த முறை புதிய டிபன்பாக்ஸ் நிறைய ஹோட்டலில் சொல்லி, தயிர்சாதம் எடுத்துப் போனான். கடையில் பத்து ஊறுகாய் பாக்கெட்டுகள் வாங்கிக் கொண்டான்.

பிற்பகல் சாப்பிடும் போது எல்லோருக்கும் ஊறுகாய் பாக்கெட் கொடுத்து, தானும் இரண்டு எடுத்துக் கொண்டான்.

சாப்பிட்டு முடித்த பிறகு, கத்தரிக்கோல் சிகரெட் பாக்கெட்டை கவுண்டரிடம் நீட்டினான்.

''ஐயய்யோ... இதெல்லாம் நமக்கு வேணாங்க.'' கவுண்டர் திடமாக மறுத்தார். வெட்கப்பட்டார். கையில் திணித்தவுடன் வாங்கிக் கொண்டார். பாக்கெட்டை நறுவீசாக பிரித்தார். உங்களுக்கு என்று ஒன்று நீட்டினார். அவன் வாயில் பொருத்திக் கொண்டார்.

கவுண்டர் நெருப்பைக் காட்ட, புகையை வேகமாக இழுத்தான். நெஞ்சுக்குள்ளேயே புகையிலை புகை தாக்கியது. பயங்கரமாக இருமினான்.

''என்னங்க...'' கவுண்டர் வியந்தார்.

''இதுவரைக்கும் பிடிச்சதே இல்லீங்க. இருமுது.''

''அப்போ ஏன் பிடிக்கிறீங்க?''

''வெத்தலை கத்துக்கணும்னுதான்.''

''தூத்தெறிக்க... அதுக்காகவா இந்த சனியினை தொட்டீங்க...'' கவுண்டர் அவன் வாயிலிருந்த சிகரெட்டை பிடுங்கிப் போட்டார்.

''இது பேராபத்தான விஷயம். இதுல மாட்டாதீங்க. இத தொட்டுபுட்டோம்னா விட முடியாது. நான் சொல்லித் தர்றேன் வாங்க.''

கவுண்டர் கெடிக்காலுக்கு வெளியே நின்று அவசரமாக புகைத்து விட்டு. பாத்தியில் ஓடும் நீரினால் கையை கழுவிக் கொண்டார்.



வெற்றிலை பற்றிய கதை அவனுக்கு விவரிக்கப்பட்டது.

''அன்புள்ள கணபதிபட் அவர்களுக்கு,

உங்களுக்கு தமிழ்தெரியும் என்பதால், நீங்கள் பள்ளிக்கூடத்தில் தமிழ் படித்தவர் என்பதால் வெற்றிலை பற்றிய விவரங்களை தமிழிலேயே எழுதுகிறேன்.

ஒட்டுமொத்தமாக காத்திருந்து எழுதாமல், ஒவ்வொரு நாளும் நான் கற்றுக் கொண்டதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

வெற்றிலை ஒரு லக்ஷ்மிகரமான கொடி. பணப்பயிர். கடவுள் அருள் இல்லாவிட்டால் வெற்றிலையில் ஜெயிக்க முடியாது. இந்த இரண்டு வாரத்தில் இது தெளிவாகத் தெரிகிறது.

நெல் மீதும், கரும்பு மீதும் தனியார் துறையும், அரசாங்கமும் கவனம் செலுத்தியது போல, வெற்றிலை மீதுயாரும் அக்கறை வைக்கவில்லை. வெற்றிலைக்கென்று தனியான மருந்துகளை, அடி உரங்களை கண்டு பிடிக்கவேயில்லை.

ஆனால். வெற்றிலை போடுவது அதிகரித்துக் கொண்டே வருகிறது. முன்னைவிட வட இந்தியாவில் நல்ல டிமாண்ட் இருக்கிறது.''

பிரசாத் தினமும் கணபதி பட்டிற்கு கடிதமெழுதினான்.

''இங்கே வாங்க தம்பி.'' இன்னொரு விவசாயியான ராமலிங்கம் பிரசாத்தை அருகே அழைத்தார்.

''இந்தப் பதியன் ஏன் வரலைன்னு தெரியல. நட்டு ஒரு மாசமாச்சு. அடிஉரம் போட்டேன். சாண உரம்

போட்டேன். பூச்சி மருந்து போட்டேன். யாரோ கெட்டவன் தொட்டாமாதிரி, அப்படியே சுணங்கிப் போச்சு பாருங்க.

இங்கே வர எல்லா பூச்சி மருந்து வியாபாரிகள் கிட்டயும் சொல்லிப்பாத்துட்டோம். யாருக்கும் ஒண்ணும் புரியலை.

செடி தற்கொலை பண்ணிகிட்ட மாதிரி காணாப் போயிடுது.

பாத்தி கட்டி தண்ணீ தேங்கவிடுறோம். அகத்தியோ, செம்பையோ பயிர் பிண்றோம். குச்சிமாதிரி வர்றப்ப செடிகுறுக்குல விட்டம் கட்றோம். ஒரு ஜாண் நாலு விரக்கடை இடைவெளிவிட்டு ஒரு பதியன் நடுறோம். இதுக்கு தானம்னு பேரு.

வெய்யபடாத இருக்க, அகத்திக் கீரைய நல்லா வளர விடுறோம். ஜாஸ்தி வெயிலாவும் இல்லாம, ரொம்ப நிழலாவும் இல்லாம ஒரு பக்குவமா பயிர் வளருது.

ஆனாலும், காணாமப்போவுதே...காரணமேயில்லாம செத்துப் போவுதே...யாருக்கு எழுதினா இத கண்டு பிடிப்பாங்க.

நெல்லு பயிருக்கு எத்தனையோ விஞ்ஞானிங்க இருக்காங்க. வெத்தலைக்கு யாருமே இல்லையே...ஏன்...''

பிரசாத் குறிப்பெடுத்துக் கொண்டான். வாடிய பயிர்களை வேரொடு பிடுங்கி, பிளாஸ்டிக் பையில் போட்டு, கணபதிபட்டுக்கு அனுப்பினான்.

மண்மாதிரிகளை பாட்டிலில் போட்டு நிரப்பினான்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து முசிறிவரை ஒவ்வொரு ஊராய் ஏறி இறங்கினான்.



வேர்களை எறும்போ, பூச்சிகளோ தாக்காதிருக்க, மால்தியான் அடிமருந்து போட்டான்.

வங்கு, சுருட்டு, செவட்டை போன்ற நோய்கள் தாக்காதிருக்க, எகோலைட்ஸ் பாஸாத்திரி மருந்துகள் அடித்தான்.

அரை டிராயரும், கை பனியனுமாய் வெற்றிலைக் கொடிகளில் அலைந்தான்.

''பிரசாத், உன் ஆர்வம் என்னை திகைப்படையச் செய்தது. சந்தோஷமாகவும் இருந்தது.

தமிழ் சினிமாவில் இளைஞர்கள் காட்டும் ஆர்வத்தை விவசாயத்தில் காட்டுவதில்லை என்ற வருத்தம் எனக்குண்டு. உன்னால் அது நீங்கியது.

விவசாயத்திற்கு நீ அந்நியமாக இருந்தாலும், உன் குடும்பத்திற்கு அதோடு சம்பந்தமில்லையெனினும் நீ அதில் ஆர்வம் காட்டுவது எனக்குப் பிடித்திருக்கிறது.

உன் மாதிரிகள் வந்து சேர்ந்தன. ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். நேரே வந்து கொடிக்கால்களைப் பார்க்க ஆசை. தேதி சொல்ல முடியவில்லை. எப்படியேனும் தொடர்பு கொள்கிறேன்.

நேற்று ராகவேந்திரர் மடம் போயிருந்தேன். உனக்காகவும் பிரார்த்தனை செய்து கொண்டேன். பீமாராவ் உன்னை விசாரித்தார். நேரே சந்திப்போம்.''

இலை சுருட்டு புழுக்களை மெல்லிய கிடுக்கியில் எடுத்து பாட்டிலில் சேகரித்துக் கொண்டிருந்த ஒரு பகற்பொழுதில், கணபதிபட் இரண்டு நண்பர்களுடன் கவுண்டர் கொடிக்காலுக்கு வந்தார்.

தலைப்பாகையும், அரை டிராயருமாய் இருந்த பிரசாத்தின் முதுகுதட்டி, 'இங்கே பிரசாத்...' என்று ஆரம்பித்து நிறுத்திக் கொண்டார்.

''என்ன பிரசாத் இப்படியிருக்கே...''

''இல்லேன்னா இவங்க கத்துத்தர மாட்டாங்க சார். அதான்...அவங்க மாதிரியே வேஷம் போட்டுட்டேன். டைகட்டிகிட்டு வந்தா, மூஞ்சி திருப்பிக்கிறாங்க. அவங்களுக்கு பிடிக்கலை.''

''வெரிகுட்...நீ கெட்டிக்காரன்னு தெரியும். ஆனா, இவ்ளோ கெட்டிக்காரன்னு எதிர்ப்பார்கலை. யார் கவுண்டரு, யாரு ராமலிங்கம்...''

''இவருதான் கவுண்டரு. இவர் உண்மையான பேர் கருப்புசாமி. சினிமாவில் வரும் நடிகர் மாதிரி, இவர் தமாஷா பேசறதுனால, இவருக்கு நாங்க கவுண்டர்னு பேர் வைச்சுட்டோம்.'' ராமலிங்கம் சந்தோஷமாய் விவரிக்க, கணபதிபட் இருவருக்கும் சால்வை போர்த்தினார். இரண்டு எவர்சில்வர் குடம் கொடுத்தார். எலெக்ட்ரானிக் வாட்ச் கையில் கட்டினார்.

''இவங்க என் நண்பர்கள். வெத்தலை பத்தியாரும் கவலைப்படலைன்னு சொன்னீங்களாமே... நாங்க கவலைப்படறோம். இவங்க விவசாயப் பட்டதாரிகள். விஞ்ஞானிகள். பயோகெமிஸ்ட்ரி படிச்சவங்க.

வெற்றிலைக்கு சிறுகமணி ஆராய்ச்சி நிலையம் ஒண்ணு இருக்கே. ஏன் யாருமே இல்லைன்னு சொல்றீங்க.''

விஞ்ஞானிகள் கவுண்டரோடு கைகுலுக்கினார்கள். கொடிக்காலை சுற்றி வர ஆரம்பித்தார்கள்.

''அதென்ன உன்கையிலே...'' கணபதிபட் பிரசாத்தைப் பார்த்துக் கேட்டார்.



''நகம் சார்.''

''இல்லப்பா...கட்டைவிரல்ல ஏதோ இரும்பு மாட்டிருக்கியே...''

''இதுக்குப்பேர் நகம் சார். வெத்தலைய கையால கிள்ளக் கூடாது. அதுக்கு வலிக்கும். இரும்பாலதான் கிள்ளணும். இதை கட்டை விரல்ல மாட்டிண்டு பட்டு பட்டுன்னு அறுத்துடுவாங்க. ''அவன் மடமடவென்று வெற்றிலைகளை பறித்துக் காட்டினான்.

''கொடிக்கால் ஆளாவே மாறிட்டியா.''

''பிடிச்சிருக்கு சார்.''

''என்ன பிடிச்சிருக்கு.''

''இந்த வேலை. இந்த மனுஷாள். இந்த பூமி. இந்த தண்ணி எல்லாம் பிடிச்சிருக்கு.''

''அப்போ மெட்ராஸ் பிடிக்கலேன்னு அர்த்தமா.''

''எங்க அப்பா அம்மா இருக்காளே. எப்படி பிடிக்காம இருக்கும்.''

''அப்பா அம்மா மட்டும்தான் இருக்காளா. இன்னும் வேற யாராவது இருக்காளா.''

''தங்கை.''

''டேய் பிரசாத். யார்கிட்ட காது குத்துறே. கற்பகவல்லி இல்லியா.''

''சார், அவ எதிர் வீட்டுப் பெண். அவ்ளோதான்.''

''அந்த எதிர்வீட்டுப் பெண் ஒரு லெட்டர் கொடுத்தனுப்பிச்சிருக்கா. வேணுமா வேண்டாமா.''

''லெட்டரா...ஆச்சரியமா இருக்கு சார்.''

''என்ன ஆச்சரியம். நீ அவளை லவ் பண்ணியா.''

''கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டேன் சார். லவ்வுங்கறது ரொம்ப காஸ்ட்லி வார்த்தை. என்னால திடுக்குன்னு சொல்ல முடியல சார்.''

''இந்தா...'' அவர் கடிதம் கொடுக்க, அவர் எதிரேயே படித்தான்.

மஞ்சள் அட்சதையும், வாடிய துளசியும், சந்தனத் தூளும் பிளாஸ்டிக் கவரிலிருந்து வெளியே வந்தன. ஒரு சிறு கடிதம் மடித்து வைக்கப்பட்டிருந்தது.

'என்னுடைய, எல்லோருடைய மனோரதமும் ஈடேற ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளை பிரார்த்திக்கிறேன்,' என்று எழுதி கையெழுத்திட்டுருந்தாள்.

கடிதத்தை மெல்ல அவரிடம் காட்டினான்.

கணபதிபட் ஒரு பார்வையில் கடிதத்தைப் படித்தார்.

''லவ்தான். பக்கம்பக்கமா எழுதினாதான் லவ் லெட்டரா என்ன. பீமாராவ்தான் வாங்கிக் கொடுத்தார்.

அந்தப் பொண்ணுக்கு அந்தப் பையன் மேல விருப்பம் இருக்கும் போலிருக்கு. அவனுக்கு நல்ல சம்பளம் கூட்டிக் கொடுங்கோன்னு சொன்னார்.

எங்கிட்ட மூணுவருஷம் அக்ரிமெண்ட் போட்டுக் கறியா. இதுகூட நான் கேட்கமாட்டேன். திடுக் திடுக்குன்னு விட்டுட்டு போயிடறான். அதனால்தான் அக்கிரிமெண்ட் கேக்கறேன்.''

''நான் விட்டுட்டுப் போறவன் இல்ல சார். நன்றியோட இருப்பேன்,''



''நீ நன்றியோட இருந்தா, நான் வள்ளலா இருப்பேன்.

வெத்தலைக்கு என்ன பூச்சிக் கொல்லிவேணும்னு எனக்கு தெளிவா தெரிஞ்சுபோச்சு, நீ தொட்டியத்தையே இப்போதைக்கு உன் ஊரா வைச்சுக்க. ஒரு வீடு பார் பெரிய வீடாபாரு. வீட்லேயே ஒரு ரூம்ல ஸ்டாக் வைக் சுக்கோ. ஒரு ரூம்ல ஆபீஸ் வைச்சுக்கோ. ஹாலும், ரெண்டு மூணு ரூமும் நீ உபயோகப்படுத்திக்கோ. அல் லது மாடியும் கீழுமா பாரு. வாடகை நான் தர்றேன்.

நீயே மேனேஜர். நீயே சேல்ஸ்மேன், நீயே ப்யூன். யாராவது ஒரு சின்னப்பையனை வேலைக்கு வைச் சுக்கோ ஒருநாளைக்கு பத்து ரூபா கொடு.

காவிரிக்கரை முழுக்க நீ ஒருத்தனாகவே பாத் துக்கோ. வேலூர், பாண்டமங்கலம், பொத்தனூர் மாதிரி இடங்கள்லயும் வெத்தலை இருக்கு. அங்கே பூச்சி மருந் துக்கு ஏகப்பட்ட கடை இருக்கு. நம்ம சரக்கை இங்கே புழங்கவிடுவோம்.

இங்க இருக்கிறவங்க அங்கே போய் சொல்லட் டும். அங்கே இருக்கிறவங்க இங்கே வந்து மருந்து வாங் கட்டும்.

நீ வேலையில இறங்கிட்டேங்கிறது சந்தோஷமப இருக்கு. மூணுமாசம் பொறுத்து அந்தப் பெண்ணை கல்யாணம் பண்ணிக்கோ. டெலிபோன் வாங்கித் தர் றேன். மோட்டார் சைக்கிள் தர்றேன். பஸ்ல ஏறி அலை யாம மோட்டார் சைக்கிள்ல சுத்து. வியாபாரம் கூடா கட்டும். காரே தர்றேன்.

ஆனா, உன் வாழ்க்கை இனிமே இங்கேதான். எங்கே பூச்சி இருக்கோ, அங்கேதான் மருந்து இருக்க ணும். எங்கோ செடி இருக்கோ அங்கேதான் உரம் இருக்க ணும்.

கணபதிபட் அன்று முழுவதும் கொடிக்காலை சுற்றிச்சுற்றி பார்த்துவிட்டு பல குறிப்புகள் எடுத்துவிட்டு ஊருக்குப்போனார்.

எழுநூறுரூபாய்க்கு தொட்டியத்தில் தோட்டத்தோடு தனி வீடு கிடைத்தது.

கணபதி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் என்று போர்டு மாட்டினான். கே.பிரசாத், மேனேஜர், என்று கீழே போர்டு போட்டுக்கொண்டான். நல்ல பாயும் ஜமுக்காளமும், வாங்கிக்கொண்டான். அலுவலக உபயோகத்திற்காக பெடஸ்டல்ஃபேன் வாங்கினான்.

ஒரு சுழற்நாற்காலியும், பெரிய மேஜையும் நான்கு நாற்காலிகளும் வாங்கினான். இரும்பு பீரோ இறக்கினான்.

மின்விசிறியை முழுவதும் சுழலவிட்டு, கால் அகட்டிப் படுத்து, யோசித்தான். சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

கற்பகவல்லி. ஆறடிக்கு நாலடி ராகவேந்திரர் படம் எம்ப்ராய்டயரியில போட ஆரம்பிச்சுடு. மூலராமருக்கு பூஜை பண்றா மாதிரிபோட ஆரம்பிச்சுடு. அதை இந்த ஹால்ல மாட்டலாம். தினம் ரெண்டுபேரும் நமஸ்காரம் பண்ணலாம். தினம் அவ பேரை சொல்லிண்டிருக்லாம்.

கற்பகவல்லி. உனக்கு கிராமம் பிடிக்குமா. காவிரி பிடிக்குமா. வெத்தலைக் கொடிக்கால் பாத்திருக்கியா...

மெட்ராஸ்ல ஒண்ணுமில்ல கற்பகவல்லி, தொட்டியத்துல காத்து சுத்தமா இருக்கு. கிணத்துல பத்தடியில தண்ணி வருது. பத்து ரூபாய்க்கு நல்ல அரிசி கிடைக்கிறது.



நம்ம தோட்டத்திலேயே காய்கறி போடலாம். கீரை போடலாம்.

ஒருவேளை...உன்னால திருவல்லிக்கேணியை விட்டு வரமுடியாதோ...

மறுவாரம் பஸ் ஏறி, அம்மாவைப் பார்க்க சென்னைக்குப் போனான்.

''எனக்கு மூவாயிரத்தி ஐம்பது ரூபா சம்பளம்மா. நூறு ரூபாய்க்கு பத்து ரூபா கமிஷன். பேட்டா முப்பது ரூபா. பெட்ரோல் செலவு தனி. டெலிஃபோன் பில் வாடகை கம்பெனியே கட்டும். கற்பகவல்லி வீட்ல பேசிப் பார்க்கிறியா...கம்பல் பண்ணாதே. தொட்டியத்துக்கு வர விருப்பமான்னு கேளு.''

''அவ, விதவிதமா விதைகள் வாங்க ஆரம்பிச்சிட்டா. பூசணி, பீர்க்கன், கத்திரி, அவரை, மொச்சைன்னு தேடித்தேடி நல்ல விதைகள் வாங்க ஆரம்பிச்சுட்டா.

மடத்துக்குப் பின்னால இருக்கிற ஹால்லயே கல்யாணத்த வைச்சுக்கிறோம். ஞாயிற்றுக்கிழமை முகூர்த்தங்கிறதுனால, பக்கத்துப் பள்ளிக்கூடத்துல சமையல் பண்ணி சாப்பாடு போடறோம். மத்தியானம் பன்னிரெண்டு மணியோட எல்லாம் ஓவர்.

எனக்கு கொஞ்சம் கடைக்குப் போக வேண்டியிருக்கு. கற்பகம் வந்தா, அவகிட்ட இந்த வளையலையும், திருமாங்கல்யத்தையும் காண்பி.''

''கற்பகம் வருவாளம்மா.''

''நான்தான் வரச் சொன்னேன். மடத்துல பாத்து பேச வேண்டாம். இங்கியே வந்துடுன்னுட்டேன்.''

அம்மா வெளியே போனாள்.

அவன் காத்திருந்தான்.

அவன் கண் முன்னே வெற்றிலைக்கொடிகள் எழும்பி சுற்றிச் சுற்றி படர்ந்தன.

ஒவ்வொரு கொடியையும் வேரிலிருந்து நுனி வரை ஆராய வேண்டியிருந்தது. ஒவ்வொரு கொடியையும் ஒரு பெண்ணாய் பாவிக்க வேண்டியிருந்தது.

வாசலில் நிழலாடிற்று.

வாசற்படியருகே கற்பகம் வந்து தலை குனிந்து நின்றாள். நிமிர்ந்து பார்த்தாள்.

பீமாராவ் ஒரு விஷயம் சொல்லியனுப்பினார். மெல்லப் பேசினாள்.

''என்ன?''

''கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முன்னாடி அந்த ஹாலை நாம ரெண்டு பேரும்தான் அலம்பணுமாம்.''

''ஏன்...இப்பவே கூட நான் ரெடி. நீ ரெடியா?''

அருகே போய் கேட்டான். அவள் வெட்கப்படாமல் நிமிர்ந்து பார்த்தாள். ரெடி என்றாள்.

இரவு ஒன்பது மணிக்கு அவன் தண்ணீர் இறைத்து ஊற்ற, அவள் சரக்சரக்கென்று அலம்பிக் கொண்டிருந்தாள்.

ஆறாவது குடம் தண்ணீர் ஊற்றும்போது, பிரசாத்தின் உடம்பு முழுவதும் முடி சிலிர்த்திருந்தது. லட்சக்கணக்கான எறும்புகள் ஊறுவதுபோல் ஒரு உணர்வு தோன்றியது. அதீத சக்தி உடம்பெல்லாம் படர்ந்தது.

பிடித்தமான வேலை கிடைப்பது பாக்கியம். பிடித்தமான பெண் மனைவியாக கிடைப்பது பெரும் பாக்கியம். பிடித்தமான இடத்தில் பிடித்தமான வீடு கிடைப்பது எல்லாவற்றையும் விட அதிர்ஷ்டம்.

இவை எல்லாம் ஒருவனுக்கு கிடைத்தால் அது குருவருள். கடவுள் கிருபை.

தனக்கு ஏன் இது கிடைத்தது என்று பிரசாத்திற்குத் தெரியவில்லை.

ஒரு வெற்றிலைக் கொடி தளதளவென்று வளர்வதற்கும், அடுத்த வெற்றிலைக் கொடி துவண்டு போவதற்கும் இதுவரை காரணம் கண்டு பிடிக்கப்படவேயில்லை.

**முற்றும்**